கல்கி

KALKI 17.11.2002
ரூ. 6.00



WEIGHT REDUCTION(உடல் பருமன்) for LADIES & GENTS

- **Up to 10 - 14 kgs. in just 60 days** • No crash diet programme!
- No side effects!!! • Well planned diet according to your taste
- Natural therapies after thorough examination by our Doctors

ASTHMA - ஆஸ்துமா

1. Dyspnea *(மூச்சுத் திணறல்)* **2. Respiratory difficulties** *(மேல்மூச்சு வாங்குதல்)*
3. Dry cough *(வறட்டு இருமல்)* **4. Cough with sputum** *(சளியுடன் கூடிய இருமல்)*
5. Running Nose *(மூக்கில் நீர் வழிதல்)* **6. Nasal Block** *(மூக்கடைப்பு)*

எங்கள் மகள் சிந்துஜா (வயது 11) மகன் கார்த்திக் (வயது 8) ஆகிய இருவரும் ஆஸ்துமா பிரச்னையில், தூங்க கூட முடியாமல் கஷ்டப்பட்டார்கள். எவ்வளவோ ஆங்கில மருந்துகள் சாப்பிட்டும் பயன் இல்லை. அடையார் நேச்சர் க்யூர் சென்டர் வந்து இயற்கை சிகிச்சை எடுத்த பிறகு முழுவதும் குணம் அடைந்தார்கள். அங்குள்ள அனைவருக்கும் எங்களது நன்றி.

Mr. & Mrs. G.K. Ganesan
49/2A, Suppulakshmi Apts. Bheemasena Garden St., Mylapore, Chennai - 4.

ARTHRITIS - மூட்டுவலி

* கை, கால்களில் மூட்டு வீக்கமும், வலியும். * கை, கால் விரல் மூட்டுகளில் வீக்கமும் வலியும். * கழுத்து வலி (Cervical Spondylitis) * நடுமுதுகின் கீழ்பகுதியில் வலி (Lumbar vertebra and Sacral Joint area) * இடுப்பு எலும்பும் (Pelvic Bone) தொடை எலும்பு தலையும் (Femoral Head) சேருமிடம். * குதிகால் இணைப்புகளில் வலி. * குதிகால்களில் எலும்பு வளர்ந்து நடக்க முடியாமல் வலி. (Calcaneal Spur) முதலியவை பல ஆண்டுகளாக இருந்தாலும் ஆங்கில மருத்துவருடைய ஆலோசனையின்படி வித்தியாசமான இயற்கை வைத்திய முறையில், பக்கவிளைவுகள் இல்லாமல் நலம்பெற செய்கின்றோம். இந்தியா மற்றும் வெளிநாடுகளில் இருந்தும் வியாதியஸ்தர்கள் வருகிறார்கள்.

Dear Doctor,

Having failed at the door steps of Ayurvedic, Allopathic and Homeopathy I was mentally dispirited and depressed over the sufferings of my

1. Osteo Arthritis, 2. Rheumatoid Arthritis, 3. Ankylosing Spondylitis, 4. Gout

I happen to meet Director S. Purushothaman at his Hospital who with his team of Doctors thoroughly checked, advised the course of treatment required and more patiently gave assurance that I will come out of the problems soon.

What a delight it was! That after undergoing the treatment (within a week) gave me miraculous relief in such a short period. Six to 8 years old malady cured in a week which is CENT PERCENT TRUE. I will be failing in my duty if I do not express my gratitude from my bottom of my heart to **Director S. Purushothaman**, and other Doctors and their able assistants for implementing the treatment efficiently and cheerfully.

May God give them longevity to serve the "sufferers" like me.

Mrs. Kanchana Prabha, W/o Mr.S. Gopal, SDE(A),
Bharat Sanchar Nigam Ltd., (Govt. of India) 4/20, Easwari Nagar, Tambaram (E), Chennai - 59

அடையார் நேச்சர் கியூர் சென்டர்

ADYAR NATURE CURE CENTER™

Regd. Hospital

No. 6, SECOND CROSS STREET, KASTURBHA NAGAR, ADYAR, CHENNAI - 20.
Phone:4413399, 4402470. Tele Fax: 044-4916650 (காந்திநகர் பஸ்டெப்போ எதிரில்)
www.adyarnaturecure.com E-mail: adyarnaturecure@yahoo.com,

குறிப்பு: பிராமணர்களால் தயாரிக்கப்பட்ட சைவ உணவு வசதி மட்டும் உண்டு.
சாதா, A/c தங்கும் அறைகள் கிடைக்கும். முன்பதிவு அவசியம்.



ஓரிரவு மட்டுமே!

பாப் இசைச் சக்கரவர்த்தி, எல்டன் ஜான், இந்தியா வருவது இதுவே முதல் தடவை என்பதால், பெங்களூரே குதூகலமாய்க் குலுங்கியது. 'ஒன் நைட் ஒன்லி' என்ற ஓரிரவு கச்சேரிக்காக, இருபது பேர் கொண்ட இசைக்குழுவுடன் தனி ஜெட்டில் வந்து இறங்கியபோது, கன்னத்தில் போட்டுக் கொண்டார்கள் விசிறிகள்.

குமார மங்கலம் பிர்லா, ஸ்மிதா தாக்கரே, விஜய் மல்லய்யா, கிரண் மஜும்தார், ஜாக்கி ஷராஃப் என மேல்தட்டு மக்கள் அத்தனை பேரும் ஆஜர். எல்டனும் ஏமாற்றவில்லை.

நீல நிற சூட்டில் ஸ்டைல் மூக்குக் கண்ணாடி அணிந்து உருகி உருகிப் பாட, விசிறிகளும் உருகி, அழுது, ஆர்ப்பரித்து, இசைவானில் பறந்தனர். இரண்டரை மணி இசைக் கச்சேரியில், எல்டன்ஜான் பாடிய பாடல்கள் மொத்தம் இருபத்தெட்டு. அத்தனையும் தேன் சொட்டு!

'நிகிதா', Sorry seems to be the hardest word , Some one saved', என எல்டன் பாடப் பாட மெய் மறந்தது கூட்டம். Sacrifice பாடியபோது, பொங்கிய விழிநீரைத் துடைக்க மறந்தவர்கள் ஏராளம். பிறகு வந்தது ரசிகர்கள் மிகவும் எதிர்பார்த்த 'Candle in the wind' பாடல். டயானா இறந்தபோது பாடிய இரங்கற்பா. கடைசியாக, 'லயன்கிங்' படத்தில் தாமே எழுதி, பாடிய 'சர்க்கிள் ஆஃப் லைஃப்' பாடி மங்களம் பாடினார்.

மேடையின் ஒலி ஒளி அமைப்பும் பிரமாதம். மும்பையிலிருந்து ராஜர் டிரெகோ என்ற ஒளியமைப்புப் புலி இதற்கெனப் பறந்து வந்ததாம். பார்கோ புரொஜக்டர்கள் மூலமாகத் திரையில் எல்டனின் உருவம் துல்லியமாகத் தெரிந்ததால், கடைசி வரிசையில் இருந்தவருக்கும் எல்டனை மிக அருகில் பார்த்த உணர்வு ஏற்பட்டது. கடைசி வரிசை டிக்கெட்... அதிகமில்லை ஜென்டில்மேன், ஆயிரம் ரூபாய் மட்டுமே!

- லதா சேகர்

புகைப்பட உதவி: டி.என்.ஏ. நெட்வர்க்ஸ்

கல்கி இன்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com
ஈ மெயில் முகவரிகள் : எடிடோரியல் : kalki@kalkiweekly.com
சந்தா : subscription@kalkiweekly.com பிற தகவல்கள் : info@kalkiweekly.com



• முருகன்


ரோட்டோர

சென்னைப் பட்டணத்தில் ஒரு சௌகரியம்! ஐந்நூறு ரூபாய்க்கு 'மால்குடி டேஸி'ல் பூஃபேயும் சாப்பிடலாம், ரோட்டோரம் நின்று இரண்டு ரூபாய்க்கு ஏதாவது வாங்கியும் வயிற்றை நிரப்பிக் கொள்ளலாம். ஏழை எளிய மக்களுக்கு, ருசி மிக்க ஐட்டங்களைத் தரும் சில சுவைஞர்களைப் பேட்டி கண்டபோது...

நெல்லைப் பழரசம்: ஐஸ்கட்டி மிதக்க, பெரிய தம்ளர் நிறைய, வழிய வழிய ஆரஞ்சு நிறப் பழரசம் தருகிறார் முருகன். நீண்ட கைப்பிடி கொண்ட கரண்டியை, விபூதி, குங்குமம் பூசிய அண்டாவுக்குள் நுழைத்துக் கலக்கி, அவர் பழரசம் அள்ளுவதே ஸ்டைலாக இருக்கிறது.

"மூணு வருஷமா இந்தத் தொழில் பண்றேங்க. கோயம்பேடு போய், மலிவா கிடைக்கிற பழத்தையெல்லாம் வாங்கிட்டு வருவேன். மஞ்சன் வாழைப்பழம்தான் மெயின் ஐட்டம். அன்னாசி, கிர்ணி, ஆப்பிள்னு கலந்து எஸென்ஸ், சுகர் சிரப் சேர்த்து தயாரிக்கிறோம். நல்ல வெயில் காஞ்சா, முந்நூறு ரூபாய் கூட வருமானம் கிடைக்கும். நடந்து வர்றவங்களும், சைக்கிள்காரங்களும்தான் என்னோட கஸ்டமர்ஸ். டூ வீலர்லே வர்றவங்க எல்லாம் சாப்பிடக் கூச்சப்படுவாங்க" என்கிறார் முருகன்.

"புருட்ஸ் மிக்ஸ் ஜூஸ்' என்று தவறாக எழுதப்பட்டிருப்பதைச் சுட்டிக் காட்டினால், "ராசியான போர்டுங்க_ அதான் தினமும் அரை முழம் பூ வாங்கிப் போட்டுடறேன்" என்று சிரிக்கிறார்.


• கிருஷ்ணகுமார்

பானிபூரி: ஒரு சின்ன ஸ்டூல், ஒரு பிளாஸ்டிக் பை நிறைய உப்பலாக பூரிகள்... ஒரு பானையில் பானி... இது மட்டும்தான் முதலீடு. ஆனால் பரபரவென்று பிசினெஸ் அள்ளுகிறது.

"இது முதலாளியோட கடைங்க. நான் ஆயிரம் ரூபாய் சம்பளத்துக்கு வேலை பார்க்கிறேன். முதல்லே எல்லாம் ஸ்கூல் பசங்கதான் விரும்பிச் சாப்பிடுவாங்க. ஆனா, இப்ப, எல்லாருமே சாப்பிட ஆரம்பிச்சுட்டாங்க.... ஜீரகம், மிளகு, ஓமம், புதினா எல்லாம்

கலந்த தண்ணீர்ங்கிறதாலே, வயித்துக்கு ஒண்ணும் மிஸ்டேக் பண்ணாது. அஞ்சு பூரி இரண்டே ரூபாய். இரண்டு பிளேட் சாப்பிட்டாலே வயிறு திம்முன்னு ஆயிரும்.'' என்று சொல்லும் கிருஷ்ணகுமாருக்கு, எரிச்சலூட்டுவது வெயிலும், தூசும்தானாம். ''ஆள் நல்ல சிவப்பா இருப்பேங்க... நெதமும் வெயில்ல நின்னு கறுத்துட்டேன்'' என்கிறார்.



• பிச்சய்யா

தேங்காய்ப்பால்: இருபது வருஷமாக, தி.நகர் வெங்கட்நாராயணா சாலையில் தேங்காய்ப்பால் கடை வைத்திருக்கிறார் பிச்சய்யா. சபரிமலை சீஸனில் தேங்காய் விலை வானத்துக்கு ஏறிவிடுவதாகக் கவலைப்படுகிறார்.

''பள்ளிக்கூடப் பசங்கதாங்க இதையெல்லாம் விரும்பிச் சாப்பிடறாங்க. அதனாலே, நல்ல பதமா இனிப்பு சேர்த்து, சுத்தமா தயாரிப்பேன். வாடிக்கையா வர்ற கஸ்டமருங்க, தனியா தம்ளர் கொண்டுக்கிட்டு வருவாங்க. தேங்காய் இளசா இருந்தா, தேங்காய்ப்பால் சீக்கிரமா புளிச்சுப் போயிடும். ரொம்ப முத்தலா இருந்தா, எண்ணெய் மிதக்கும். நடுத்தரமான காயை உபயோகிச்சா, நல்ல ருசியா இருக்கும்'' என்று தொழில் ரகசியத்தைப் போட்டு உடைத்தார்.

ருசி!


கம்பங்கூழ்: அலுமினியப் பானையில் குளிர்ச்சியான கம்பங்கூழ் இருக்க, தொட்டுக்கொள்ள (கடிச்சுக்க!) எத்தனை வகைகள்! மிளகாய்த் தூளில் புரட்டிய மாங்காய் பத்தை, மோர் மிளகாய், வெங்காயம், எலுமிச்சை ஊறுகாய் என வாயில் நீர் ஊற வைக்கும் சமாசாரம்!

அசோக் நகரில் கூழ் விற்கும் சம்பத், சேலத்துக்காரராம்.

''எங்க ஊருலே கம்பங்கூழ், கேவுரு கூழ் எல்லாம் ரொம்பப் பிரபலம். அங்கே கார்லே போற பணக்காரங்ககூட கூச்சநாச்சம் பார்க்காம, சொம்பு நிறைய வாங்கிக் குடிப்பாங்க. மெட்ராஸ்லே ஏழை ஜனங்கதான் குடிக்குது. ரொம்ப சத்தான ஆகாரம். சூட்டைத் தணிச்சுடும். இந்த ஊர்க்காரங்க, கௌரவம் பார்க்கிறாங்க... பெப்ஸி குடிக்கிறாங்க'' என்றார் சோகத்துடன்.

— அனு

படங்கள்: ஸ்ரீஹரி


• சம்பத்



அண்ணாமலையில் ஆட்சி மாற்றமா?

திருவண்ணாமலையில் தொடர்ந்து கோலோச்சுபவர் அருணாசலேச்வரர் என்றாலும், மத்திய அரசு தொல் பொருள் துறை கோயில் பராமரிப்பை கையகப்படுத்த முனைவதால், நகரில் ஒரே கொந்தளிப்பு.

அருணாச்சலேச்வரர் ஆலயம் ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகள் பழைமை வாய்ந்தது. ஆறாம் நூற்றாண்டில் பல்லவர்களின் ஆட்சியின்போது மூலஸ்தானம் கட்டப்பட்டது. பின்னர் ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் சோழர்கள் ஆட்சியின் போது, விஜயாலய சோழன் மூலஸ்தானத்தைச் சுற்றி பல சன்னதிகளை ஸ்தாபித்து, கோயிலுக்கு ஓர் அமைப்பை உருவாக்கினான். திருவண்ணார் என்ற பெயர் திருவண்ணாமலை என்று மாறியது சோழர்கள் காலத்தில்தான் பதினான்காம் நூற்றாண்டில் மூன்றாம் ராஜராஜன் ஆட்சி செய்த வரை கோயிலை நன்றாகப் பராமரித்து வந்தார்கள் சோழ ஆட்சியில்.

பாண்டியர்கள் ஆதிக்கத்தில் திருவண்ணாமலை இருந்த போது ஜடாவர்மன் சுந்தர பாண்டியன், மாறவர்மன் குலசேகர பாண்டியன் ஆகிய பாண்டிய அரசர்கள் அண்ணாமலையார் கோயிலுக்குப் பல அபிவிருத்திகளைச் செய்தார்கள். பின்னர் ஹொய்சாலர்கள் காலத்தில் அவர்களின் தென்னகத் தலைநகரமாகவே இருந்தது திருவண்ணாமலை. ஹொய்சால அரசன் வல்லபனின் பெயரில் அமைந்திருப்பது வெள்ளாள கோபுரம். அப்போது

திருவண்ணாமலையை வல்லபபட்டினம் என்றும் அழைத்து வந்தார்கள். விஜயநகரப் பேரரசர் கிருஷ்ணதேவராயரால் கட்டப்பட்டதுதான் ராஜகோபுரம். கோயிலுக்குள் இருக்கும் சிவகங்கை குளத்தையும் அப்போதுதான் வெட்டினார்கள். இந்த ஆயிரத்து ஐந்நூறு ஆண்டு கால வரலாறும் கோயிலில் பல்வேறு இடங்களில் கல்வெட்டுக்களாக பதிக்கப்பட்டிருக்கின்றன. இது தவிர கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள், சொத்துக்கள், ஆகியவை பற்றியும் கோயிலில் நடத்த வேண்டிய உற்சவங்கள் பற்றிய விவரங்களும் கல்வெட்டுக்களில் உண்டு.


இத்தகைய தொன்மை வாய்ந்த பாரம்பரியக் கோயிலை மத்திய அரசின் தொல்பொருள் இலாக்கா தன் வசம் எடுத்துக் கொள்ளப் போவதை எதிர்த்துத்தான் திருவண்ணாமலையில் ஊர்வலம், போராட்டம், கதவடைப்பு என்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஏன் இந்த எதிர்ப்பு?

"இந்தக் கோயில் 'வாழும்' கோயில். தினசரி ஆயிரக்கணக்கானவர்களும், பௌர்ணமி சமயங்களில் லட்சக்கணக்கானவர்களும் இங்கு வருகிறார்கள். இந்தக் கோயில் புராதனமாக இருக்கலாம். ஆனால் காட்சிப் பொருளல்ல. மக்கள் நம்பிக்கையோடு தொடர்புள்ள வழிபாட்டுத்தலம். மற்றொரு முக்கிய விஷயம், இந்த நகரின் பொருளாதார வளர்ச்சி என்பது கோயிலுடன் தொடர்புடைய ஒன்று. மத்திய தொல்பொருள் இலாகாவால் எடுக்கப்பட்டு, உலகப் பாரம்பரிய சின்னங்களில் (world heritage monument) ஒன்றாக இது அறிவிக்கப்படுமானால், கோயிலை ஒட்டி மட்டுமல்ல, நகரின் வளர்ச்சி தொடர்புடைய எல்லாவற்றுக்கும் மத்திய அரசின் அனுமதிக்கு நாட வேண்டியதாக இருக்கும்" என்கிறார் திருவண்ணாமலை நகராட்சித் தலைவர் ஸ்ரீதர்.

இந்து அறநிலையத் துறையின் கீழ் இருக்கும் இக்கோயில், இது வரை நன்றாகவே நிர்வகிக்கப்பட்டு வருகிறது. சமீபத்தில்



• கிரிவல பக்தர்கள் கூட்டம்...



• இரா. ஸ்ரீதர்

கும்பாபிஷேகம் நடந்த போது திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அந்தச் சமயத்தில் கூட கோயிலின் புராதனப் பெருமை எந்த வகையிலும் பாதிக்கப்படவில்லை. மத்திய அரசின் பொறுப்பில் கோயில் சென்று விட்டால், காலப் போக்கில் மற்ற தொன்மை வாய்ந்த இடங்களில் செய்வது போல் நுழைவுக் கட்டணம் கூட போட்டு விடுவார்கள். ஏற்கெனவே திருவண்ணாமலையில் கந்தாச்ரமம், குகை நமச்சிவாயம் ஆகிய இடங்களைத் தொல்பொருள் இலாகா எடுத்து நிர்வகித்து வருகிறது. அங்கு எந்த பராமரிப்பும் இல்லை. மேலும் எதிர்காலத்தில் கோயிலில் மேற்கொள்ளப்படும் நித்தியானுஷ்டானங்கள் மற்றும் உற்சவங்களுக்குச் சில கட்டுப்பாடுகள் மத்திய அரசால் கொண்டு வரப்படக் கூடும். டிரஸ்டிகள் போட முடியாது. கோயிலுக்கும் உள்ளூர் மக்களுக்கும் தொடர்பில்லாமல் போய் விடும். ஏற்கெனவே தொல்பொருள் இலாகா வசம் உள்ள காஞ்சி கைலாசநாதர் கோயிலில் மூலவரை கர்ப்பக்கிரகத்துக்கு வெளியே வைத்து விட்டார்கள்'' என்று தமது எதிர்ப்பை கடுமையாகத் தெரிவிக்கிறார் ஸ்ரீதர்.

கட்சி பேத மில்லாமல் எதிர்ப்பு இருக்கிறது.

முன் அறிவிப்பு வெளியிட்டிருக்கிறது. இது விஷயத்தில் யாருக்காவது எதிர்ப்பு இருந்தால் நவம்பர் இருபதாம் தேதிக்குள் தெரிவிக்கும்படியும் தொல்பொருள் துறை கேட்டுக் கொண்டிருக்கிறது.

''மத்திய அரசின் தொல்பொருள் துறைக்கு "மதச்சார்பு" கிடையாது. புராதனச் சின்னங்களை, கட்டடங்களை காப்பாற்ற வேண்டியது எங்கள் கடமை. கோயிலின் பழமையைக் காப்பாற்றுவதே எங்கள் பராமரிப்பின் நோக்கமாக இருக்கும். பூஜை, உற்சவங்கள் எதிலும் தலையிட மாட்டோம். பராமரிப்பு, நிர்வாகம் ஆகியவற்றை மட்டும் எடுத்துக் கொள்வோம். ஏற்கெனவே தமிழ் நாட்டில் தஞ்சைப் பெரிய கோயில், கங்கை கொண்ட சோழபுரம், மற்றும் காஞ்சியில் கைலாச நாதர் கோயில் உட்பட ஏராளமான இந்து, முஸ்லிம், கிறிஸ்துவ, சமண வழி பாட்டுத் தலங்களை, தொல்பொருள் இலாக்கா நிர்வகித்து வருகிறது. எங்களிடம் பராமரிப்பில் உள்ள புராதனச் சின்னங்களில் living monument, non living monument என்று இரு பிரிவாகப் பிரித்திருக்கிறோம். மக்கள் அன்றாடம் வழிபாடு செய்யும் தலங்களில், பூஜை மற்றும் அனுஷ்டானங்களில் எந்த விதத்திலும் தலையிடுவதில்லை. உதாரணமாகச் சொல்வதென்றால், தஞ்சைப் பெரிய கோயிலின் புராதனத்தையும், பாரம்பரியத்தையும் பராமரிக்க கோடிக் கணக்கில் செலவழித்திருக்கிறோம். இப்போது சனி பிரதோஷத்தில்

சுதந்திரம் பெற்று இத்தனை ஆண்டு காலத்துக்குப் பிறகு தொல்பொருள் இலாக்காவுக்குத் திருவண்ணாமலை கோயிலைத் தனது ஆளுகைக்குள் கொண்டுவர வேண்டும் என்ற அவசியம் ஏற்பட்டது எப்படி? ஆறு மாதங்களுக்கு முன்னர் மத்திய சுற்றுலா வளர்ச்சித்துறை அமைச்சர் ஜெக்மோகன் திருவண்ணாமலைக்கு வந்தார். கோயிலின் புராதனப் பெருமையைக் கேட்டறிந்த அவர் இதைப் பாரம்பரியச் சின்னமாக அறிவித்து விட்டால், யுனெஸ்கோ அமைப்பிடமிருந்து நிதியுதவி பெற்று நன்றாக நிர்வகிக்கலாமே'' என்ற கருத்தை வெளியிட்டார். அதனைத் தொடர்ந்துதான் இப்போது மத்திய அரசு, கோயிலை எடுத்துக் கொள்ளப் போவதாக



''கற்றது கையளவு கல்லாதது பையளவுனு சொல்றாரே... யார் அது?''
''பிக்பாக்கெட் திருடனாம்!''

— அம்பை தேவா

அங்குள்ள பெரிய நந்திக்கு பால் அபிஷேகம் கூட செய்கிறார்கள்; நாங்கள் அதை ஆட்சேபிக்கவில்லை. கங்கை கொண்ட சோழபுரத்தில் இடிந்து போய்க் கிடந்த "மகா துவாரா" என்ற பெரிய வாசலை நாங்கள் பழம் பெருமை மாறாமல் மீண்டும் நிர்மாணித்தோம். World heritage monument என்று திருவண்ணாமலை கோயில் எதிர்காலத்தில் அறிவிக்கப்படுமானால் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும். இதனால் நகரின் பொருளாதார வளர்ச்சி மேம்படும். இது தவிர நகரத்தின் வளர்ச்சிக்கும் நிதியுதவி கிடைக்கும்" என்று நம்பிக்கையோடு சொல்கிறார் சென்னை வட்ட தொல்பொருள் துறை கண்காணிப்பாளர் கே.டி. நரஸிம்மன். நிதிவசதிக்கேற்ப படிப்படியாக, தனது செயல்பாடுகளை விஸ்தரித்து விடுகிறதாம் தொல்பொருள் துறை.

"கோயிலின் பழம் பெருமையைத் தொடர்ந்து நிலைநாட்ட, மத்திய அரசின் தொல்பொருள் துறை எடுத்து நிர்வகிக்க வேண்டும்" என்கிறார் அண்ணாமலை பக்தரான சங்கர். "இப்போது கிரிவலப் பெருமை காரணமாக லட்சக்கணக்கானவர்கள் திருவண்ணாமலைக்கு வருகிறார்கள். ஆனால் இந்து அறநிலையத்துறை உண்டியல் வசூலில் குறியாய் இருக்கிறதே தவிர, கோயில் பராமரிப்பைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. கோயிலில் உள்ள குளங்கள் பாசிபடிந்திருப்பதால் வருடத்திற்கு நான்கு பேர் குளத்தில் மூழ்கி இறக்கிறார்கள். பராமரிப்பை நன்றாக மேற்கொள்ள சில கட்டுப்பாடுகள் தேவை. தொல்பொருள் துறைக்குக் கடும் எதிர்ப்பு வரக் காரணம், அந்த நகரத்தில் உள்ள வர்த்தகப் பிரமுகர்கள்தான். தொல்பொருள் துறை கோயிலை எடுத்துக் கொண்டால், அதைச் சுற்றி முந்நூறு மீட்டர் சுற்றளவுக்கு வியாபார அபிவிருத்திகளைச் செய்ய மத்திய அரசின் அனுமதி பெற வேண்டும். ஹோட்டல், கடைகள் என்று போடுவதற்கு எத்தனித்துக் கொண்டிருக்கும் வியாபார பிரமுகர்களுக்குப் பெரிய தலைவலியாகப் போய்விடும். இது தவிர கோயில் "பராமரிப்பு" என்ற பெயரில் அதிகாரிகள் அடிக்கும் கொள்ளையும் தடுக்கப்படும். எனவே ஒட்டு மொத்த எதிர்ப்புகளின் பின்னணி என்ன வென்பது உங்களுக்கு இப்போது விளங்குமே" என்கிறார் சங்கர்.

மத்திய அரசின் நடவடிக்கைக்கு, எதிர்ப்பு வலுத்து வருகிறது. தமிழக அரசும் தன் பங்குக்கு ஆட்சேபித்திருக்கிறது. ஆனால் இந்த எதிர்ப்பு, பிரச்னையை ஒட்டியது என்பதை விட, தமிழக அரசைக் கலக்காமல் மத்திய அரசு செயல்படுவதால் ஏற்பட்ட எரிச்சலில் தான் என்று சொல்கிறார்கள். இந்த நிலையில் மத்திய அரசு தன் முயற்சியை கைவிட்டுவிடும் என்கிறார்கள்.

— ப்ரியன்

படம் : ராஜன்

"ராகினி! என்கிட்டே காரும் ஃப்ளாட்டும் இருக்குன்னுதானே என்னை நீ காதலிக்கிறே?"

"ச்சே...ச்சே... உங்ககிட்டே ஏரோப்ளேனும் பங்களாவும் இருந்தாலும் உங்களைத் தான் காதலிப்பேன்..."

— தஞ்சை தாமு



"வலது கால்ல வலி தாங்க முடியலே டாக்டர்."

"வயசாயிடுச்சுல்லே."

"இடது காலுக்கும் அதே வயசுதானே டாக்டர். அது வலிக்க மாட்டேங்குதே."


— ஜோசப் காமராஜ்



சர்வதேச

உலகின் பார்வையை மட்டுமல்ல, செவிகளையும் இந்திய தேசத்தின் பக்கமாய்த் திசை திருப்பியிருக்கிறார். கிரிக்கெட்டுக்கு சச்சின், சதுரங்க விளையாட்டுக்கு விஸ்வநாதன் ஆனந்த் போல இவரும் இப்போது சர்வதேச சாம்பியன் ஏ.ஆர். ரஹ்மான். "வந்தே..... மாதரம்ம்ம்.." எல்லாரும் ஒருமுறை ஜோரா பாடுங்க!

பிரிட்டனில் வசிக்கும் ஆசியர்களில், நடப்பாண்டு அதிக வருவாய் ஈட்டிய முதல் பத்துப் பேரில் ரஹ்மானுக்கு ஆறாவது இடம். வைர வியாபாரிகளும், பிரிட்டனில் தோலாடை விற்கும் தொழிலதிபர்களும் இடம் பிடித்து வந்த இந்தப் பட்டியலில், முதன்முறையாக ஒரு தமிழ் இசைக் கலைஞனின் பெயர். இதை சாத்தியப்படுத்தியது 'பாம்பே ட்ரீம்ஸ்' இசை ஆல்பம்.





சிம்பொனிக்கு சிம்மாசனம் தருகிற பிரிட்டனில் மட்டுமல்ல... அகில இசை உலகிலும் ஆண்ட்ரு லாயிட் வெப்பர் வடிக்கும் மேற்கத்திய இசைக்கு மரியாதையும் வரவேற்பும் உண்டு. அத்தனை பிரபலமான லாயிட் வெப்பர் தமது 'பாம்பே ட்ரீம்ஸ்' இசை நாடகத்துக்கு ஏ.ஆர். ரஹ்மான்தான் இசையமைக்க வேண்டும் என்று அடம் பிடித்ததன் விளைவாக ரஹ்மான் இப்போது உலக ரசிகர்களின் உள்ளங்களில் இடம் பிடித்திருக்கிறார். 'பாண்டிட் க்வீன்' மூலம் இந்திய சினிமாவை சர்வதேச திரைப்பட விழாக்களில் கௌரவப்படுத்திய இயக்குனர் சேகர் கபூர், லாயிட் வெப்பரின் விருப்பத்தைச் சொன்னபோது நம்பவேயில்லையாம் ரஹ்மான். அதன் பிறகு வெப்பரிடமிருந்து நேரடி அழைப்பு வந்த பிறகு லண்டனுக்கு தற்காலிகமாகப் புலம்பெயர்ந்த ரஹ்மான்... அங்கே 'பாம்பே ட்ரீம்ஸ்' நாடகத்துக்கு இசையமைக்க எடுத்துக்கொண்ட ஆண்டுகள் இரண்டு.

'ஷக்கலக்க பேபி'யையும், 'சைய சைய சையா'வையும் கலந்து கட்டி, கலக்கிய கலக்கலில் இசை நாடகம் ஏக ஹிட். நாடகம் முடிந்ததும், "இவர்தான் ரஹ்மான்" என்று

மேடையில் வெப்பர் அறிமுகப்படுத்தியதும், ரசிகர்கள் எழுந்து நின்று ஐந்து நிமிட நேரம் தொடர்ந்து கரவொலி எழுப்பியதை லண்டனின் 'சன்டே டைம்ஸ்' கட்டம் கட்டியிருந்தது. 'பாம்பே ட்ரீம்ஸ்' ஆல்பம் விற்பனை வாயிலாக மட்டும் ரஹ்மான் ஈட்டிய வருவாய் பத்து கோடிக்கும் அதிகம் என்கின்றன செய்திகள். இசையில் புயலாகவும், இயல்பில் தென்றலாகவும் வலம் வருகிற

சிம்மாசனம்!



ரஹ்மானை, இந்த ஆண்டு அதிகம் பேச வைத்தது 'பாம்பே ட்ரீம்ஸ்' என்றாலும், அவர் இசையமைத்து நடித்திருக்கும் ஏர்டெல் விளம்பரம் இன்னும் பரபரப்பை உண்டு பண்ணியிருக்கிறது.

பிரபல ஹீரோக்களுக்கு இணையான 'பிராண்ட் அம்பாஸிடர்'ராக அடையாளம் கண்டுகொண்டு அவரைத் தங்கள் விளம்பரத்தில் வளைத்துப் போட்டதன் விளைவாக, நம்பர் ஒன் இமேஜ் வைத்திருந்த போட்டி செல்ஃபோன் நிறுவனங்கள் நடுங்கிப் போய் இருக்கின்றன. தவிர, ஏர்டெல் நிறுவனத்தின் இணையதளத்தில், ரஹ்மான் கம்போஸ் செய்த, ஆறு புதிய செல்ஃபோன் அழைப்பிசை மாதிரிகளை வைத்திருக்கிறார்கள். ஏர்டெல் சந்தாதாரர்கள் எல்லோரும் இந்த மாதிரிகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றதும், கலர் கலர் செல்ஃபோன்களோடு வலம் வரும் இளைஞர்கள் அந்த நிறுவனத்தை மொய்க்கத் தொடங்கி விட்டார்கள், என்கிறது ஒரு சந்தை ஆய்வு.

கடந்த ஆண்டு 'லகான்' படம் ஆஸ்காருக்குத் தெரிவு செய்யப்பட்டதில், ரஹ்மானின் பின்னணி இசைக்கு பெரும்பங்கு இருப்பதாக ஹாலிவுட்டிலேயே பேசப்பட்டது. உலகெங்கும் தீவிரவாதம் தலைதூக்கிவரும் நேரத்தில் 'ரோஜா' படம் ஆங்கிலத்தில் மொழி மாற்றம் செய்யப்பட்டு விரைவில் உலகெங்கிலும் வெளியிடப்படுவதால், ரஹ்மானின் இசை மீண்டும் மீண்டும் இந்தியாவுக்கு வெளியே பேசப்படும் என்பது உறுதியாகிவிட்டது. அடுத்த ஆண்டு மனோஜ் நைட் ஷியாமளனிடமிருந்து கண்டிப்பாக அழைப்பு வரும் என்கிறார்கள், ரஹ்மானின் ஸ்டுடியோவுக்குள் வலம் வரும் இசைக் கலைஞர்கள். கிட்டத்தட்ட லண்டன் வாசியாகி விட்ட ரஹ்மான், ஷியாமளனை ஏற்கெனவே இரண்டு முறை சந்தித்து விட்டார் என்கிறார்கள். ரஹ்மான் ஹாலிவுட்டிற்குச் செல்வது இந்தியர்கள் எல்லோருக்கும் மாபெரும் கௌரவம். ஆனால் அவர் அங்கேயே தங்கிவிடக் கூடாதே என்று தவிப்போடு பிரார்த்திக்கிறார்கள் அவரது ரசிகர்கள்.

விளம்பர ஜிங்கிள்களில் தமது இசைப் பயணத்தைத் தொடங்கிய ரஹ்மானின் இத்தனை அபார வளர்ச்சிக்குக் காரணம்?!... ரசிகர்களே சொல்கிறார்கள்:

''குவான்டிட்டியைக் குறைத்து,

குவாலிட்டியை அதிகப்படுத்தியவர்''; "நாட்டுப்புற இசையை மேற்கத்திய இசையோடு கலந்து கொடுத்தவர் இளையராஜா என்றால், மேற்கத்திய இசையை நாட்டுப்புற இசைபோல மாற்றித் தருபவர் ரஹ்மான்"; "பல்வேறு இசைகளைக் கலவையாகத் தருவதில் கில்லாடி"– இவையெல்லாம் துல்லியமான கணிப்புகள் என்பதுபோல, இசைக் கலை குறித்து இப்படிச் சொல்கிறார் ரஹ்மான்:

"கலாசாரங்கள் பலவாறாக இருக்கலாம். ஆனால் இசையில் ஒரு பொதுத்தன்மை இருக்கிறது... அதுதான் மொழி கடந்து ரசிகர்களை ஈர்க்கிறது."

இசை பற்றி அதிகம் பேசாமல் தமது இசை மூலம் பேசும் ரஹ்மானிடம், தமிழ்ப் படங்களுக்கு இசை வாங்குவது குதிரைக் கொம்பாக இருக்கிறது என்பதுதான் இப்போதைய கோலிவுட்டின் குற்றச்சாட்டு. என்றாலும் ஷங்கர், கதிர், ராஜீவ்மேனன் போன்ற தமது தோழர்களுக்கு, இசை தர எந்தத் தயக்கமும் காட்டுவதில்லை ரஹ்மான். தற்போது கதிரின் 'காதல் வைரஸ்' படத்துக்குப் பின்னணி இசை சேர்ப்பில் பிஸியாக இருந்து வரும் இவர், மற்றொரு பக்கம் சர்வதேச ஆல்பத்திற்கான கம்போஸிங் பணியிலும் தீவிரமாக இருப்பதாகச் சொல்கிறார்கள். ரஹ்மானின் இசை வீச்சைப் புரிந்து கொண்ட பாலிவுட் ஆடியோ உலகினர், அவர் இசையமைத்த தமிழ் ஆடியோ படங்களின் உரிமையைப் பெற்று, மியூசிக் வீடியோவாக வெளியிட, ரஹ்மான் ஸ்டூடியோவில் தவம் கிடக்கிறார்கள், என்கிற தகவலும் கிடைக்கிறது.


இதில் 'காதல் வைரஸ்' படத்தின் இயக்குனர் கதிர் கொஞ்சம் புத்திசாலித்தனமாகச் செயல்பட்டிருக்கிறார். படத்தில் இடம் பெற்றுள்ள 'காதல் வைரஸ் எனைத் தாக்கியதோ' பாடலின் காட்சிகளுக்கு வித விதமான வண்ண டோன்களைக் கொடுத்து, தனி மியூசிக் வீடியோவாகவும் வெளியிட்டு "பாடல் ஒன்று, படம் இரண்டு" என்று புரட்சிப் பண்ணப் போகிறாராம்.

மற்றொரு பக்கம் பாலிவுட் அண்டர் வேல்டு ஆடியோ மாபியாவைச் சேர்ந்த பண முதலைகள், ரஹ்மானின் வெற்றியைக் கண்டு பொறுக்க முடியாமல் ஒரு திகில் ஆபரேஷனில் இறங்கியிருப்பதாகத் தகவல் கசிகிறது.

பினாமிகள் மூலம் ரஹ்மானின் ஹிந்திப் பட ஆடியோ உரிமைகளைப் பெற்றுக் கொண்டு, காஸட்டுகளைச் சரிவர மார்க்கெட் செய்யாமல், ரஹ்மானின் இசை விற்கவில்லை என்று களங்கம் கற்பித்து வருகிறார்களாம். இதற்கு நேர்மாறாக, "படம் தோல்வி அடையலாம், ரஹ்மானின் இசை தோற்றதில்லை" என்பது ரசிகர்களின் தீர்ப்பாக இருந்து வருகிறது.

— ஜெய்

வண்ணப்படங்கள் : யோகா



'' 'உங்க ஆபீஸ் மேனேஜர் ஒரு தௌசன்ட் வாலா'ன்னு சொல்றீங்களே! கோபத்துல பட்...பட்...டுன்னு வெடிப்பாரா?''

''இல்லே! ஆயிரம் ரூபாய்க்குக் குறைஞ்ச லஞ்சம் வாங்க மாட்டார்!''

— கு. அருணாசலம்

''தூங்காம வேலை செய்றவங்களுக்கு போனஸ்ன்னு சொன்னேன் சார்! யாரும் வேணாம்னு சொல்லிட்டாங்க!''

— அ. செந்தமிழ்



மும்பை மசாலா:

சப்தமில்லாத கொண்டாட்டம்!

இந்த தீபாவளிக்கு மும்பை ஸ்பெஷல் என்ன தெரியுமா? ஆன்லைன் லாட்டரி டிக்கட்டுகள்! பல சிறிய கம்பெனிகள் தங்கள் தொழிலாளர்களுக்கு, போனஸுக்குப் பதிலாக லாட்டரி டிக்கெட்டுகளை வாரி வழங்கின! சிலர் 'மிட்டாய் பாக்ஸு'க்குப் பதிலாக, லாட்டரி டிக்கெட்டுகளை விநியோகித்தனர். யாருமே சாப்பிடாத ஸ்வீட்டுகளுக்குப் பதில் யாருக்காவது லாட்டரி விழுந்தால் அவர் செலவில் எல்லோரும் அசல் நெய்யிலே ஸ்வீட் சாப்பிடலாமே? ஐம்பது டிக்கட்டுகளுக்கு மேல் ஆர்டர் கொடுத்தால், அதை வைத்துக் கொடுக்க அழகிய கவர்கள் இனாம்! போனஸை அள்ளிக் கொடுத்தாலும் ஊழியர்களின் 'பிட்சாதிபதி' ஸ்டேட்டஸ் உயரப் போவதில்லை! இந்த வகையில், கம்பெனிக்கு ஒரு லட்சாதிபதியாவது க்யாரண்டி ஆயிற்றே?

'ஆயிற்று' என்று சொல்லவே முடியாத ஐட்டம் ஒன்று உண்டென்றால் அது 'பட்டாசு'கள்தான். தீபாவளிக்கு வாங்கி, அதை கார்த்திகை, கிறிஸ்துமஸ், நியூ இயர் என்று பொங்கல் வரை வெடித்துக் கொண்டிருப்பார்கள். அதை, இம்முறை தீபாவளி அன்றே 'விற்றாயிற்று' என்று கை விரித்து விட்டனரே கடைக்காரர்களெல்லாம்? மும்பையின் பிரதான பட்டாசு விற்பனைக் களமாகிய முகமது அலி ரோடில் எல்லாக் கடைகளிலும் 'பட்டாசு இல்லை' போர்டுதான்! அப்படி ஒரு வரலாறு காணாத ஸேல்ஸ்! சத்தம் இல்லை... சுத்தம் என்கிறீர்களா? அதுதானில்லை! 'நாய்ஸ் பொல்யூஷன்' என்று எல்லோரும் கூக்குரலிட்டதில் இம்முறை சப்தமில்லாத வாண வேடிக்கை ரகங்களுக்குத்தான் கொண்டாட்டம்!


• ஷாருக்கான்

கொண்டாட்டங்களுக்கெல்லாம்கூட இப்போது தனி சப்ளிமெண்ட் போட ஆரம்பித்து விட்டார்கள்! அட, தீபாவளி மலர்களைச் சொல்லவில்லை; அது பாட்டுக்கு மராத்தியில் ஒரு இருநூறு இதழ்கள் வருகின்றன - இருநூறு பக்க தீபாவளி மலரின் விலை அறுபது ரூபாய் - ஒவ்வொரு மராத்தியரும் குறைந்த பட்சம் ஐம்பது ரூபாய் செலவில் பற்பல இதழ்கள் படித்து விடுகின்றனர்! நாம் சொல்ல வருவது, தீபாவளி சமயத்தில் 'பர்த்டே' கொண்டாடும் ஆங்கில நாளிதழ் ஒன்று, கிட்டத்தட்ட ஒரு வார காலத்துக்கு ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம் என்று விஐபிகள் கலந்து கொள்ளும் விருந்தையும் அந்தப் புகைப்படங்களையுமே பிரசுரித்து கூத்தடிப்பது தான்! பாலிவுட் நட்சத்திரங்களையும், அரசியல் பெரும்புள்ளிகளையும், தொழிலதிபர்களையும்



• மாதுரி தீட்சித்


பார்த்துப் பார்த்து திகட்டியே விடுகிறது நமக்கு!

நமக்குத் திகட்டுவதெல்லாம் அயல் நாட்டவருக்கு இனிக்கிறதே! பாருங்களேன்... தீபாவளிக்கென்று ஷாருக்கான், இந்தோனேஷியா சென்று 'லைவ்' மேடை விருந்தளித்திருக்கிறார். டிக்கெட்டுகள் ரூ.3500 - ரூ.17,500 விலையில்! எல்லாம் பறந்து விட்டனவாம். வீட்டு வேலை செய்பவர்கள்கூட மூன்று மாத சம்பளத்தை அட்வான்சாக வாங்கிக் கொண்டு, ஷாருக் ஷோவிற்கு வந்திருக்கின்றனர். அங்கே தினமும் டீ.வி.யில் நிச்சயம் ஒரு இந்திப்படம் காட்டுவார்களாம். இந்திப் பாட்டுகளை அதே மெட்டில், ஆனால் இந்தோனேசிய மொழியில் மொழிபெயர்த்து ஒலி பரப்புவார்களாம். அதனால் ஷாருக்கின் ஹிட் பாடல்களெல்லாம் அங்கே 'ஸூப்பர் ஹிட்'டாம்! உண்மையிலேயே பாரதத்துக்கு நிறையப் பெருமை தேடித் தந்திருக்கிறார் இந்த பாலிவுட் பிள்ளை!

பிள்ளை பிறக்கப் போகும் சந்தோஷத்தில் ஒரு நட்சத்திரமும், பிறந்து விட்ட குதூகலத்தில் ஒரு நட்சத்திரமும் துள்ளிக் குதித்துக் கொண்டிருக்கிறார்கள். மாதுரிக்கு வருகின்ற ஏப்ரலில் குழந்தை பிறக்கப் போகிறது. 'இத்தனை நாள் அதை ரகசியமாக வைத்துக் கொண்டதற்குக் காரணம், யார் கண்ணும் பட்டுவிடக் கூடாதே என்பதுதானாம். என்னால் காக்க முடியவில்லை, சீக்கிரம் பிறந்தால் தேவலை' என்று துடிக்கிறார், மாமியாருடன் மும்பை வந்திருக்கும் மாதுரி! 'இதோ என் விக்கிரமாதித்தன்' என்று ஆமோதிக்கிறார் சிரிப்பழகி ரேணுகா சஹானே! புத்திமானாக இருக்க அந்தப் பெயரை வைத்திருக்கிறார்கள்! வேதாளத்துடன் வாதாடாமலிருந்தால் சரி!

சரி என்று ஒரு சாராரும், தவறு என்று மறுசாராரும் வாதிட, கடைசியில் வாஷியிலுள்ள 'ஃபாதர் ஆக்னல்' கல்விக் கூடத்தின் மீது கேஸை போட்டுவிட்டார்கள். அவர்கள் செய்த பாபம், ப்ளஸ் டூ மாணவர்களுக்கு 'Hindutva and its disastrous effects on secularism' என்ற தலைப்பில் கட்டுரை வரையச் சொன்னது! 'Disastrous' என்று இவர்கள் எப்படிச் சொல்லலாம் என்கிறார்கள்! முடிவு மாணவர்களுக்கு disastrous ஆக இல்லாதிருக்க வேண்டுமே!

- ஜெயஸ்ரீ ராஜ்






கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா
- பாரதியார்.

போலீஸ் தாக்குதலும் கமிஷன் தாக்கலும்

சென்ற ஆண்டு ஆகஸ்ட் 12ம் தேதி அன்று நடந்த தி.மு.க. பேரணியின்போது, காவல்துறை அத்துமீறி நடந்து கொள்ள வில்லை என்று அறிக்கை அளித்துள்ளது நீதிபதி பக்தவத்சலம் கமிஷன். ஆறு பேர் மரணமடைந்து, பத்திரிகையாளர்கள் காய முற்ற அச் சம்பவத்தில் காவல் துறையின் நடவடிக்கைகள் குறைந்தபட்சமானவையே, நியாயமானவையே என்று விளக்கமளித் துள்ளது.

அச் சம்பவத்தின்போது பத்திரிகையாளர் கள் தங்கள் பணியில் ஈடுபடுவது போலீஸா ரால் தடுக்கப்பட்டது; அவர்களிடமிருந்து காமெராவும் வீடியோ டேப்புகளும் பறிமுதல் செய்யப்பட்டன என்பது யாவரும் அறிந்த செய்தி. காவல்துறை தங்களைப் பணியாற்ற அனுமதிக்காததை எதிர்த்தும் அத்துறையின் வன்முறைப் பிரயோகத்தைக் கண்டித்தும் பத்திரிகையாளர்கள் சென்ற ஆண்டு



2002 நவம்பர் 17
சித்ரபானு கார்த்திகை 1
மலர் : 61
இதழ் : 16



ஆகஸ்டு 15 அன்று உண்ணாவிரதம் இருந்ததும் நினைவிருக்கும்.

இவ்வாறிருந்தும், காவல் துறையை, அதன் போக்கு குறித்து கண்டனம் செய்யாத ஓர் அறிக்கையை பக்தவத்சலம் கமிஷன் எவ்வாறு வெளியிட்டது?

இதற்கு ஓரளவு காரணமில்லாது போகவில்லை. கமிஷனின் முன் தோன்றி சாட்சி கூற ஒரு பத்திரிகையாளரும் முன்வரவில்லை. அரசு அமைத்த கமிஷனிடம் தங்களுக்கு நம்பிக்கை இல்லாததால் நீதி மன்றத்தில் தனி வழக்கு தொடுத்திருப்பதாகவும், கமிஷன் முன் தோன்றி விவரமளிக்க முடியாது என்றும் பத்திரிகையாளர் சங்கம் கூறிவிட்டது. இதன் மூலம் கமிஷன் ஒருதலைப்பட்சமான முடிவுக்கு வர வழிவகுத்து விட்டனர் பத்திரிகையாளர்கள்!

கமிஷன் அறிக்கை வெளிவரவே ஓர் ஆண்டு காலத்துக்கும் அதிகமாகியிருக்கிறது என்னும்போது, வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டு, தீர்ப்பு எந்த யுகத்தில் வெளிவருமோ தெரியாது. அக் காலகட்டத்தில் காவல்துறை அதிகாரிகள் மட்டுமின்றி அரசே கூட மாறிப் போய்விடலாம்.

அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்ட கதையாக, கமிஷனைப் புறக்கணித்ததால் ஒரு முக்கியமான சிக்கல் குறித்து தெளிவான, ஆணித்தரமான விளக்கம் கிடைக்காமல் போயிருக்கிறது.

'ஒரு கலவரத்தின்போது தங்கள் உயிருக்கும் உடைமைக்கும் ஆபத்து ஏற்படாதிருக்க வேண்டும்' என்று பத்திரிகையாளர்கள் எதிர்பார்க்கக் கூடாது என்கிறது கமிஷன் அறிக்கை. ஊர்வலம், பேரணி போன்றவற்றை எங்கிருந்து எப்படிப் படம் பிடிக்கலாம் என்று காவல்துறை முன்கூட்டியே பத்திரிகையாளர்களுக்கு அறிவுறுத்த வேண்டும் என்றும் சொல்கிறது!

இவ்விரண்டுமே பத்திரிகைச் சுதந்திரத்துக்கும் ஜனநாயக மரபுகளுக்கும் ஒவ்வாத கருத்துக்களாயிருக்கின்றன. குறிப்பாக, விஷுவல் மீடியாவின் வீச்சும் தாக்கமும் அதிகமாகியுள்ள நாளில், இக் கருத்துக்கள் ஏற்கத்தக்கதாக இல்லை.

பொது நிகழ்ச்சிகள், பேரணிகள் போன்றவற்றின்போது எதிர்பாராத நிகழ்வுகள் ஏற்பட்டால்

யின் கையைப் பிடித்து "இனி அதிக தூரம் இராது. அம்மா! சீக்கிரம் வழி முடிந்து விடும்!" என்று தைரியப்படுத்திக் கொண்டு போனார்.

ஒரு முகூர்த்த நேரத்துக்குப் பிறகு, திடீரென்று வெப்பம் மாறி ஜில்லிப்பு உணர்ச்சி ஏற்பட்டது.

"அம்மா, சிவகாமி! கோட்டைக்கு வெளியே வந்து விட்டோம். அகழியைக் கடக்கிறோம்!" என்றார். ஒருகணம் அங்கே நின்று, "குழந்தாய்! இங்கேதான் நான் வேலை செய்ததாக ஞாபகம் இருக்கிறது. அகழித் தண்ணீர் உள்ளே வராமல் வெகு சாதுரியமாக இங்கே வேலை செய்ய வேண்டியிருந்தது. அதோடு இல்லை. ஏதாவது ஆபத்துக் காலங்களில் இந்தச் சுரங்க வழியை மூடிவிடவும் இங்கேதான் உபாயம் இருக்கிறது. அதோ, பார்த்தாயா? அந்த அடையாளமிட்ட இடத்தில் ஒரு கல்லை இலேசாகப் பெயர்த்தால், அகழி ஜலம் கடகடவென்று உள்ளே புகுந்து விடும். அப்புறம் வெளியிலிருந்தும் உள்ளே போக முடியாது. உள்ளேயிருந்தும் வெளியே போக முடியாது!" என்றார்.

"நல்லவேளை! அப்படி ஏதாவது ஏற்படுவதற்கு முன்னால் நாம் வெளியே போய்விடுவோமல்லவா?" என்றாள் சிவகாமி.

அதற்குப் பிறகு இன்னும் ஒரு முகூர்த்த நேரம் வழி நடந்த பிறகு, மேலேயிருந்து வெளிச்சம் வருவதைக் கண்டார்கள்.

"ஆ! சுரங்க வழி முடிந்துவிட்டது" என்றார் ஆயனர்.

இருவரும் படிகள் வழியாக மேலே ஒளிவந்த இடத்தை நோக்கி ஏறிச் சென்றார்கள்.

அவர்கள் ஏறி வந்து நின்ற இடம் ஒரு சின்ன மலைப்பாறையில் குடைந்து அமைக்கப்பட்ட சமணர்களின் குகைக்கோயில், ஜைன தீர்த்தங்கரர்களின் பெரிய பிரதிமைகள் மூன்று அங்கே காணப்பட்டன. ஆனால் என்ன பயங்கரம்? காபாலிகர்கள் அந்தச் சமணக் குகையை ஆக்கிரமித்து விட்டதாகத் தோன்றியது. எங்கே பார்த்தாலும் மண்டை ஓடுகள் சிதறிக் கிடந்தன.

போதாததற்கு, மூன்று தீர்த்தங்கரர்களின் சிலைகளுக்கு அப்பால் நாலாவது சிலையாகக் கண்ணை மூடிக்கொண்டு ஒரு காபாலிகன் உட்கார்ந்திருந்தான். உடம்பெல்லாம் சாம்பலைப் பூசிக் கொண்டு மண்டை ஓட்டு மாலை அணிந்திருந்த அவனுடைய தோற்றம் பார்ப்பதற்கு மிகக் கோரமாயிருந்தது.

ஆனால், நல்ல வேளையாக அவன் கண்களை இறுக மூடிக் கொண்டு யோக நிஷ்டையில் உட்கார்ந்திருந்தான்.

ஆயனரும், சிவகாமியும் இரண்டாவது தடவை அவனைப் பார்க்காமல் பாறையின் படிகள் வழியாக இறங்கி விரைந்து சென்றார்கள்.

கொஞ்ச தூரம் சென்ற பிறகு, "அப்பா! இதென்ன? சமணர் குகைக் கோவிலில் காபாலிகன் வந்து உட்கார்ந்திருக்கிறானே?" என்று சிவகாமி கேட்டாள்.

"அம்மா! இந்தப் பாறை ஒரு காலத்தில் சமணப் பள்ளியாக இருந்தது. மகேந்திர பல்லவரிடம் கோபித்துக் கொண்டு சமணர்கள் - இந்த நாட்டை விட்டுப் போய் விட்டார்களல்லவா? கோட்டை முற்றுகைக்கு முன்னால் காஞ்சி நகரிலுள்ள காபாலிகர்களையெல்லாம் வெளியில் துரத்தியபோது இந்தக் குகையை அவர்கள் பிடித்துக் கொண்டார்கள் போலிருக்கிறது! அவர்களுக்கு யுத்தம் என்றால் கொண்டாட்டந்தானே! கபாலங்கள் ஏராளமாய்க் கிடைக்குமல்லவா?"

இப்படிப் பேசிக் கொண்டு ஆயனரும், சிவகாமியும் காட்டுப் பிரதேசத்தின் வழியே நடந்து போனார்கள். கொஞ்ச தூரம் போவதற்குள்ளே, அவர்களுக்கு எதிர்ப்புறத்திலிருந்து பலர் கும்பலாக வரும் பெரு முழக்கம் கேட்டது. சில நிமிஷத்துக்கெல்லாம், ஒரு பெருங் கும்பல் அவர்கள் கண் முன்னால் எதிர்ப்பட்டது. அப்படி வந்தவர்கள் வாதாபிப் படை யைச் சேர்ந்த வீரர்கள்தான்! அவர்களுக்கு மத்தியில் தூக்கிப் பிடிக்கப்பட்டிருந்த வராகக் கொடியிலிருந்து இது தெளிவாகத் தெரிந்தது.

(தொடரும்)

காதில் விழுந்தவை:


• சுலோசனா


• கோகுல இந்திரா

முட்டி மோதும் தாய்க்குலங்கள்!

● அதிமுகவில் எப்போதுமே தாய்க்குலங்களுக்குச் செல்வாக்கு அதிகம் என்பது தெரிந்ததுதானே! அதிலும் பொறுப்பிலிருக்கும் தாய்க்குலங்கள் கொஞ்சம் அதிகபட்சமாகவே சாமி ஆடுவார்கள். இப்போது ஆளுங்கட்சியாக வேறு இருப்பதால் பொறுப்பைப் பிடிக்க தாய்க்குலங்களுக்குள் கடும் போட்டி. இதைப் பயன்படுத்திக் கொண்டு game ஆடுகிறார்கள் சுலோசனா சம்பத்தும், மாநில மகளிர் அணி அமைப்பாளருமான கோகுல இந்திராவும். மாநில அமைப்பாளருக்கு 'இளையவர்' டி.டி.வி. தினகரன் பக்க பலம். சுலோசனா சம்பத் old guard. அம்மாவுக்கு மிக நெருக்கம். "நான் சொல்லும் ஆளைப் பொறுப்பில் போட வேண்டும்" என்று சுலோசனா சொல்ல, மாற்றிப் போட்டால், அந்த தாய்க்குலத்தின் மீது பெட்டிஷன் வருகிறதாம். பெட்டிஷனை விசாரிக்கும் குழுவில் சுலோசனாவும் ஒருவர். பிரச்னை வில்லங்கமாகி சிக்கல் வருகிறது.

● 1960களுக்குப் பிறகு இப்போதுதான் ரயில்வே துறை இணையமைச்சர் பொறுப்பு தமிழகத்திற்குக் கிடைத்திருக்கிறது. இதை வாய்ப்பாக எடுத்துக் கொண்டு நான்கு புதிய ரயில் தடங்களைத் தமிழகத்திற்குப் பெற்றுத் தந்திருக்கிறார் ஏ.கே. மூர்த்தி. ஆனால் அமைச்சர் சகட்டு மேனிக்கு அறிவிப்புகளை வெளியிடுவதாகச் சொல்கிறார்கள் அதிகாரிகள். "ரயில்வேயைப் பொறுத்தவரை தமிழகத்திற்கு நிதி ஒதுக்கீடு மிகக் குறைவு. இந்த நிலையில், திட்டங்களை அறிவித்து விட்டு அது எதிர்பார்த்தபடி நடக்கவில்லையென்றால் நிர்வாகத்தின் மீதுதானே பழி விழும்" என்கிறார்கள் அதிகாரிகள். முக்கியமான கோப்புகளை 'டீல்' செய்யும்போது, கட்சி மேலிடம், பா.ம.க அமைச்சர்களுக்குச் சரியான வழி காட்டுகிறதாம். இதற்காகவே மேலிடப் பிரமுகர் ஒருவர் ரகசியமாக வாரம் ஒருமுறை டில்லி சென்று வருகிறாராம்.

● 'உள்ளங்கவர் திருடன்' விவகாரத்தை திசை திருப்புவதற்காகவே, கலைஞர், வைகோவைச் சந்தித்து ஒரு பரபரப்பு ஏற்படுத்தியிருக்கிறார் என்று 'சங் பரிவார்' வட்டாரத்தில் சொல்கிறார்கள். கலைஞர் - வைகோ சந்திப்பு பற்றிய பரபரப்பை சாப்பிடுவதற்காக 'மேம்பால ஊழல்' விசாரணைக் கமிஷன் அறிக்கை பற்றிய செய்தி, தமிழக அரசால் எடுத்து விடப்பட்டிருக்கிறது என்று தி.மு.க வட்டாரத்தில் பேச்சு. கலைஞர், வைகோ சந்திப்புக்கான முக்கியக் காரணம், வைகோவை ஜாமீனில் வெளி வரச் சொல்லி வற்புறுத்தத்தான் என்கிறார்கள். சமீபத்தில் மாறன் உடல்நிலையைப் பற்றி விசாரிப்பதற்காக, கலைஞரைச் சந்தித்த வைகோவின் துணைவியார் "அவரும் ஜாமீனில் வெளி வர முடியாதென்கிறார். மத்திய அரசும் விட்டேத்தியாக இருக்கிறது. கட்சிப் பிரமுகர்களோ கண்டு கொள்ளாமல் இருக்கிறார்கள்; எனவே நீங்கள்தான் அவரிடம் பேசி - ஜாமீனில் வெளிவர முயற்சிகளை மேற்கொள்ளச் செய்ய வேண்டும்" என்று கேட்டுக் கொள்ளவேதான், இந்தச் சந்திப்பு.

- சஞ்சயன்

படம்: சௌரா



தீக்குள் விரல்!

இனப் பிரச்னையால் எரிந்து கொண்டிருந்த இலங்கைத் தீவில், சமாதானப் பேச்சுகள் தண்ணீர் தெளித்துக் கொண்டிருக்கின்றன.

இந்தச் சூழ்நிலையில் அந்நாட்டின் வரலாற்றை, வாழ்க்கை முறையை, இலக்கியத்தை, இயற்கை எழிலை என எல்லா அம்சங்களையும் ஆழமாகவும், அகலமாகவும் ஆய்ந்தறிந்து, அழகிய நூலாக்கியிருக்கிறார் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளரான சி. மகேந்திரன்.



• மகேந்திரன்

"நான் இலங்கைக்குச் சென்றிருந்தபோது ஊரடங்கு உத்தரவு நாளில் ஆபத்துகளுக்கு அஞ்சி, பத்திரப்படுத்தப்பட்டு, ஓரிடத்தில் அடைத்து வைக்கப்பட்டேன். அப்போதுதான் இப்படி ஒரு நூல் எழுதும் எண்ணம் ஏற்பட்டது.

"அழகிய அத் தீவில் வாழும் நல்ல மக்கள் இடையே ஏன் இத்தனை அவதி, முரண்பாடு, மனவேற்றுமைகள், ஆதிக்க மனப்பான்மை என்பதெல்லாம், அங்கு துயரப்படும் மக்களைக் கண்டபோது என்னுள் கேள்விகளாக எழுந்தன. அதற்கான விடையைத் தேட முனைந்தபோது கிடைத்த பலதரப்பட்ட பதில்கள், தகவல்கள் என்னைத் தகிக்க வைத்தன. அதனையே 'தீக்குள் விரலை வைத்தேன்' என்று நூலாக எழுத முனைந்தேன்'' என்கிறார் ஆசிரியர்.

ஈழத்துத் தமிழ், சிங்கள மக்களின் ஆதி வரலாற்று ஆதாரங்கள், ஆங்கிலேயர் ஆட்சியில் இலங்கையின் நிலை, மலையகத் தமிழர்களின் பிரச்னைகள், ஈழத்து மன்னரின் நாட்டுப்புற இலக்கியம் முதல் நவீன மற்றும் புலம்பெயர்ந்தவர்களின் இலக்கியம் என எதையும் தவற விட்டு விடாமல் விவரித்திருப்பது சிறப்பான முயற்சி.

"ஆதிக்கத்தையும் சுரண்டலையும் அடிப்படையாகக் கொண்ட சமுதாய அமைப்பில் சிறுபான்மையினர் அடைந்த துன்பங்கள், அதிலும் இலங்கைச் சிறுபான்மைத் தமிழர்களுக்கு ஏற்பட்ட சோகம், வரலாற்றையே அழவைத்து விடக்கூடியது" என்கிறார்.

இலங்கையின் உள்ளும் வெளியுமாக அந்நாட்டு மக்களின் துன்பம் துயரங்களை அதிகம் வெளிப்படுத்துகிறது என்றாலும், மையப் புள்ளியில் இருந்து விலகாமல் செல்கிறது ஆசிரியரின் பேனா.

நாவலைப் போல் தொடங்கி, பயணக் கட்டுரையைப் போல் தொடர்ந்து, மகாவம்சம் போன்ற ஆதி வரலாறு, இடைக்கால வரலாறு, நவீன சூழல் என்று இலங்கையின் பல பரிணாமங்களை, உள்நாட்டிலும், வெளியேறியும், அந்நாட்டு மக்கள் படும் துயரங்களை, அவர்களின் பிரச்னைகளை, ஆதாரங்களுடன் விளக்கும் 'தீக்குள் விரலை வைத்தேன்' நூல் புதுவகை இலக்கியத்திற்கு வழிவகுக்கும்.

- இரா. சுந்தரமூர்த்தி

"எனக்கு எங்கம்மாவை ரொம்பப் பிடிக்கும். எங்கம்மா ரொம்ப வித்தியாசமானவங்க. எனக்காக என்ன வேணும்னாலும் பண்ணுவாங்க. பூரி, தோசை, புலாவ், நூடுல்ஸ்... அப்படின்னு எதைக் கேட்டாலும் செஞ்சு கொடுத்துடுவாங்க. நல்லா டிரஸ் பண்ணி விடுவாங்க. விதவிதமா பின்னி விடுவாங்க. இதிலென்னன்னு கேக்கறீங்களா? எங்கம்மா ரேவதி ஒரு கையாலேயே இத்தனை வேலையும் பண்றாங்க, கிரேட்தானே?" சொல்வது பன்னிரண்டு வயது தீப்தி.

"நன்றி, இறைவா நன்றி!"



• ரேவதி

ரேவதிக்குப் பன்னிரண்டு வயதிருக்கும் போது தன்னுடைய வலது கையை இழந்தார். "சின்ன வயதிலிருந்தே எனக்கு உடம்புக்குன்னு ஒண்ணும் பெரிசா வந்ததேயில்லை. திடீர்னு ஒருநாள் வலது தோள் பட்டையில் வீக்கம். தாங்க முடியாத வலி. கான்ஸர் கட்டிகள் இருப்பதால் தோள் பட்டையிலிருந்து வலது கையை முழுதுமாக வெட்டி எடுத்துத்தான் ஆக வேண்டுமென டாக்டர்கள் சொல்லி விட்டார்கள். அப்போது அந்த வயதில் இழப்பைப் பற்றி பெரிசா ஒண்ணும் தெரியலை. "இப்ப பல் விழுந்தா இன்னொண்ணு முளைக்கிற மாதிரி, தலைமுடி கொட்டினால் திரும்பவும் வளருவது மாதிரி, கையும் திரும்பவும் வளருமில்லையா என்று கூட பெற்றோரிடம் கேட்பேன்" சொல்லி விட்டுக் கலகலவென சிரிக்கிறார் ரேவதி. நம்மைக் கவருவது ரேவதியின் அந்தச் சிரிப்புதான்.

"எனக்கு கடவுள் மீது மிகுந்த நம்பிக்கை உண்டு. இன்னிக்கு இப்படி எல்லா வேலையும் பண்ணிக்கிட்டு, ஆரோக்கியமாக வளையவருகிறேன் என்றால் அது கடவுளின் கருணைதான். அப்பா, அம்மா, தம்பியுடைய ஆதரவு எக்கச்சக்கம். அருமையான கணவர். ஆசையான பெண். ஒரு கையை எடுத்துக்கிட்ட கடவுள், அதற்குப் பதிலாகக் கொடுத்த சந்தோஷங்கள் ஏராளம். எந்தக் குறையும் வருத்தமுமில்லை எனக்கு" மனம் நெகிழச் சொல்கிறார் ரேவதி.

இவர் பணிபுரியும் 'நிம்ஹான்ஸில்' வருடா வருடம் நடக்கும் ரங்கோலிப் போட்டியில் முதல் பரிசைத் தட்டிச் செல்பவர் ரேவதிதானாம். அதுபோல், ஹிந்திப் பாட்டுப் போட்டியிலும் பரிசு ரேவதிக்கே. இவர் வீட்டில் ஏராளமாகக் குவிந்திருக்கும் சான்றிதழ்களையும் பரிசுகளையும் ரேவதியின் மகள் பெருமையுடன் காட்டுகிறாள்.

"ஐயோ, நமக்குக் கை இல்லையே என்று அழுத காலங்கள் உண்டு. ஆனால் செயற்கை உறுப்பு பொறுத்துவதற்கு முன்பு புனா போய் ஒரு மாதம் தங்கினேன். அங்கு இரண்டு கைகளையும் இழந்த ஒருவர் மிக மகிழ்ச்சியாக எல்லா வேலையும் செய்வதைப் பார்த்தேன். மனம் மாறினேன். பிறகு இடது கையால் எழுதப் பழக ஆரம்பித்தேன். வலது கையால் எழுதும்போது எப்படி முத்து முத்தாக இருந்ததோ, அப்படியே இடது கையாலும் எழுதப் பழகினேன். கல்லூரியில் நல்ல மதிப்பெண் கிடைத்தது. சுருக்கெழுத்தில் மாநில அளவில் ரேங்க் வாங்கியுள்ளேன்" தன்னடக்கத்துடன் சொல்கிறார் ரேவதி.

தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்ட ரேவதி காதல் மணம் புரிந்திருப்பது கன்னடத்துக்காரரான பார்த்தசாரதியை.

"அவர்கள் வீட்டில் முதலில் சம்மதம் சொல்லவில்லைதான். ஆனால் இவர் பிடிவாதமாக, "திருமணத்திற்குப் பிறகு இவள் கையை இழந்திருந்தால் அப்போது என்ன செய்திருப்பீர்கள்?" எனக் கேட்டுச் சம்மதம் வாங்கி விட்டார். என்னை உடல் ஊனமுற்றவளாகவே என் கணவர் நினைப்பதில்லை. இப்போது புகுந்த வீட்டிலும் எனக்கு நல்ல பெயர்" என்கிறார் பெருமையுடன்!

நேர்காணல்:
லதா சேகர்

டாக்டர் எல்.மகாதேவன் 16

இடதுகை ராசி!

இந்த வாரம் ஒரு கதை சொல்கிறேன். 'ஐதீக மாலை' என்ற நூலில் உள்ள ஆயுர்வேதக் கதை!

ஆலத்தூர் நம்பி என்றொரு வைத்ய சிரோன்மணி இருந்தார். அவரது வீட்டுக்குப் பக்கத்தில் ஒரு சிவன் கோயில் இருந்தது. தினமும் இரு வேளையும் சிவனைத் தரிசனம் செய்து வந்தார் நம்பி.

ஒருமுறை சிவன் கோயிலுக்குச் சென்று கொண்டிருந்தபோது, அரச மரத்தின் மேலிருந்த இரண்டு பறவைகள் 'கோருக்' என்று சப்தமிட்டுக் கொண்டிருந்தன. 'கோருக்' என்றால் 'நோயில்லாதவன் யார்?' என்று பொருள்.

அதற்கு நம்பி, 'ஹிதமாகவும், மிதமாகவும் ஆகாரம் உட்கொள்பவனும், சாப்பிட்டபின் சிறிது தூரம் நடப்பவனும், இடதுபக்கம் சரிந்து படுப்பவனும், மல மூத்திரங்களை அடக்கி வைக்காமல், தக்கச் சமயத்தில் கழிப்பவனும், பெண்கள் விஷயத்தில் அடக்கம் உள்ளவனும் நோயில்லாதவன்'' என்று பதில் தந்தார். அதன்பின் அந்தப் பறவைகள் மறைந்து விட்டன.

இச் சம்பவம் நடந்த இரண்டு நாட்கள் கழித்து, இரண்டு பிராம்மண குமாரர்கள் நம்பியிடம் வந்து, தாங்கள் ஆயுர்வேத சாஸ்திரம் பயில வந்துள்ளதாகக் கூறினார்கள். நம்பியும் சம்மதித்து, பாடம் கற்பிக்க ஆரம்பித்தார்.

பிராம்மண குமாரர்கள் இருவருமே, சேட்டை பண்ணுபவர்களாகவும், அதே சமயத்தில் புத்திமான்களாகவும் இருந்தனர்.

நம்பி, பாடம் சொல்லித் தரும் போது, ஏதாவது ஒரு அர்த்தம் சொன்னால் 'அப்படியானால் என்ன? இப்படியானால் என்ன?' என்று கேட்டு, அதற்கு நான்கு அர்த்தங்கள் சொல்வார்கள். அந்த அர்த்தங்கள் யாவும் புதுமையாகவும், மிகச் சரியானவையாகவும் இருக்கக் கண்டு, நம்பிக்கே ஆச்சரியமாக இருந்தது. அதனால் அவர்கள் மீது பாசம் கூடியது. தினமும் நடந்த மருத்துவ வகுப்புகளில், நம்பி கற்றுக் கொடுத்ததை விட, கற்றுக் கொண்டதே அநேகம்.

ஒருமுறை நம்பி ஊரில் இல்லாத சமயம், பிராம்மண குமாரர்கள் நம்பியின் வீட்டின் ஒரு பகுதியைத் தீ வைத்து எரித்து சாம்பலாக்கினார்கள். ஆயினும் அதைப் பற்றி நம்பி எதுவும் கேட்கவில்லை.

இன்னொரு முறை, நம்பியின் தந்தையாரின் சிரார்த்த நாளில், இரண்டு நாடோடிகள் வந்து பிச்சை கேட்டு நின்றனர். பிராம்மணக் குமாரர்கள், பிண்டத்துக்கு வைத்திருந்த சோற்றை எடுத்துக் கொடுத்து விட்டனர். குளித்து விட்டு வந்த நம்பி, விவரம் தெரிந்ததும் வேறு உணவு செய்து, சிரார்த்தம் செய்தார். இதுபற்றியும் நம்பி, எதுவும் விசாரிக்கவில்லை.

மற்றொரு முறை, பிராம்மணக் குமாரர்களோடு, ஒரு நோயாளிக்குச் சிகிச்சை தருவதற்காக, சென்று கொண்டிருந்தார். நடுவழியில், அவர்கள் நதியைக் கடக்கும் போது, பிராம்மணக் குமாரர்கள், நம்பியை ஆற்றுக்குள் தள்ளி விட்டனர். நீந்திக் கரை சேர்ந்த நம்பி, பிராம்மணக் குமாரர்களிடம் எதுவும் கேட்காமல் பயணத்தைத் தொடர்ந்தார்.

ஒருமுறை, நம்பி வீட்டில் இல்லாத போது, அவரைக் காண நோயாளி ஒருவர் வந்தார். கடுமையான தலைவலியால் அவதிப்பட்டுக் கொண்டிருந்த அவருக்காக, இரண்டு விதமான பச்சிலைகள் பறித்துக் கொண்டு வந்த பிராம்மணக் குமாரர்கள், ஓர் அறைக்குள் சென்று கதவைப் பூட்டிக் கொண்டனர். இதைக் கவனித்துக் கொண்டிருந்த நம்பியின் குழந்தைகள், அவர்கள் என்ன செய்கிறார்கள் என, கதவின் ஓட்டை வழியாகப் பார்த்தனர்.

அங்கே பிராம்மணக் குமாரர்கள்,

ஒருவிதமான பச்சிலையைக் கசக்கிப் பிழிந்து, நோயாளியின் தலையில் புரட்டினர். பின்பு தலையின் மேல் சருமத்தை அகற்றி, மண்டையோட்டில் ஒட்டிக் கொண்டிருந்த புழுக்களை அகற்றினர். பின்னர் மற்றொரு விதமான பச்சிலையை எடுத்து, பிழிந்து, தலையில் புரட்டி, மீண்டும் மேல் சருமத்தை ஒட்ட, அது நன்றாக ஒட்டிக் கொண்டது. நோயாளியின் தலைவலி, முற்றிலும் குணமாகவே, அகமகிழ்ந்த அவர், பிராம்மணக் குமாரர்களிடம் விடைபெற்றுச் சென்றார்.

வெளியே வந்த பிராம்மணக் குமாரர்கள் தங்கள் கையில் ஒட்டியிருந்த மருந்தை, ஒரு தூணில் தேய்த்துத் துடைத்தார்கள்.

வீடு திரும்பிய நம்பியிடம், அங்கே நடந்தவற்றை எல்லாம், அவரது குழந்தைகள் கூற, நம்பி அமைதியாகச் சாப்பிட உட்கார்ந்தார்.

பிராம்மணக் குமாரர்கள் நம்பியிடம் வந்து, "ஐயா, இனியும் இங்கு தங்க முடியாது. நாங்கள் போக வேண்டிய நேரம் வந்து விட்டது. இதுகாறும் தங்களிடம் படித்ததற்கு, பிரதியுபகாரமாகக் கொடுக்க எதுவுமில்லை. என்றாலும் இந்த ஏட்டை வைத்துக் கொள்ளுங்கள். ஒரு பிரச்னைக்கு எந்த நிவர்த்தியும் இல்லாத போது, இதைப் படித்தால் ஆறுதல் கிடைக்கும்" என்று சொல்லி அந்த ஏட்டைக் கொடுத்தார்கள். அப்போது நம்பி சாப்பிட்டுக் கொண்டிருந்தபடியால், இடது கையால் வாங்கினார்.

பிராம்மணக் குமாரர்கள் பிரியும் வேளை வந்த போது அவர்களிடையே நடந்த உரையாடல் :

நம்பி : அப்பா, நீங்கள் இருவரும் சாதாரண மனிதர்கள் அல்ல; நீங்கள் யார்?

பிராம்மணக் குமாரர்கள் : எங்களைப் பறவைகளோ, தேவர்களோ என நினைத்துக் கொள்ளுங்கள்.

நம்பி : இங்கு எதற்காக வந்தீர்கள்?

பிராம்மணக் குமாரர்கள் : ஆயுர்வேத சிகிச்சைக்கு, பிரசித்தியும், பல சித்தியும்,





"கோலப்பொடி தீர்ந்து போச்சுன்னு எதிர்வீட்டுக் கோமளத்துக்கிட்டே இரவல் வாங்கினது தப்பா போச்சு!"

"ஏன்?"

"ஸ்பான்சர்டு பை கோமளம்னு கோலத்துக்குக் கீழே போடச் சொல்லுறா!"

- நெல்லையப்பபுரம் செல்வன்

பிரசாரமும் கூட்டவே வந்தோம்.

நம்பி : என் வீட்டுக்கு ஏன் தீ வைத்தீர்கள்?

பிராம்மணக் குமாரர்கள் : அந்த நேரம், இந்த வீட்டுக்குத் தீயினால் கெடுதி உண்டாக வேண்டும் என்று ஒரு விதி இருந்தது. அது தீரட்டும் என்று வீட்டின் ஒரு சிறு பகுதிக்கு நாங்கள் தீ வைத்தோம்.

நம்பி : சிரார்த்த நாளில், பிண்டத்துக்கான சோற்றை எடுத்து நாடோடிகளுக்கு ஏன் தந்தீர்கள்?

பிராம்மணக் குமாரர்கள் : அவர்கள் உண்மையில் நாடோடிகள் அல்ல; அவர்கள் பித்ருக்கள். சிரார்த்த சமயம் தாண்டிப் போனதால், அந்த ரூபத்தில் வந்தார்கள். அவர்களை மகிழ்விக்கவே, அவ்வாறு செய்தோம்.

நம்பி : என்னை ஆற்றுக்குள் தள்ளி விட்டது ஏன்?

பிராம்மணக் குமாரர்கள் : அந்த நேரத்தில் கங்கா, யமுனா, சரஸ்வதி, திரிவேணி சங்கமம் உண்டாகியிருந்தது. அப்போது அங்கு குளித்தால் விசேஷம் என்பதால் அப்படிச் செய்தோம்.

இப்படிச் சொல்லிவிட்டு, அந்த இளைஞர்கள் மறைந்து விட்டார்கள். அவர்கள் பேசியதை வைத்து, தம்மிடம் சிஷ்யர்களாக வந்தவர்கள், அஸ்வினி தேவர்கள்தாம் என்பதைப் புரிந்து கொண்டார் நம்பி.

அஸ்வினி தேவர்கள் மறைந்த அந்த அரசமரத்தின் கீழ்ப்படியில், இப்பொழுதும் ஆலந்தூரில் வருடந்தோறும் பூஜை செய்கிறார்கள்.

நம்பிமார்களுக்கு இதனால்தான் சிகிச்சையில் நல்ல கைராசி உண்டானது. அஸ்வினி தேவர்கள் கையைத் தேய்த்து விட்ட தூணைச் சுரண்டி, அந்தப் பொடியை நெற்றியில் தடவினால், நாள்பட்ட தலைவலியும் உடனே பறந்து விடும்.

அஸ்வினி குமாரர்கள் கொடுத்த ஏட்டை, நம்பி வைத்தியர், இடதுகையால் வாங்கியதால், இன்றும் மக்களிடம் வைத்தியர் இடது கையால் மருந்தையோ, மருந்துச் சீட்டையோ கொடுத்தால், அதிக பலன் கிடைக்கும் என்ற நம்பிக்கை மக்களிடையே நிலவுகிறது.

கதை சொல்லியாயிற்று. விஷயத்துக்குப் போவோமா?

● 'ஆஹாரம்' என்பது சிறப்பான கவனம் தரப்பட வேண்டிய விஷயம்னு ஏற்கெனவே சொன்னேன். என்ன சாப்பிடணும், எப்படிச் சாப்பிடணும், எப்ப சாப்பிடணும் போன்ற கிரமங்கள் பற்றி இனி விரிவாகப் பார்க்கலாம்...


சாப்பிடும் உணவு வகை மட்டுமில்லை. சாப்பிடும் விதம்கூட ஆளுக்கு ஆள் மாறக் கூடியதுதான். பித்த பிரக்ருதிகளுக்கு நல்ல பசியெடுக்கும். அதுவும் தூங்கி எழுந்ததுமே 'கப...கப'னு பசிக்கும். இது போன்ற ஆசாமிகளுக்கெல்லாம், காலையிலே ஏழு மணிக்கெல்லாம் சிற்றுண்டி சாப்பிட்டாகணும்.

வாத பிரக்ருதி, சில நாள் சீக்கிரமா சாப்பிடுவான். சிலநாள் 'வேண்டாம்'னு இருப்பான். கப பிரக்ருதி காலை பத்து மணி வரை பிரேக்ஃபாஸ்ட் சாப்பிடாமல் 'ஈஸ்வரா'ன்னு இருப்பான். கப பிரக்ருதியை, பித்த பிரக்ருதி பெண் கல்யாணம் செய்துகொண்டால், அந்தோ பரிதாபம்தான்.

இரவு உணவு ரொம்ப லகுவானதாக இருக்கணும். பகலில் சாப்பிட்டதற்குப் பாதி அளவு மட்டுமே சாப்பிடணும். இரவு ஏழரை முதல் எட்டுக்குள்ளே சாப்பிட்டு முடிச்சுடணும். எண்ணெய்ப் பலகாரங்கள், தயிர் போன்றவற்றைச் சாப்பிடக் கூடாது.

சாப்பிட்ட நேரத்துக்கும், தூங்கப் போவதற்கும் இடையே, குறைந்த பட்சம் மூன்று மணி நேரமாவது இடைவெளி இருக்க வேண்டும். அதற்குப் பிறகு தூங்கப் போனால், உணவு முழுவதும் வயிற்றுப் பகுதியிலிருந்து, கீழே இறங்கியிருக்கும். டயஃபரம் நன்றாக இயங்கும். சுவாசப் பிரச்னை வராது.

(தொடரும்)



பாங்காக்

பாங்காக்கின் வடபகுதியில் உள்ள லாம்பாங்கில், யானைகளைச் சங்கீதம் வாசிக்கப் பழக்கியிருக்கிறார் ரிச்சர்டு லேர். எதிரே மூங்கில் குழாய்களை அடுக்கிவிட்டு, யானைகளின் தும்பிக்கையில் ஒரு கோலைச் செருகி விடுகிறார். வெவ்வேறு ஒலி எழுப்பும் மூங்கில்களை யானை தட்டும்போது எழும் இசை, எல்லோரையும் மயக்கி விடுகிறது. இதை ஸி-டியாக வெளியிட்ட போது எக்கச்சக்க வரவேற்பு கிடைக்கவே, இப்போது இரண்டாவது ஸி-டி தயாரிக்கிற வேலையில் இறங்கிவிட்டார் லேர். (படத்தில், யானைகள் மூங்கில் மீது தட்டவில்லையே என்று கேட்கலாம். ஒரு ஸி-டியை முடித்து யானைக்குலம் ரெஸ்ட் எடுக்கிறபோது எடுத்த படம் இது!)

நல்லவேளை, இந்த யானைகள் சென்னையில் இல்லை என்று பல சங்கீத வித்துவான்கள் நிம்மதிப் பெருமூச்சு விடலாம். 'சங்கீத கலாநிதி' பட்டத்துக்குப் போட்டிக்கு வராது இல்லையா?

ஈப்போ

"நம்ம இந்துப் பழக்க - வழக்கத்தை விட்டுரக் கூடாதுங்க!" என்று சொல்லும் சிவபாலன் - ஸ்ரீப்ரியா தம்பதியும், ராஜ்குமார் - ஸ்ரீஜெயா தம்பதியும், தங்கள் குழந்தைகளுக்குக் 'காது குத்தும் விழா'வைச் சமீபத்தில் விமரிசையாகக் கொண்டாடினார்கள்.

கடல் கடந்து போய் வருடங்கள் பல ஆனாலும், காலம் காலமாக இருந்து வரும் வழக்கத்தை விட்டுவிடக் கூடாது என்பதில் இவர்கள் குறியாக இருக்கிறார்கள்.

முதலில் வலி எடுக்காமல் இருக்க ஸ்ப்ரே செய்து, பிறகு தங்க ஊசியால் காது குத்தி, 'கடுக்கன்' போட்டு, உடனேயே, சீக்கிரம் புண்ணாகிவிடாமல் ஆற, சந்தனம் தேய்த்து விடுகிறார்களாம். சந்தனம்? ஆமாம். ஆன்ட்டி-செப்டிக்.

"காது குத்தினால் வலிப்பு எல்லாம்கூட வராதுங்க" என்கிறார் சிவபாலன். "மறக்க முடியாதபடி, பிரமாதமாக இந்தச் சடங்கை நடத்தணும்னு நினைச்சேன். அதுதான் இந்தக் காது குத்து விழா!"

இங்கே வயசானவங்களுக்கே அரசியல்வாதிங்க காது குத்தறாங்க. குத்தறதுதான் குத்தறாங்க, தங்க ஊசியால குத்தக் கூடாது?





கிளிநொச்சி

'குருகுல'த்தில் வசிக்கும் 507 குழந்தைகளில் இவர்கள் சிலர். இருபது ஆண்டுக்காலப் போரில், அநாதைகளாகிப் போனவர்கள். எல்டிடிஈயின் தமிழர் மறுவாழ்வு இயக்கம், இவர்களின் கல்விக்கும், சமூக வாழ்வுக்கும் தேவையான பணிகளைச் செய்து வருவதோடு, நிலத்தடியில் பதிக்கப்பட்டிருக்கும் கண்ணி வெடிகளை அகற்றும் பணியிலும் ஈடுபட்டிருக்கிறது.

எந்தப் போராட்டத்திலும், பெரிசுகள் தொடங்கி வைக்க, கடைசியில் அவதிப்படுவது என்னவோ சிறிசுகள்தானே? முன்பு கண்ணாறு, மாங்குளம் என்று ஒவ்வோர் இடமாக மாறி, இப்போது கிளிநொச்சிக்கு வந்திருக்கிறது 'குருகுலம்!'

கரன், ஜனிதா, சுமதி, அம்பினி எல்லோருக்கும் இதுதான் இனி வீடு. "நான் கொழும்புவில் கண் ஆபரேஷன் செய்து கொண்டேன். முதலில் கொஞ்சம் தெரிந்தது. இப்போது பார்வையே போய்விட்டது'' என்கிறாள் அம்பினி. அம்பினியைப் போல இன்னும் சிலர்...

'பாரதி இல்ல'த்தில் அநாதைப் பிள்ளைகளுக்கும், பெற்றோரில் ஒருவரை இழந்த குழந்தைகளுக்கும் முதலிடம். அதுவே புகலிடம்.

இப்போது நடக்கிற அமைதிப் பேச்சுவார்த்தை, நல்ல முடிவை எட்டுமானால், இந்தச் சிறுவர் - சிறுமியரின் எதிர்காலம் கொஞ்சமாவது ஒளி வீசக்கூடும்.

பெய்ஜிங்


பார்க்கிறதுக்குப் பூனை மாதிரி இருக்கும் நூறு புலிகளின் சிலைகளை, தெருக்களிலிருந்து அகற்றச் சொல்லிவிட்டது பெய்ஜிங் அரசு. பல சிலைகளும் தரக் குறைவாக, அசிங்கமாக இருக்கின்றனவாம்.

இந்தச் சிலைகளுக்குப் பதிலாக, தொழில்முறைச் சிற்பிகள் வடித்து, சமீபத்தில் பெய்ஜிங்கில் சர்வதேச சிற்பப் பூங்காவில் காட்சிக்கு வைத்திருக்கும் சிலைகளையே தெருக்களிலும் வைத்து விடுவது என்று முடிவு செய்திருக்கிறது அரசு. இதை எல்லாம் கவனிக்க, பெய்ஜிங் நகர சிற்ப மேம்பாடு மற்றும் நிர்வாக அலுவலகம் என்று ஒரு துறையே இருக்கிறதாம்.

இனி, பொது இடங்களில் சிலை வைப்பதற்கு முன்னால், அந்த வடிவங்களை உரிய அதிகாரிகள் பார்த்து ஆமோதித்த பிறகே, பொது இடத்தில் வைக்க முடியும் என்று சட்டத்தையே மாற்றிவிட்டார்கள். அழகே இல்லாத சிலைகளைப் பார்த்து, மக்கள் புகார் கொடுத்தால் அரசு சும்மா இருக்காது என்கிறார்கள் பெய்ஜிங் அதிகாரிகள். (அட!)

நமது சந்தேகம், நம்மூர் கண்ணகி சிலையை அகற்றச் சொன்ன ஜோதிடர், பெய்ஜிங்குக்கும் போய் செட்டில் ஆகிவிட்டாரா என்பதே!

தொகுப்பு : சாருகேசி



பாலகுமாரன் 26

ராதாகிருஷ்ணன் எதிரே உட்கார்ந்திருந்த சங்கரய்யர் மெல்ல உதடு பிரித்துப் பேச ஆரம்பித்தார். ராதாகிருஷ்ணன் கூர்மையானார்.

''உங்களுக்குப் புரியலையா? இன்னிக்குக் கார்த்தால ஒருத்தன் வந்தான். மத்திம வயசு. முரடா, உழைப்பாளியா கண்ணுக்குத் தெரிஞ்சான். 'சாமி, நான் ஹார்பர்ல வேலை செய்யறேன். அப்பப்போ ஏதாவது திருடிட்டு வந்துடுவேன். போலீஸ்காரங்க மடக்காம இருக்கறதுக்கு அவங்களுக்கும் எதுனா துட்டு கொடுத்துருவேன். திடீர்னு இதெல்லாம் வேணாம், அப்படின்னு தோணுது. ஒரு மனசு, 'வேற உனக்கு என்ன தெரியும், திருடு'ன்னு சொல்லுது. என்னைக் காப்பாத்துங்க, எந்த வழி போகணும்னு சொல்லுங்க, அப்படின்னான். அவனைத் திருடுன்னு சொல்ல முடியுமோ, திருடாதேன்னு சொல்லணும். திருடாதேங்கறதை சரியான காரண, காரியங்களை வைச்சு சொல்லணும். ஏன் திருடறான், அப்படின்னு அவன் யோசிச்சுப் பார்க்கும்போது, நான் ஏன் திருடலை அப்படின்னு யோசனை பண்ணிப் பார்த்தேன். எனக்குப் போறும். ரெண்டு இட்லி, ஒரு தோசை, ஒரு கப் காப்பி போதும். இந்த வேட்டி, இந்த இடுப்புத் துண்டு, உள்ளுக்குள்ள ஒரு அண்டர்வேர் போதும். சாதாரண டைடான் வாச் போதும். கழுத்துல ரெண்டு துளசி மாலை போதும். ஆனால், பந்தா ஆசாமிக்கு நிறைய வேண்டியிருக்கு. விதம்விதமா வேண்டியிருக்கு. ஆக, தனக்குப் போறும் அப்படின்னு நான் நினைச்சதால திருடலை. போறாது இன்னும் வேணும்னு அவன் நினைச்சதாலே திருடறான். எனக்கு இந்த எண்ணம்



போதும் என்ற எண்ணம் ஏன் ஏற்பட்டது?

இரண்டு இட்லி, ஒரு தோசைக்கு மேல கொள்ளாது. எங்கிட்ட காசு இருக்கு, அப்படின்னு காட்ட வேணும்னா இன்னொரு தோசை திங்கலாம். பூரி மசால் விழுங்கலாம். அதுக்குப் பிறகு ரொம்பத் திருப்தியாகறது. திருப்தியாறது மனசா, உடம்பா. உடம்பால் மனசா அப்படின்னு எனக்கு யோசிக்க யாரோ கத்துக் கொடுத்துட்டான்.''

"யார் கத்துக் கொடுத்தா?"

"எங்கப்பா. அப்பாவோட அதிகமா எனக்குக் கத்துக் கொடுத்தது எங்கம்மா. அம்மாவை விடவும் அதிகமா கத்துக் கொடுத்தது பல பெரியவர்கள். நல்ல புத்தகங்கள். எனக்கு ஒரு நல்ல சூழல் கிடைச்சது. அவனுக்குக் கிடைக்கலை. ஆனாலும், எதனாலோ தாக்கப்பட்டு எங்கிட்ட வந்து தொடர்ந்து திருட முடியலை. திருடணும்னு ஒரு மனசு சொல்றது, வேண்டாம்னு ஒண்ணு சொல்றது. நான் என்ன பண்ணட்டும்னு பணிவாக வந்து கேட்கறான். அதுவே பெரிய மாற்றம்.



'நல்லவேளை, வந்துட்டப்பா' அப்படின்னு ஆரம்பிச்சேன். அவனுக்கு நான் ஏதாவது பதில் சொல்லணுமோன்னோ. அடுத்த தடவை திருடினால் ரொம்ப நிச்சயமா மாட்டிப்ப. வேற எவனோ செய்த திருட்டெல்லாம் கூட உன் தலையில வந்து விழுந்திருக்கும். உனக்குக் கடுமையான தண்டனையும், அடிதடி ரகளையும் ஏற்பட்டிருக்கும். நல்ல வேளையா வந்துட்ட. வேண்டாம்ப்பா விட்டுடுன்னு சொன்னேன். திகைச்சுப் போய் என்னையே பார்த்துண்டிருந்தான்.

நான் அடிதடிக்குப் பயப்படலை சாமி அப்படின்னான். இல்லை, இல்லை இந்தத் தடவை அடிதடி தாண்டி, இன்னும் மோசமான விளைவுகளுக்கு ஆளாயிடுவ. ஆட்களை உனக்காகத் தயார் பண்ணிண்டிருக்கா. வேணா மெல்ல விசாரிச்சுப் பார்த்துட்டு, மத்தியானமா வாயேன் அப்படின்னேன். பரபரன்னு எழுந்து போனான். நான் என்னமோ மனசுல தோணினதைச் சொல்லிட்டேன், அது அங்க போனா பலிக்கணுமே, எவனும் ஒண்ணும் பண்ண முடியாதுன்னு

வரப் போறானே அப்படின்னு ஒரு பயம் இருந்தது" என்று சொல்லி விட்டு, ஒருகணம் பேச்சை நிறுத்தினார். ராதாகிருஷ்ணன், வியப்பு மேலோங்க உட்கார்ந்திருந்தார்.

"ஒரே மணி நேரத்துல திரும்பி வந்தான். தடேர்னு விழுந்தான். என்னடா ஆச்சு, ஏதாவது பயந்துட்டியான்னேன். இல்லை, நீங்க சொன்னது கரெக்ட். என்னை வந்து வெட்டிக் கூறுபோடறதுக்குப் பத்துப் பேர் கத்தியைத் தீட்டிண்டு அலையறான். இரண்டு மூணு தடவைக் கேட்டுட்டான். நான் இல்லைன்னு தெரிஞ்சவுடனே வேற இடத்துலே போய்க் கேட்டிருக்கான். இப்போ போய்க் கேட்கற போதுதான் நீ இன்னும் உயிரோட இருக்கியா சாகலையா அப்படின்னு பல பேர் கேட்டாங்க.

'நீ என்னன்னு கேட்ட?'

'என்னை அடிக்கறதுக்கு எவனாவது இருக்கானான்னு கேட்டேன்.'

'யாரைக் கேட்டே?'

'எனக்குத் தெரிஞ்சவங்களைக் கேட்டேன்.'

'அவன் என்ன சொல்றான்?'

'ஆமா... ஆமா... ஒரு நாலஞ்சு பேர் சுத்திட்டு இருக்காங்கன்னு சொன்னான்.'

'வேற யார் என்ன சொன்னா?'

'அவன் சொன்னதைக் கேட்டுக்கிட்டிருந்த இன்னொருத்தனும் சொன்னான்.'

'அவங்க உனக்கு நட்பா, பகையா?'

'சில சமயம் நட்பு. சில சமயம் பகை.'

'அவங்க உன் மேல பிரியமா, பொறாமையா?'

'யாருக்கு என் மேல பிரியம். எல்லாருக்கும் என் மேல பொறாமைதான்.'

"எனக்குப் புரிஞ்சுடுத்து. அவனுக்குப் புரியலை. அவன் திருடி சம்பாதிக்கறதைப் பொறாமைப்பட்ட சிலர், அவன் திருட்டை நிறுத்தறதுக்கு அல்லது அவனைப் பயமுறுத்தறதுக்கு அவனைக் கொல்லப் போறதா சொல்லியிருக்கா. அது உண்மையோ, பொய்யோ. ஆனால், இவன் போய் என்னை யாராவது கொல்வானான்னு கேட்டா, ஆமா. கொல்லப் போறான்னு சொல்லியிருக்கான்.

"ஏன், கொல்லக்கூடிய அளவுக்கு உன்டான தொந்தரவுகள் அவன் இதுக்கு முன்னாடி பண்ணியிருக்கான். நான் சொன்னது பலிதமாயிடுத்து.

"வேற வேலை செய்துகிட்டே இதை விட முடியாதே சாமி. கை துறுதுறுன்னு இருக்குமே. டப்டப்புனு புத்தி ப்ளான் போடுமே. இந்தப் பெட்டியை எப்படி எடுத்துக்கிட்டு போறதுன்னு அரிக்குமே. என்ன செய்யறதுன்னு கேட்டான்.

"வேற இடத்துக்கு போயிடேம்ப்பா அப்படின்னேன். மறுபடியும் ஹார்பருக்குப் போகச் சொல்றியா அப்படின்னான். அவன் மறுபடியும் 'ஹார்பருக்குத்தான்' போவான். அந்த வேலைதான் தெரியும். அப்படின்னு தோணித்து. ஏன் ஹார்பருக்குப் போகணும். திருவண்ணாமலைக்குப் போ. வெறுமனே மலையைச் சுத்திண்டிரு. ஏதோ ஒரு நேரம் உள்ளுக்குள்ள கல்லு புரண்டு உன் புத்தி மாறி நீ வேறே ஆளா வருவேன்னு சொன்னேன்.

"அவன் நல்லவேளை, என் பேச்சைக் கேட்டான். திருவண்ணாமலைக்குப் போனான். அங்க யாரைப் பார்த்தானோ. என்ன நடந்ததோ தெரியலை. முதல்ல முடியை எடுத்தான். அப்புறம் சட்டையை எடுத்து வீசினான். அப்புறம் வேட்டியை அவிழ்த்துப் போட்டு வெறும் கோமணதாரியா திரிஞ்சான். நாலு வருஷம் பிச்சை எடுத்துத்தான் சாப்பாடு. யார்கூடயும் எந்தப் பேச்சும் கிடையாது. திருவண்ணாமலை கார்த்திகை தீபத்துக்கும் போனேன். எதிரே வந்து நின்னான். அடையாளமே தெரியலை.

"சதாசிவம்... சதாசிவம்'னு சொன்னான். உள்ள எங்கயோ பொறிதட்டித்து. அடடே... ஹார்பர் ஆள் இல்லையா நீன்னு கேட்டேன். ஆமா... ஹார்பர் ஆளுதான், படகு, கரை சேர்ந்துடுத்துன்னான். எவ்வளவு அர்த்தம் அதுல. முகத்துல என்ன தெளிவு. ரத்னச் சுருக்கமா நாலு வார்த்தை பேசறான். ஒவ்வொரு வார்த்தையும் பெருசு பெருசா அர்த்தம் தரும்.

'பொல்லாப்பு சாமியை உங்களுக்குத் தெரியுமா'ன்னு கேட்கறாங்க. என்ன இது பொல்லாப்பு அப்படின்னு கேட்டேன். ஒரு பொல்லாப்புமில்லை அப்படிங்கறதை

"ஏன், நான் கடன் கேட்டப்போ இல்லைன்னு சொல்லிட்டு, குமரேசனுக்கு மட்டும் கடன் கொடுத்தே..."

"நீ சம்பளம் வாங்கித் தர்றேன்னு சொன்ன, அவன் லஞ்சம் வாங்கித் தர்றேன்னு கேட்டான். அதான் டக்குன்னு கொடுத்தேன்..."

- அ. செந்தமிழ்



திரும்பத் திரும்ப சொல்வாங்க. அதுதான் வேதமந்திரமாம். அதுதான் வாழ்க்கையாம். அந்த வார்த்தையை இரண்டு நாள் முழுக்க முழுக்க மனசுல போட்டு யோசனை பண்ணிண்டிருந்தேன். என்னென்னமோ சொல்றது அது. ஒரு பொல்லாப்புமில்லை. உங்களுக்குப் புரியுதா ராதாகிருஷ்ணன். ஒரு பொல்லாப்புமில்லை. எவரோடும், எது குறித்தும், எந்த நேரமும் ஒரு பொல்லாப்பு மில்லை. அப்படி இருக்க முடியுமா ராதா கிருஷ்ணன். ஹார்பர் திருடன் அப்படி இருக்கான். அதை இடைவிடாத சொல்றான். எவ்வளவு நன்னாயிருக்கு.

"நான் ஒண்ணும் பண்ணலையய்யா. சும்மா திருவண்ணாமலை போன்னு சொன்னேன். இவன் இப்படி மாறுவான்னு நினைச்சு சொல்லலை" நீண்ட பேச்சை புன்முறுவலோடு முடித்தார்.

"இப்படி இருக்க முடியுமா?" ஹார்பர் ரௌடி திருடன். கள்ளச் சாராய வியாபாரி. பல தடவை ஜெயிலுக்குப் போனவன். எப்படி மாறிட்டான்?

"சிலோன்ல ஒரு சித்த புருஷர் இருந்தார். அவருடைய வார்த்தை இது. அங்க பிடிச்சுண்டான். எப்படிப் பிடிச்சுண்டான். என்ன புரிஞ்சுது. அடடா... மொத்த வாழ்க்கையும் மாறிடுத்து. அவனை யார் யாரோ எத்தனையோ விதமா திருத்தப் பார்த்தா. ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர், ஒரு வக்கீல், ஒரு மடத்து ஆள் எல்லாரும் அவங்கிட்ட பேசி மாத்திப் பார்த்தாங்க. நடக்கலை. முகத்துல கரியைப் பூசிட்டுப் போயிட்டான். நான் சொன்னவுடனே மாறிடுத்து. இது என்னுடைய பலமா, இல்லை, அவனுடைய விதியா. அந்த ஆராய்ச்சியை நான் பண்றது இல்லை" என்றவர், கனிவாகப் பார்த்தார்.

"ராதாகிருஷ்ணன், இந்தப் பக்கத்து வாழ்க்கை உங்களுக்கு முடிஞ்சு போச்சு. நீங்க தெற்கு போங்கோ. உங்களுடைய ஆபீஸ் வாழ்க்கை முடிஞ்சு போச்சு. வேறே என்ன உத்தியோகம் பார்க்கலாம்னு யோசனை பண்ணுங்கோ. உங்க குடும்ப வாழ்க்கை வேற திசைக்குத் திரும்பிடுத்து. அந்தத் திசையில நடக்கறதுக்குப் பயிற்சி எடுத்துக்கோங்கோ. உங்க மனைவி ரேவதி மகாலட்சுமி. ரொம்பப் பெரிய மனசு. உங்க மேல அத்தனை அன்பு. எங்க வீட்டுக்காரர் ஒரு குழந்தை. அவரைக் கடுமையாகக் கோவிச்சுக்க வேண்டாம்னு சொன்னார். எனக்குக் கண்ல ஜலம் வந்துடுத்து. புருஷனைக் குழந்தைன்னு சொல்ற பொம்மனாட்டிகள் ரொம்பக் குறைவு. புருஷனை, குரங்கு, பிசாசு, சனியன் அப்படின்னு நிறையப் பேர் சொல்லிண்டிருக்கா. தலையைக் கொடுத்து, கழுத்தை நீட்டிட்டோமேன்னுதான் பல பேர் வருத்தப்பட்டுண்டிருக்கா. அது எனக்கொரு இன்னொரு குழந்தை அப்படின்னு சொல்ற ஒரு மனைவி இருக்காளே, பெரிய கொடுப்பினை அது.

"ரேவதியைக் கண்கலங்காம வைச்சுக்கோங்க. அவளோட இதமா பேசுங்கோ. உங்களுக்கும் ரேவதிக்கும் நான் மந்திர ஜபம் சொல்லித் தரேன். மந்திரத்தால மனசை நெறிப்படுத்தறது ஒரு தனி வழி. உங்களுக்கு அது நல்லா வரும். ஆரம்பத்துல கூர்மையா, விடாப்பிடியா, வைராக்கியமா ஈடுபட்டு ஒரு பக்குவத்துக்கு வந்துட்டோம்னா, சொடுக்கு நேரத்துல மனசு ஒண்ணா குவிய ஆரம்பிச்சுடும். குவிஞ்ச நேரத்துல மந்திரஜபம் சொன்னா எதை வேண்டிச் செய்யறோமோ, அது நிச்சயமா நடக்கும்.

"மெட்ராஸ் தெற்கே போயிண்டிருக்குய்யா. வடகோடியில உட்கார்ந்துண்டு எதுக்கு சிரமப்பட்டுண்டிருக்கீர். இந்த மெட்ராஸ் நூறு வருஷத்துக்கு முன்னாடி மயிலாப்பூர்னு வளர்ந்தது. அம்பது வருஷத்துக்கு முன்னாடி அடையார்னு பெருசாச்சு. இப்போ இன்னும் தெற்கே நகர்ந்துண்டிருக்கு. நங்கநல்லூர் தாம்பரமெல்லாம் தாண்டி இன்னும் தென் திசையில வீடுகள் வர ஆரம்பிச்சுடுத்து. இப்பவே அந்த இடத்துக்குப் போங்கோ. இருவது வருஷத்துல அந்த இடங்களெல்லாம் பிரமாதமா வந்துடும். குழந்தேளுக்கு அது ரொம்ப வசதியா இருக்கும். உன் பில்டிங் ஓனர் கொடுக்கற காகல நிலத்தை வாங்கி, அங்க வீடு கட்டி தனிமையான ஒரு சூழ்நிலையில தோட்டம் போட்டு, செடி வளர்த்து, அங்க இருக்கற சாதாரண கிராமத்து ஜனங்களோட பேசி, உன்னையும் பக்குவப்படுத்திண்டு அவாளையும் பக்குவப்படுத்தினேன்னு

காசு ஓவியம்!



பத்து வயதிலிருந்தே அஞ்சல் தலைகள் மற்றும் நாணயங்கள் சேமித்து வரும் திருச்சி கே.பி.எஸ். நாராயணனுக்கு வயது எழுபத்தியேழு. அஞ்சல்தலைகள் மற்றும் நாணயங்கள் சம்பந்தமான கண்காட்சிகளை, தனியொரு மனிதராகவே பல நகரங்களில் நடத்துகிறார்.



கண்காட்சிக்கு உரிய பழங்கால நாணயங்களில், கண்காட்சிப் பயன்பாட்டுக்கு எஞ்சிய நாணயங்களைக் கொண்டு விநாயகர், ராஜகோபுரம், சர்ச், மசூதி போன்றவற்றை வடிவமைத்துள்ளார். ஒவ்வொன்றும் இரண்டடி உயரமும், இரண்டடி அகலமும் கொண்டுள்ளன.

"உளுத்தம்பருப்பு கொண்டு ஓர் கலைஞர், விநாயகர் உருவம் செய்திருந்ததைப் பார்த்தேன். சேமிப்பு நாணயங்களைப் பயன்படுத்தி விநாயகரை வடிவமைத்தேன். அதன் பின்னர், மத நல்லிணக்கத்தை வலியுறுத்தும் விதமாக நாணயங்களைப் பயன்படுத்தி, ஸ்ரீரங்கம் ராஜகோபுரம், சர்ச், மசூதி மூன்றையும் உருவாக்கினேன்" எனச் சொல்லும் கே.பி.எஸ். நாராயணன், ஸ்ரீரங்கம் கோயிலின் முன்னாள் அறங்காவலர் குழுத் தலைவர்.

\- திருநாவு

வைச்சுக்கோ, இங்க, இந்த சிட்டியில இருக்கறவன் உன்னைத் தேடிண்டு ஓடி வருவான். இந்தச் சந்துல இருந்து இனிமே வாழ்க்கை நடத்த வேண்டிய அவசியம் உனக்கு இல்லை. நான் சொல்றதைக் கேள். கிளம்பிப் போ. என்ன சாப்பிடறே, ஜாங்கிரி, மைசூர் போண்டா, ஒரு மசால் தோசை சொல்லட்டுமா. தம்பி... டிகிரி காப்பி வேணும். எனக்கு எப்படி கொடுப்பியோ, அதே மாதிரி இவருக்கும் நல்ல காப்பி கொடு."

சட்டென்று சங்கரய்யர் முடித்துக் கொண்டார்.

ராதாகிருஷ்ணன் கண்களிலிருந்து மெல்ல கண்ணீர் வந்தது. உடனே ரேவதியைப் பார்த்து அணைத்துக் கொள்ள வேண்டும் என்ற ஆசை வந்தது.

அவர் நிதானமாகச் சாப்பிட்டார்.

சங்கரய்யர் பில்லுக்கு பணம் கொடுத்து விட்டு ராதாகிருஷ்ணனனுக்கு காப்பி வரும் போது விடைபெற்று எழுந்து போனார்.

யாரோ அருகே வந்து கரம் தொட்டு கண்களில் ஒற்றிக்கொண்டார்கள்.

என்ன என்று திகைத்தபோது, "சங்கரய்யரே உட்கார வைச்சு, காப்பி வாங்கித் தரார்னா, நீங்க பெரியாளாத்தான் இருக்கணும். அதனால தொட்டுக் கும்பிட்டேன். வரேங்க."

பதிலுக்கு எதிர்பார்க்காமல் வெளியே போனார்.

பசித்த வயிறு உணவால் அடங்கியது. மனம் மெல்ல அமைதியாயிற்று.

எங்கே போவது?

அவர் காளிகாம்பாள் கோவிலுக்குள் நுழைந்து சன்னதியில் அம்பாளை தரிசனம் செய்து, பிறகு மெல்ல வந்து உற்சவமூர்த்தி எதிரே உட்கார்ந்து கொண்டார். தூணில் சாய்ந்து கொண்டார்.

தெற்கே குடிபெயர்வது சரி, என்ன வேலை? என்ன வேலை? ஜனங்களுக்கு நல்லது சொல்கிற வேலையென்றால் காசு வருமா? இவன் எவ்வளவு காசு கொடுப்பான்?

மனம் மறுபடியும் வாழ்க்கைக் கணக்கை வேகமாகப் போட ஆரம்பித்தது.

(தொடரும்)

வைகோவை வாஜ்பாய் கண்டு கொள்ளவில்லையே..?

● எம். சிவகுருநாதன், தஞ்சை.

? குஜராத்தில் தேர்தலை ஒத்தி வைத்த தேர்தல் கமிஷனின் முடிவு சரியே என்று உச்சநீதிமன்றம் தீர்ப் பளித்துள்ளதே, கவனித்தீர்களா..?

! கவனித்தேன்; அதை அடுத்து தேர்தல் ஆணையம் தேர்தல் தேதி குறித் துள்ளதையும் கவனித் தேன். கூடவே மோடி அதிகார துஷ்பிர யோகம் செய்து வரிப் பணத்தில் சாதனை விளம்பரங்கள் செய் வதையும் கவனித் தேன். இப்படி அவர் நடந்து சொன்வார் என்பதற்காகத்தான் குஜராத்தில் ஜனாதி பதி ஆட்சி பிரகட னம் செய்யப்படவேண்டும் என்று பலரும் கருத்து தெரிவித்தார்கள் என்பதையும் நினைவுகூர்ந்தேன்.



• வரிப்பண விளம்பரம்!



• வல்லரசு கஜானா!

● காமேதா, பொறையாறு.

? ஜெ. பிரதமரானால் இந்தியா வல்லரசாக மாறும் என்று அமைச்சர் இராமச்சந்திரன் கூறுகிறாரே...?

! அட ராமச்சந்திரா! அகில இந்தியாவின் கஜானாவே காலியாகணுமா?...

● சின்னஞ்சிறுகோபு, மயிலாடுதுறை. *

? கண்ணீரை வரவழைக்காத வெங்காயத்தை நவீன முறையில் ஜப்பானிய விஞ்ஞானிகள் உருவாக்கியிருக் கிறார்களாமே... இப்படியெல்லாம் செய்தால் தாவரத்தின் மரபியல்கள் மாறிவிடாதா...?

!விடும்! சுவையும் கெடும். இயற்கையை மாற்றி மனிதன் செய்யும் எந்தக் காரியமும் அபாயகரமான பக்க விளைவுகளை ஏற்படுத்தும். இது விஞ்ஞானிகளுக்கே தெரியும். ஆனால், அவர்கள் ஆழ் மனத்தில் ஓர் அசுரத்தனமும்



• வேதனையும்...




• ...வேடிக்கையும்

குடியிருக்கிறது. தனது வல்லமையைக் காட்ட வேண்டும் என்ற அரிப்பு இருக்கிறது.

● க.நா. இராஜேஸ்வரன்,
மொரட்டுப்பாளையம்.

? இலங்கை உயர்நீதி மன்றம், பிரபாகரனுக்கு இருநூறு ஆண்டு சிறைத் தண்டனை விதித்திருக்கிறதே... வேடிக்கையாயில்லை...?

! இது ஒரு வழக்குக்கு உண்டான தண்டனைதான். இதைவிடப் பெரிய குற்றங்களை, விடுதலைப் புலிகளின் தலைவர் செய்துள்ளார். எனவே தீர்ப்பு எனக்கு வேடிக்கையாகவும் இல்லை; வியப்பாகவும் இல்லை. 'பழசையெல்லாம் கிளறாதீர்கள்' என்று பாலசிங்கம் கூறுவதுதான் வியப்பாகவும் வேடிக்கையாவும் இருக்கிறது.


• புலியும்...


• ...கிலியும்!

● மல்லிகை மன்னன்,
மதுரை.

? அ.தி.மு.க.அரசுக்கு எதிராகக் கல்லூரி ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் என்று அனைத்து தரப்பிலும் நடத்திய போராட்டங்கள் படுதோல்வி அடைந்திருப்பது புரட்சித் தலைவியின் சாணக்கியத்தைத் தெரிவிக்கிறதல்லவா...?

! எல்லோரையும் பகைத்துக் கொள்வது சாணக்கியமா! வேலை நிறுத்தமே நிகழாத படி பேச்சுவார்த்தை நடத்தி, தொலை நோக்குடன் இயங்கி பலதரப்பினரையும் மகிழ்விப்பதல்லவா சாணக்கியம்!

● ஜோ. ஜெயக்குமார்,
நாட்டரசன்கோட்டை.

? ஈவ் டீசிங் செய்தால் ஆயுள் தண்டனை; அதற்கு உடந்தையாக இருப்போருக்குச் சிறைத் தண்டனை என்று சட்டத் திருத்த மசோதா பிறப்பித்துள்ளதே தமிழக அரசு...?

! இதுவும் துஷ்பிரயோகத்துக்குள்ளாகக் கூடிய அபாயகரமான சட்டம். ஈவ் டீசிங்குக்கான காரணங்களை நீக்காமல் சட்டம் மட்டும் கொண்டு வருவதில் பயனில்லை.

● கே.என். பாலகிருஷ்ணன்,
சென்னை - 91.

? ஸ்ரீ ஜெயேந்திரரின் மெரீனா கூட்டம் பற்றி...?

! மழையைப் பொருட்படுத்தாமல் வந்த மக்கள் வெள்ளம் சுவாமிகளுக்குக் கிடைத்த வெற்றிதான். ஆனால் மதச்சார்பின்மைக்கும் சகோதரத்துவத்துக்கும் வெற்றியா என்கிற கேள்வி அச்சுறுத்திக் கொண்டே இருக்கிறது.


• வெற்றிக் கூட்டம்!

● ஜி. ராமதாஸ், கணபதி அக்ரஹாரம்.

? ஊனமுற்றோருக்கான ரயில் பயணச் சலுகைகள் தற்போது குறைக்கப்பட்டு விட்டதா...?

! இருக்கும் சலுகைகளே அபத்தமாய் உள்ளன. உதாரணமாக, செவிட்டுமையாய் இருந்தால் சலுகை. வெறும் செவிடாகவோ ஊமையாகவோ மட்டும் இருந்தால் கிடையாதாம்!

● பொன்விழி, அன்னூர்.

? பா.ஜ.கவுக்கு வக்காலத்து வாங்கிய வைகோவை வாஜ்பாய் கண்டுகொள்ளாமல் இருப்பது ஏன்...?

! அம்மாவுடைய அதிருப்திக்குப் பயந்துதான்.

● ஆர்.ஜி.அம்பி, திசையன்விளை.

? ஜாதி - மதம் - மொழி என்று எவ்வித ஆயுதமுமின்றி அரசியல் நடத்த முடியாதா...?

! ஏன் முடியாது? அப்படி நடத்த வேண்டும் என்றுதானே நமது அரசியல் சாச

ணமே சொல்கிறது!

● ந.வி.மூர்த்தி, சென்னை - 13. ❐

? **குறைந்த ஊழியர்களைக் கொண்டு நிறைந்த லாபமீட்டும் தனியார் தொழில் நிறுவனங்களுடன் ஒப்பிட்டு, அரசு ஊழியர்களின் செலவு தண்டம் என்று கூறலாமா? அரசின் பல்வேறு துறைகள் நாட்டின் வளர்ச்சிக்கு அடித்தளம் அமைப்பவை என்பதை மறுக்க முடியுமா...?**

! அரசு ஊழியர்களுக்கான செலவு எல்லாமே தண்டம் என்று யாரும் கூற வில்லை. ஆனால், செய்யப்படும் செலவுக்கு, விளையும் பயன் மிகக் குறைவு. மிக அதிகமாய் ஊழியர்கள் இருப்பதால் பொறுப்புணர்வு குறைகிறது. ஆள் குறைப்பு, சம்பளக் குறைப்பு என்பதெல் லாம் அரசுத் துறையில் இனி சாத்தியமே யில்லை. சில ஆண்டுகளுக்குப் புதிய ஊழி யர்களைப் பணிக்கு அமர்த்தாமல் இருந்தாலே போதும். ஓய்வு பெறும் ஊழியர்கள் காரணமாக வீக்கம் குறையும்.

● எஸ். ரேணுகா,
நீடாமங்கலம்.

? **கலி. சிவத்தின் பேச்சாற்றல் பற்றி...?**

! ஒரே பொருள் குறித்து காலையில் 16 வயதின ருக்கும் மாலையில் 61 வயதினருக்கும் பேசச் சொல்லுங்கள்... இரு பிரிவினரையும் கட்டிப் போட்டு உட்கார வைக்கும் சொல்லாற்றலும் இருக்கும்; பொருளாழமும் இருக்கும்.



• சொல்கயிறு!

● கே.வி.ராமன், சென்னை _ 73.

? **சிவகங்கையில் ஒரு கிராமத்துக் குளத்தைத் தூர்வாறும் பணிக்கு ஆட்களை அமர்த்தாமல் இயந்திரத்தைப் பயன்படுத்தியதை ஆட்சேபித்ததற்காக ஒரு தலித் தாக்கப்பட்டு, அரை நிர்வாண மாக ஊர்வலம் செல்லும்படி கட்டா யப்படுத்தப்பட்டுள்ளாரே..?**

! அப்பணி மனித சக்தியால் செய்யக் கூடியது அன்று (பாறை பூமி என்பதால்) என்று விளக்கம் அளிக்கப் பட்டுள்ளது என் றாலும், நடந்த கொடு ரத்தை நியாயப்படுத்த முடியாது. அப்புறம் மதம் மாறாமல் இருந் தால்தான் அதிசயம்.

● அவ்வை கே. சஞ்
சீவிபாரதி, கோபி.

? **பத்து ஆண்டுகளுக்குள் நதிகளை இணைக்க நடவடிக்கை எடுக்க வேண் டும் என்று உச்சநீதி மன்றம் மத்திய அரசுக்கு உத்தரவிட்டுள்ளதே...?**

! 'பத்து ஆண்டுகளுக்குள் நடவடிக்கை எடுத்து திட்டத்தை நிறைவேற்றி விட வேண்டும்' என்று கூறியிருந் தால் தேவலை. திட்டத்தைக் குறித்து யோசித்து, தொடங்கவே பத்தாண்டுகள் ஓட்டி விடுவார்கள்! அதற்குள் விலைவாசி பத்து மடங்கு உயர்ந்துவிடும். இன்று இரவோடிரவாக வீதிகளை இணைத்துப் பாலம் கட்டும் தொழில்நுட்பம், உலகின் முன்னேறிய நாடுகளில் காணப்படுகிறது. அவர்கள் உதவி பெற்று, விளையும் பயனில் விரைவாய்க் கடனைத் தீர்த்துக் கொள்ளலாம்.

❐ **ரூ. 100/- பரிசு பெறுபவர்:**
ந.வி.மூர்த்தி,
103 (ப.எண்:43),
பி.வி.கோயில் தெரு,
இராயபுரம்,
சென்னை — 600 013.

* **ரூ. 50/- பரிசு பெறுபவர்:**
சின்னஞ்சிறு கோபு,
1/313-1, காமராஜர் தெரு,
சீனிவாசபுரம்,
மயிலாடுதுறை — 609 001.

உனது
எல்லா அழகுகளையும்
மொத்தமாக எழுதிவிட முடியாது
எனில்,
எழுதும்போதே கூடிவிடுகிற
அழகு
உனக்கேயானது.

வாகனத்தில் அரங்கேறாது போனால், காதலித்த திருப்தியே கிடைக்காது.

திளைறத் திளைறக் காதலித்தாலும் திருப்தி வராது. திருப்தி வந்த காதல் காதலுமில்லை. ஊடல் கொண்ட தலைவிக்குத் தோழி அறிவுரை கூறுகிறாள் : 'ஊடலில் பிடிவாதம் கூடாது. ஊடல் ஊறுகாயைப் போல் இருக்க வேண்டும். அவ்வப்போது தொட்டுக் கொள்ளலாம். உணவு போல உட்கொண்டால் வெறுப்புதான் மீதமாகும். ஊடலை ஒத்திப் போட்டுவிட்டு அவரோடு உடன்படு என்கிறாள். தலைவிக்கோ தாளாத ஊடல்.

கண்களாற் பிழைகள்
கண்ட பின்னும்
மீண்டும் அவரை
வேண்டுதல், நீரைக்



காதல் பிசாசே!

இடது காலை வைக்கின்றபோது இருக்கின்ற நதி; வலது காலை வைக்கும் போது இல்லை, என்பதைப் போல ஒவ்வொரு நிமிடமும் புதுப்புது அழகு கொண்டிருப்பாள் காதலி. சிணுங்கலில் மிதமாகவும் கோபத்தில் அதிகமாகவும் அழகு கூடும். காதலியின் அழகோ? காதலிப்பவனின் பார்வையோ? இரண்டில் எது அவ்விதம் உருவாக்குகிறது என்பதுதான் புதிர். புதிர்கள் அடங்கிய பதில்களாக வாழ்க்கை. ஒரு நாளின் நீளத்தை நரகமாகக் கருதவும், ஒரு நிமிடத்தின் சந்தோஷத்தை சொர்க்கமாகவும் கொண்டாடும் மனது காதல் மனது. செல்லமாய்க் கிள்ளாத விரல்கள், என்ன விரல்கள்? செல்லமாய்த் திட்டாத இதழ்கள், என்ன இதழ்கள்? செல்லமாய் முறைக்காத விழிகள், என்ன விழிகள்? ஊடல் செல்லத்தின் இன்னொரு வடிவம். பிரியமுள்ளவரிடத்தில் மட்டுமே பூக்கிற விஷேசமான பூ ஊடல்.

ஊடல்தான் காதலின் மகத்துவத்தை உணர்த்துவது. ஊடலில்லாத பிரியமும், தேடலில்லாத வாழ்வும் காகிதக் கப்பல் போன்றது. காதலின் பயணம் ஊடல்


காய்ச்சி யாற்றிடின் வாய்ச்சுவை கெடல்
போல்
காதற் சுவையும் தெழுறுமே
- மன்மதன் (153)

என் கண்களால் அந்தப் பிழையைக் கண்டுவிட்டேன். நானே கண்ட பிறகு அந்தப் பிழையை எப்படி மன்னிப்பது? தண்ணீரைக் காய்ச்சிய பின் ஆறினாலும் அது முன்னைய சுவையை மீண்டும் பெறாதது போலவே, காதல் சுவையும் முறிவுக்குப் பின் சிறப்பற்றுப் போகும் என்கிறாள். ஊடல் நிரந்தரப் பிரிவா? எனத் தெரியவில்லை. ஊடலை, தண்ணீரைக் கொண்டு உவமையாக்கிக் காட்டிய இந்த அற்புதமான பாடல் காதா சப்த சதியில் இடம் பெறுகிறது.

ஆந்திர நாட்டு அகநானூறு என போற்றத்தக்க இத்தொகுப்பு, கி.மு. முதல் நூற்றாண்டைச் சேர்ந்தது. 'ஹாலன்'


யுகபாரதி

3



என்பவரால் தொகுக்கப்பட்டது. தமிழ்ச் சங்க அகப்பாடல்களுக்கு நிகரான இப் பாடல்களை, தமிழில் மொழி பெயர்த் திருப்பவர் பன்மொழிப்புலவர். மு.கு. ஜெகநாதராஜா. மொழி பெயர்ப்புக்கான சாகித்ய அகாடமி பரிசு பெற்றவர். ராஜபாளையத்துக்காரர். பல அரிய தெலுங்கு நூல்களைத் தமிழுக்குத் தந்திருக்கிறார். அவற்றில் இது மிக முக்கியமானது. மூலத்தை வாசிக்காமலேயே அதன் சுவையை உணரும் விதமாக தமிழாக்கித் தந்திருக்கிறார். சிலர் மொழி பெயர்ப்புகளைத் தமிழ்ப் படுத்தி விடுவார்கள். இவர் தமிழில் ஆக்கித் தந் திருக்கிறார்.

காதலியின் இதயத்தைத் திருட முடியும். பருக முடி



யுமா? இதயத்தைப் பருகுவதா? கேட்கும் போதே தலை சுற்றுகிறது. நினைவுகளின் மடியில் தூங்குகிற ரம்மியமான கனவுகள்

மட்டுமல்ல காதல். பிசாசுகளின் பிறாண்டல் போல அபாயகரமானதும்தான். காத்திருப்பு கள், எதிர்பார்ப்புகள்; கட்டுப்படுதல், தனக் குள் தன்னைப் புதைத்து புதைத்து சுகம் வளர்த்தல், மௌனங்களால் மேடையிட்டு ஊமையாகி விடுதல் போலவே, ஆணையிட வும் அடக்கிவைக்கவும் அடம் பிடிக்கவும் கற்றிருக்கிறது காதல், இதயத்தைப் பருகி விட்டுப் போனான் அவன். என்ன ராட்ச சன்? இரக்கமேயில்லாத கொடூர மனமா அவனுடையது?

அன்னாய்! யான் நீராடுதல் காலை
அழகன் வந்தால் காற்றிலிறங்கி
மஞ்சட் கைப்பு நீர் வாடிக் - குடித்தென்
நெஞ்சம் பருகி நீங்கல் போன்றான்
- ஹாலன் (3-46)

ஆற்றில் அவள் குளித்துக் கொண்டிருக் கிறாள். நாணத்தில் சிவந்த முகத்தை மஞ்சள் பூசி மறைத்துக் கொண்டிருக்கிறாள். ஆறு நடந்து கொண்டிருக்கிறது. வேகமாக ஓடிய எந்த ஆறும், அழகிய ஒருத்தி குளிக்கப் புகுந்தால் நடக்கவே செய்யும்.

நடக்கிற ஆற்றின் கரையில் படபடக்கிற இதயத்துடிப்போடு அவன் நிற்கிறான். கொஞ்சம் போல் தள்ளி இன்னொரு படித் துறையில் அவன் இறங்குகிறான். இறங்கத் தான் வேண்டும். இதற்கு மேலும் அந்தப் புழுக்கத்தை ஆற்றிலிறங்கி விலக்காமல் என்ன செய்வது? இறங்குகிறவன் மஞ்சள் மிதந்துவரும் நீரை, மஞ்சளாய் மாறி மிதந்து வரும் நீரை, மஞ்சளாய் மாறிவிட்ட ஆற்றை அள்ளிப் பருகிறான். அந்த நீரின் சுவையை அறிவதற்கு காதலர்களால் மட்டுமே இய லும், பருகியவனுக்கு, புத்தியில் போதை வந் ததோ இல்லையோ, இவளுக்கு இதயத்தில் நடுக்கம் வந்துவிட்டது. இதயத்தை எடுத்து பருகிவிட்டது போல் தோன்றுகிறதாம். இதுவும் காதா சப்த சதியில் இடம் பெறும் பாடல்தான். தேவதை குளித்த நீர்த்துளி எடுத்துத் தீர்த்தமென்று குடிக்கிற காதலனை சினிமாவில் ரசித்திருக்கிறோம். நிஜத்தில்?

ஒரு பள்ளமான இதயம் இன்னொரு பள்ளமான இதயத்தால் நிறைவு செய்யப் படும். பள்ளத்தை நோக்கி அருவி விழும். விழுகிற அருவி நடந்து நடந்து, இன்னொரு பள்ளத்தை நோக்கும். அன்பு கிடைக்காத ஆணும் அன்பு கிடைக்காத பெண்ணும் பகிர்ந்து கொள்வது மட்டுமே அல்ல காதல். அன்பு கிடைத்தாலும் மிகுதியான அன்பை நோக்கி உயரும். காத்திருக்கும்போது கடற் கரை மணலில் பள்ளம் பறிக்கிறோம். பறித்த மணலை இன்னொரு பள்ளத்தை மூடு வதற்குப் பயன்படுத்துகிறோம். நாம் தோண் டிய பள்ளம் மூடுவதற்காக அல்ல. எனினும் தாமாகவே மூடியிட்டுக் கொள்ளும் வித்தை காதலுக்குத் தெரியும்.

ஒவ்வொரு கடற்கரை அமர்விலும்
ஒரு பள்ளம் உருவாகிறது
யாருடைய பள்ளத்திலோ
கைநுழைத்து
ஏதாவதொரு பள்ளம் நிரம்புகிறது
இப்படியேதான் வழி நெடுகிலும்
அறியாதொரு பள்ளம்
அனிச்சையாய் நிரவல்
பிறகு மீண்டுமொரு பள்ளம்.

வி. அமலன் ஸ்டேன்லி எழுதிய இக்கவி தையை மணல் வீடு கட்டி விளையாடிய அனுபவமுள்ள எல்லோரும் சிலாகிப்பார் கள். இழந்து போகும் அவயத்தோடு கூடிய ஒவ்வொரு மணல் வீடும் ஒரு காதலை யாவது சொல்லும். சொல்லாத காதலை பெரிதாகப் போற்றும் ஊடகங்கள், காதலைச் சொல்லிச் சொல்லி வெறுப்பை மூட்டிவிட்டன - அநாகரிமாக இரண்டு பேர் கடற்கரையில் காதலிப்பதைப் போல. அது காதலில்லை என்றாலும்.

ருஷ்யக் கவிஞன் போரிஸ் பாகட்கவ் வித் யாசமான காதலன். கவிஞர்களின் காதல் நுட்பமானது. பிரியப் போகும் தனது காத லிக்கு இறுதியாகச் சொல்கிறான் இப்படி.

(தொடரும்)



சிவகாமியின் சபதம்



பத்தொன்பதாம் அத்தியாயம்

சுரங்க வழி

ஆயனர் அஜந்தா வர்ண ரகசியத்தில் மனத்தைச் செலுத்திக் கொண்டிருக்கையில், சக்கரவர்த்தி அசுவபாலரைப் பார்த்து, "என்ன யோகியாரே, யோகப் பயிற்சியெல்லாம் இப்போது எப்படியிருக்கிறது? இந்த வாதாபி மன்னர் வந்தாலும் வந்தார்; யோக சாதனத்தில் மனதைச் செலுத்தவே அவகாசம் இல்லாமல் போய்விட்டது!" என்று கூறி கண்களினால் சமிக்ஞை செய்யவே அசுவபாலர் சக்கரவர்த்தியைப் பின் தொடர, இருவரும் வீட்டுக்குப் பின்னால் அரண்மனை உத்தியானவனத்தில் இருந்த யோக மண்டபத்துக்குச் சென்றார்கள்.

அவர்கள் போனதும், சிவகாமி கமலியைப் பார்த்து, "அக்கா! சக்கரவர்த்தி கற்ற கலை எல்லாம் போதாதென்று யோகக் கலை வேறு கற்றுக் கொள்ள ஆரம்பித்திருக்கிறாரா?" என்று கேட்டாள். அதற்குக் கமலி, கண்ணை விஷமமாகச் சிமிட்டிக்கொண்டே இரகசியம் பேசும் குரலில், "யோகமாவது, மண்ணாங்கட்டியாவது;. எல்லாம் மோசம்! அப்புறம் சொல்கிறேன்" என்றாள்.

சற்று நேரத்துக்கெல்லாம் மகேந்திர பல்லவர் யோக மண்டபத்திலிருந்து திரும்பி அந்த வீட்டின் வழியாக வெளியே சென்றபோது ஆயனர் சென்று குறுக்கிட்டு வணங்கி "பல்லவேந்திரா! இங்கே நாங்கள் வந்த காரியம் ஆகிவிட்டதல்லவா? இனி மண்டபப்பட்டுக்குத் திரும்பலாமா?" என்று இரக்கமான குரலில் கேட்டார்.

மகேந்திரர் புன்னகையுடன், "ஆயனரே! சிவகாமியின் அற்புத நடனத்துக்கு இன்னும் நான் வெகுமதிகள் அளிக்கவில்லையே? கொஞ்சம் பொறுத்திருங்கள். மேலும் மண்டபப்பட்டுக்கு நீங்கள்

அமரர் கல்கி

திரும்பிப் போக வேண்டிய அவசியமே நேராது. உங்களுடைய பழைய அரண்ய வீட்டுக்கே போகலாம்!" என்றார்.

ஆயனர் கவலை மிகுந்த குரலில், "பிரபு! ஒவ்வோரிடத்திலும் ஆரம்பித்த வேலை அப்படி அப்படியே நடுவில் நிற்கிறதே! இந்தத் துரதிர்ஷ்டசாலியின் பாக்கியம் போலிருக்கிறது. மண்டபப்பட்டில் ஆரம்பித்த திருப்பணியும் அப்படியே நின்றுவிட்டால்..." என்று கூறி வந்தபோது, மகேந்திர பல்லவர் குறுக்கிட்டு, "மகா சிற்பியாரே! மனித வாழ்க்கை அற்பமானது. இதில் நாம் ஒவ்வொருவரும் ஆரம்பித்த காரியத்தைப் பூர்த்தி செய்து விட முடிகிறதா? நான் தொடங்கிய காரியங்களும் எத்தனையோ நடுவில் நின்றுதான் போயிருக்கின்றன. அதனால் என்ன? நமக்குப் பின்வரும் சந்ததிகள் நிறைவேற்றி வைப்பார்கள். அதற்காக கவலைப்பட வேண்டாம். மேலும் நமது அரண்மனையில் கூடிய சீக்கிரத்தில் ஒரு கல்யாணம் நடக்கப் போகிறது. அப்போது உம் குமாரி நாட்டியம் ஆட வேண்டியிருந்தாலும் இருக்கும்!" என்று கூறிவிட்டு, மேலே நடந்து சென்றவர், வாசற்படியண்டை சற்றுத் தயங்கி நின்று, "ஆயனரே! உங்கள் விருப்பத்துக்கு விரோதமாக இருக்கும்படி கட்டாயப்படுத்த நான் விரும்பவில்லை. உங்களுக்கு அவசியம் போக வேண்டுமானால் கோட்டை வாசல் கதவுகள் திறந்ததும் போய் வாருங்கள். தேவை ஏற்படும்போது சொல்லி அனுப்புகிறேன்" என்று கூறி விட்டு, விரைந்து வாசற்படியைக் கடந்து சென்றார்.

சக்கரவர்த்தி போன பிறகு, சிவகாமி திடீரென்று தரையில் குப்புறப் படுத்துக் கொண்டு விம்மி விம்மி அழத் தொடங்கினாள். கமலி அவளுடைய தலையைத் தூக்கித் தன் மடியின் மீது போட்டுக் கொண்டு, "என் கண்ணே! நீ ஏன் அழுகிறாய்? உனக்கு என்ன காரியம் ஆக வேண்டுமோ சொல்! எந்தப் பாடுபட்டாவது, உயிரைக் கொடுத்தாவது நான் செய்துகொடுக்கிறேன். நீ கண்ணீர் விட்டால் என் நெஞ்சு உடைந்துவிடும் போலிருக்கிறது!" என்றாள்.

சிவகாமி மறுமொழி சொல்லாமல் விம்மவே, "அசடே! நீ எதற்காக அழுகிறாய் என்று எனக்குத் தெரியும். சக்கரவர்த்தி கலியாணத்தைப் பற்றிச் சொன்னதற்காகத்தானே? அது எப்படி நடக்கும், சிவகாமி? மாமல்லர் உனக்கு வாக்குக் கொடுத்திருக்கும்போது, எப்படி நடக்கும்? இந்த மகேந்திர சக்கரவர்த்தி என்னதான் சூழ்ச்சி செய்தாலும் மாமல்லர் வேறொரு பெண்ணைக் கலியாணம் செய்து கொள்ள மாட்டார். மாமல்லரின் குணம் எனக்கு நன்றாய்த் தெரியும். அவரிடம் இந்தச் சக்கரவர்த்தியின் சூழ்ச்சி ஒன்றும் பலிக்காது!" என்றாள் கமலி.

சென்ற சில நாளாகக் காஞ்சி நகரில் மாமல்லரின் விவாகத்தைப் பற்றிப் பல வித வதந்திகள் உலாவி வந்தன. பாண்டியனைப் புலிகேசியிடமிருந்து பிரிக்கும் பொருட்டு, பாண்டிய குமாரியை மாமல்லருக்குக் கலியாணம் செய்துகொள்வதாகச் சக்கரவர்த்தி ஓலை அனுப்பியிருக்கிறார் என்று சிலர் சொன்னார்கள். இன்னும் சிலர் வாதாபிச் சளுக்கர் குலத்திலேயே மாமல்லருக்குப் பெண் கொள்ளப் போவதாகப் பிரஸ்தாபித்தார்கள்.

இதெல்லாம் கமலியின் காதுக்கும் எட்டியிருந்தபடியால், அவளுடைய மனமும் ஒருவாறு வேதனைப் பட்டுக்கொண்டிருந்தது. ஆகையினால்தான் மாமல்லரின் மன உறுதியைப் பற்றி அவ்வளவு வற்புறுத்தி, சிவகாமிக்கு அவள் தேறுதல் கூறினாள்.

ஆனால் சிவகாமி தேறுதல் அடையவில்லை. மாமல்லரின் பெயரைக் கேட்ட பிறகு இன்னும் விசித்து அழலானாள். "இல்லை, அக்கா! இல்லை! மாமல்லர் என்னை வெறுத்து விடுவார். என்னிடம் அவருக்கிருந்த ஆசையெல்லாம் விஷமாகி விடப் போகிறது. அவருக்கு அப்படித் துரோகம் செய்துவிட்டேன், இந்தப் பாவி! முன்னமே ஒருதடவை அவர் என்னை வீட்டிலேயே இருக்கச் சொல்லியிருக்க, நான் ஊர் சுற்றப் போய்விட்டேன். இப்போது என்னை மண்டபப்பட்டிலேயே

இருக்கும்படி சொல்லியிருக்க, இங்கே நாட்டியம் ஆட வந்துவிட்டேன். அக்கா! அவர் பாண்டியனை வென்றுவிட்டு நேரே மண்டபப்பட்டுக்கு வருவார்! வந்து என்னைத் தேடுவார்! அங்கே என்னைக் காணாமற் போனால், அவருக்கு எப்படி இருக்கும்? நான் இங்கே புலிகேசிக்கு முன்னால் நாட்டியம் ஆட வந்துவிட்டேன் என்று கேள்விப்பட்டால் அவருக்கு என்னமாய் இருக்கும்? - ஆஹா! இந்தச் சக்கரவர்த்தி என்னை எப்படி வஞ்சித்து விட்டார்!" என்று விம்மிக்கொண்டே கூறினாள் சிவகாமி.

கமலி சற்று நேரம் யோசனையில் ஆழ்ந்திருந்தாள். "சிவகாமி! இதற்கு ஏன் இவ்வளவு கவலை? கோட்டை வாசல் திறந்ததும் நீ போகலாம் என்றுதான் சக்கரவர்த்தியே சொல்லிவிட்டாரே!" என்றாள்.

"ஆஹா! அவருடைய சூழ்ச்சி உனக்குத் தெரியாது! எனக்காகவே கோட்டை வாசலை வெகு நாள் வரையில் சாத்தி வைத்திருப்பார். அக்கா! மாமல்லர் இங்கு வந்து சேரும் வரையில் திறக்க மாட்டார்! நீ வேணுமானால் பார்!" என்று சிவகாமி விம்மினாள்.

"தங்கைச்சி! நீ கவலைப்படாதே! கோட்டைவாசல் திறக்கா விட்டால் போகட்டும்; நான் உன்னை எப்படியாவது வெளியே அனுப்பி வைக்கிறேன்!" என்றாள் கமலி.

உடனே, சிவகாமி விம்மலை நிறுத்தி எழுந்து உட்கார்ந்து, "அக்கா! நிஜமாகத்தானா? அது சாத்தியமா?" என்று கேட்டாள்.

"நான் மனம் வைத்தால் எதுதான் சாத்தியமாகாது? என்னை யார் என்று நினைத்தாய்? இந்த மகேந்திர சக்கரவர்த்தியின் சூழ்ச்சியெல்லாம் என்னிடம் பலிக்குமா?"

"அக்கா! எப்படி என்று சொல்! எங்களை எவ்விதம் வெளியில் அனுப்பி வைப்பாய்?" என்று சிவகாமி பரபரப்புடன் கேட்க, கமலி அவள் காதண்டைத் தன் வாயை வைத்து, "சுரங்க வழி மூலமாக!" என்றாள்.

சிவகாமி, ஏற்கெனவே காஞ்சியிலிருந்து வெளியே போக இரகசியச் சுரங்க வழி இருக்கிறதென்று கேள்விப்பட்டதுண்டு. எனவே, இப்போது கரை கடந்த ஆவலுடன், "சுரங்க வழி நிஜமாகவே இருக்கிறதா? உனக்கு நிச்சயமாய்த் தெரியுமா?" என்று கேட்டாள்.

கமலி மீண்டும் இரகசியக் குரலில் கூறினாள்: "இரைந்து பேசாதேயடி! மாமாவின் யோக சாதனத்தைப் பற்றிச் சொல்கிறேன் என்றேன் அல்லவா? யோகம் என்பதெல்லாம் பொய். தங்கைச்சி! சுத்தப் பொய்! அந்த மண்டபத்திலே சுரங்க வழி இருக்கிறது! அதற்குள்ளேயிருந்து குண்டோதரன் அடிக்கடி வெளி வருவதை நான் பார்த்திருக்கிறேன். சக்கரவர்த்தி கூடச் சில சமயம்..."

"என்ன அக்கா சொல்கிறாய்? குண்டோதரனா?"

"ஆமாமடி தங்கச்சி! ஆமாம்! குண்டோதரன் என்று சக்கரவர்த்தியின் ஒற்றன் ஒருவன் இருக்கிறான். சத்ருக்னன் என்று இன்னொருவன் இருக்கிறான். இரண்டு பேரும் பொல்லாத தடியர்கள்... என்னடி யோசிக்கிறாய்?"

"ஒன்றுமில்லை, சொல், அக்கா! அந்தச் சுரங்க வழி உனக்கு எப்படித் தெரிந்தது?"

"அந்த யோக மண்டபத்தின் பக்கம் நான் வரவே கூடாது என்று என் மாமனார் சொல்லியிருந்தார். அதனாலேயே அவருக்குத் தெரியாமல் நான் அடிக்கடி போய்ப் பார்ப்பேன். ஒருநாள் நான் போய் எட்டிப் பார்த்தபோது, மண்டபத்தின் மத்தியில் இருந்த சிவலிங்கம் அப்பால் நகர்ந்திருந்தது. லிங்கம் இருந்த இடத்தில் ஒரு பெரிய துவாரம் தெரிந்தது. அதற்குள்ளேயிருந்து குண்டோதரன் வெளியே வந்துகொண்டிருந்தான். அப்போது மண்டபத்திற்குள்ளே யார் இருந்தது என்று நினைக்கிறாய்? என் மாமனாரோடு சக்கரவர்த்தியும் நின்று கொண்டிருந்தார்!"

சிவகாமி சற்றுச் சிந்தித்துவிட்டு, "கமலி அக்கா! எப்படியாவது அந்தச் சுரங்கத்தின் வழியாக எங்களை நீ வெளியே அனுப்பி

விட்டால், உனக்குக் கோடி புண்ணியம் உண்டு. என்றென்றைக்கும் நான் உன் அடிமையாயிருப்பேன்!" என்றாள்.

"பேச்சைப் பார், பேச்சை! எனக்கு அடிமையாயிருக்கப் போகிறாளாம்! அடி பொல்லாத நீலி! நீ இந்த ராஜ்யத்துக்கே இராணியாகப் போகிறாய்; எனக்கு அடிமையாகி விடுவாயா நீ! வாக்குக் கொடுத்துவிட்டு அப்புறம் திண்டாடாதே!" என்றாள்.

பிறகு, "ஆகட்டும், தங்கச்சி கொஞ்சம் பொறுமையாயிரு! அந்த மண்டபத்தின் மத்தியில் ஒரு சிவலிங்கம் இருக்கிறது. அதை இடம் விட்டு நகர்த்தினால் சுரங்க வழி தெரியும். லிங்கத்தை எப்படி இடம் விட்டு நகர்த்துவதென்பதை இன்றைக்கு அல்லது நாளைக்குள் எப்படியாவது தெரிந்துகொள்கிறேன். ஆனால் நீ இவ்வளவு அவசரப்பட்டு என்ன பிரயோஜனம்? உன் தகப்பனார் உன்னுடன் வருவதற்குச் சம்மதிக்க வேண்டுமே?" என்று கமலி கவலையுடன் கேட்டாள்.

"என்னைவிட அவர்தான் வெளியே போவதற்கு அதிக அவசரப்படுவார்! அதற்குக் காரணம் இருக்கிறது" என்றாள் சிவகாமி.

அதே சமயத்தில் வாசற் பக்கமிருந்த ஆயனர் அவர்களின் அண்டையில்வந்து, "இன்னும் எத்தனை நாளைக்கு இந்தக் கோட்டைக்குள் அடைப்பட்டுக் கிடக்க வேண்டுமோ தெரியவில்லை... சிவகாமி! உனக்குத் தெரியுமா? முன்னொரு நாள் அந்தப் பரஞ்சோதி என்கிற பிள்ளையிடம் நாகநந்தி ஓலையைக் கொடுத்து அனுப்பினாரே, அஜந்தா வர்ண இரகசியத்துக்காக? புலிகேசி மகாராஜாவுக்குத்தான் அந்த ஓலையைக் கொடுத்து அனுப்பினாராம்; அடாடா! வாதாபி மகாராஜா காஞ்சியில் இருக்கும்போதே இதைச் சொல்லியிருந்தால், நான் அந்தச் சளுக்க குலசிரேஷ்டரிடம் கெஞ்சிக் கூத்தாடி அஜந்தா வர்ண இரகசியத்தைப் பற்றிக் கேட்டுத் தெரிந்து கொண்டிருப்பேனல்லவா?" என்று புலம்பினார்.

"புலிகேசி மகாராஜாவுக்கு அந்த இரகசியம் தெரிந்திருப்பது என்ன நிச்சயம் அப்பா?" என்று சிவகாமி குறுக்கிட்டுக் கேட்டாள்.

"கட்டாயம் தெரிந்திருக்க வேண்டும், சிவகாமி! புலிகேசியின் இளம் பிராயத்தில் அவர் அஜந்தா மலைக் குகையிலேயே கொஞ்ச காலம் ஒளிந்து கொண்டிருந்தார் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்" என்றார் ஆயனர்.

அப்போது கமலியும் சிவகாமியும் ஒருவரை ஒருவர் பார்த்துப் புன்னகை புரிந்து கொண்டார்கள். ஆயனர் மேற்கண்டவாறு பேசப் பேச அவர்களுக்கு உற்சாகம் அதிகமாகிக் கொண்டிருந்தது.

இருபதாம் அத்தியாயம்

காபாலிகர் குகை

வாதாபிச் சக்கரவர்த்தி புறப்பட்டுச் சென்று மூன்று நாள் ஆகியும், கோட்டைக் கதவுகள் திறக்கப்படவில்லை.

இதைப் பற்றி நகரில் பல வகை வதந்திகள் உலாவிக்கொண்டிருந்தன. "ஒப்பந்தப்படி வாதாபிப் படைகள் திரும்பிப் போகவில்லை; மறுபடியும் கோட்டையை நெருங்கி வந்து வளைத்துக் கொண்டிருக்கின்றன!" என்று சிலர் சொன்னார்கள்.

புலிகேசி வெளியில் போன பிறகு மகேந்திர பல்லவருக்கு ஏதோ ஓலை அனுப்பியிருந்ததாகவும், அதற்கு மறுமொழியை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருப்பதாகவும் சிலர் சொன்னார்கள்.

''வாதாபி மகாராஜாவுக்கு மிகவும் வேண்டியவரான யாரோ ஒரு புத்த பிக்ஷுவை மகேந்திர பல்லவர் சிறையில் வைத்திருக்கிறாராம். அவரை உடனே விடுதலை செய்து அனுப்பாவிடில் மீண்டும் யுத்தம் தொடங்குவேன்!'' என்று அந்த ஓலையில் எழுதியிருப்பதாகச் சிலர் சொன்னார்கள்.

''ஆயனரையும் சிவகாமியையும் என்னுடன் அனுப்பி வைக்க வேண்டும். இல்லாவிடில் யுத்தத்துக்கு ஆயத்தமாக வேண்டும்'' என்று எழுதியிருந்ததாக இன்னொரு வதந்தி உலாவியது.


மகேந்திர பல்லவருடைய ஆட்சிக் காலத்தில் காஞ்சி நகரத்து மக்கள் முதன் முதலாக இப்போதுதான் அவருடைய காரியங்களைப் பற்றிக் குறை கூற ஆரம்பித்தார்கள்.

''புலிகேசியைக் காஞ்சிக்குள் வர விட்டதே தவறு!'' என்று சிலர் சொன்னார்கள்.

''அப்படியே நகருக்குள் விட்டாலும் அவனுக்கு என்ன இவ்வளவு உபசாரம்? சத்துரு அரசனிடம் இவ்வளவு தாழ்ந்து போகலாமா?'' என்று சிலர் கேட்டார்கள்.

''அந்த மூர்க்கனுக்கு முன்னால், நமது கலைச் செல்வி சிவகாமியை ஆடச் சொல்லியிருக்க வேண்டியதில்லை; சிவகாமியின் நடனத்தைப் பார்த்துவிட்டுத்தான் புலிகேசி தேன் குடித்த நரியாக ஆகிவிட்டான்!'' என்று வேறு சிலர் அபிப்பிராயப் பட்டார்கள்.





அந்த மாதிரியான நகர மாந்தர் பேச்செல்லாம் கமலி மூலமாக வடிகட்டி வந்து ஆயனரின் காதிலேயும் எட்டியது. அதிலெல்லாம் ஒரே ஒரு விஷயந்தான் ஆயனர் மனத்தில் ஆழமாய்ப் பதிந்தது. அதாவது வடக்குக் கோட்டை வாசலுக்குக் கொஞ்ச தூரத்தில் வாதாபிப் படையின் தண்டு இன்னும் இருக்கிறது என்பதுதான்.

"வாதாபி மன்னர் புறப்படுவதற்குள் இந்தக் கோட்டையை விட்டு நான் வெளியேறி விட்டால் எவ்வளவு நன்றாயிருக்கும்? அவரை எப்படியும் பார்த்து அஜந்தா வர்ணத்தைப் பற்றிக் கேட்டு விடுவேனே?" என்று அடிக்கடி ஆயனர் சொல்லிக்கொண்டிருந்தார். ஒரு தடவை திடீரென்று எதையோ நினைத்துக் கொண்டவர் போல், "நகரிலி

ருந்து வெளியே போவதற்குச் சுரங்க வழி ஒன்று இருக்க வேண்டும். அது எங்கே இருக்கிறது என்று தெரிந்தால் போய் விடலாம்!" என்றார்.

இதைக் கேட்ட சிவகாமி கண்களில் மின்வெட்டுடன், "நிஜந்தானா, அப்பா சுரங்க வழி தெரிந்தால் நாம் வெளியே



போய் விடலாமா!'' என்று கேட்டாள்.

''போய் விடலாம். நான்கூட அந்தச் சுரங்க வழியில் கொஞ்ச நாள் வேலை செய்திருக்கிறேன். ஆனால் அதற்கு வாசல் எங்கே என்று மட்டும் தெரியாது! அதை எப்படிக் கண்டுபிடிப்பது?'' என்று ஆயனர் ஏமாற்றமான குரலில் கூறினார்.

''அப்பா நம் கமலி அக்காவுக்கு அந்தச் சுரங்க வழி தெரியுமாம்!'' என்று சிவகாமி மெல்லிய குரலில் கூறியதும், ஆயனர் பரபரப்புடன் எழுந்து கமலியின் அருகில் வந்து அவளுடைய கைகளைப் பிடித்துக்கொண்டு, ''என் கண்ணே குழந்தாய்! உன் தங்கச்சி சொல்வது உண்மை தானா? அப்படியானால் நீ எனக்கு அந்தச் சுரங்க வழியைக் காட்ட வேணும். இந்த உதவியை என் ஆயுள் உள்ளவரை மறக்க மாட்டேன்'' என்றார்.

''ஆகட்டும், சித்தப்பா! ஆனால், சமயம் பார்த்துத்தான் உங்களைச் சுரங்க வழிக்கு அழைத்துப் போக வேண்டும். அங்கே பலமான காவல் இருக்கிறது!'' என்றாள் கமலி.

மூன்று தினங்களாக அசுவபாலர் அநேகமாக யோக மண்டபத்திலேயே காலங் கழித்து வந்தார். மண்டபத்திலிருந்து அடிக்கடி மணிச் சப்தமும் கலகலத்தொனியும் பேச்சுக் குரலும் கேட்டுக்கொண்டிருந்தன.

நாலாம் நாள் இரவு ஜாமத்தில் ஆயனர் தூக்கம் பிடிக்காமல் பலகணியின் வழியாக அரண்மனைத் தோட்டத்தை எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தபோது, நிலா வெளிச்சத்தில் ஓர் அதிசயமான காட்சியைக் கண்டார். தோட்டத்தின் வழியாக நல்ல ஆஜானுபாகுவான ஆகிருதி உடைய ஒருவரை இரண்டு புறத்திலும் இரண்டு பேர் கையைப் பிடித்து நடத்திக் கொண்டு வந்தார்கள். நடுவில் இருந்தவரின் கண்கள் துணியினால் கட்டப்பட்டிருந்ததாகக் காணப்பட்டது.

இன்னும் சிறிது உற்றுப் பார்த்தபோது, நடுவில் நடந்து கொண்டிருந்த ஆஜானுபாகுவான உருவம் ஒரு புத்த பிக்ஷுவின் வடிவமாகக் காணப்பட்டது. அந்த உருவம் ஆயனருக்கு நாகநந்தியை நினைவூட்டியது. ஒருவேளை நாகநந்திதானோ அவர்? ஊர் வதந்தியின்படி இந்தப் புத்த பிக்ஷுவுக்காகத்தான் புலிகேசி இத்தனை நாள் காத்துக் கொண்டிருந்தாரோ? நாகநந்தியை அதற்காகத்தான் சுரங்க வழியாக அனுப்புகிறார்களோ? அப்படியானால் நாகநந்தி போய்ச் சேர்ந்ததும் புலிகேசி புறப்பட்டு விடுவாரல்லவா? ஆஹா! எப்பேர்ப்பட்ட அருமையான சந்தர்ப்பம் கை நழுவிப் போய்க் கொண்டிருக்கிறது.

நாகநந்திக்கும் புலிகேசிக்கும் உள்ள உருவ ஒற்றுமை ஆயனருடைய மனத்திலும் அப்போது தென்பட்டது. நாகநந்தியடிகள் உண்மையில் யாராயிருக்கலாம்...? இவ்விதம் பற்பல எண்ணங்களினால் அலைப்புண்ட ஆயனர் அன்றிரவு தூங்கவே இல்லை.

பொழுது புலரும் சமயத்தில் யோக மண்டபத்திலிருந்து வீட்டுக்கு வந்த அசுவபாலர் ஆயனரைப் பார்த்தார். ''என்ன சிற்பியாரே! இரவெல்லாம் நீர் தூங்கவில்லை போலிருக்கிறது!'' என்றார். ''ஆம் ஐயா! தோட்டத்தில் உங்களுடைய யோக மண்டபத்தில் இரவெல்லாம் ஒரே கலகலப்பாயிருந்ததே! என்ன விசேஷம்?'' என்று ஆயனர் கேட்டார்.

அசுவபாலர், ''கலகலப்பாவது, ஒன்றாவது? ஒருவேளை நீங்கள் கனவு கண்டிருப்பீர்கள்'' என்று சொல்லிவிட்டு, ''நண்பரே, ஆனால் ஒன்று உண்மை. நேற்றிரவு யோக சாதனத்தில் நான் ஓர் அபூர்வமான அனுபவத்தை அடைந்தேன். அதை உடனே போய்ச் சக்கரவர்த்தியிடம் சொல்லிவிட்டு வர வேண்டும்!'' என்று கூறி விரைந்து வெளியே சென்றார்.

அவர் போய்ச் சில நிமிஷத்துக்கெல்லாம் கமலி வந்து ஆயனர், சிவகாமி இருவரையும் அவசரப் படுத்தினாள். ஏற்கெனவே முடிவு செய்திருந்தபடி முக்கியமான துணிமணிகளை



அருள்வாக்கு

'ராமன்' என்றாலே ஆனந்தமாக இருப்பவன் என்று அர்த்தம்; மற்றவர்களுக்கு ஆனந்தத்தைத் தருகிறவன் என்று அர்த்தம். எத்தனை விதமான துக்கங்கள் வந்தாலும், அதனால் மனம் சலனம் அடையாமல் ஆனந்தமாக தர்மத்தையே அநுசரித்துக் கொண்டு ஒருத்தன் இருந்தான் என்றால் அது ஸ்ரீ ராமன்தான். வெளிப் பார்வைக்கு அவன் துக்கப்பட்டதாகத் தெரிந்தாலும், உள்ளுக்குள்ளே ஆனந்தமாகவே இருந்தான்.



சுக துக்கங்களில் சலனமடையாமல், தான் ஆனந்தமாக இருந்துகொண்டு, மற்றவர்களுக்கும் ஆனந்தத்தை ஊட்டுவதுதான் யோகம். அப்படியிருப்பவனே யோகி. இவ்வாறு மனசு அலையாமல் கட்டிப் போடுவதற்குச் சாமானிய மனிதர்களுக்கான வழி, வேத சாஸ்திரங்களில் சொல்லியிருக்கிற தர்மங்களை ஒழுக்கத்தோடு, கட்டுப்பாட்டோடு பின்பற்றி வாழ்வதுதான். சொந்த விருப்பு வெறுப்புக்கு இலக்காகாமல் வேதம் விதிக்கிற தர்மப்படி வாழ ஆரம்பித்துவிட்டால், தானாகவே மனசின் சஞ்சலம் குறைந்து, அது தெளிய ஆரம்பிக்கும். இந்தத் தெளிவால் மனசு எப்போதும் ஆனந்தமாக இலேசாக இருக்கும். இந்த சித்த சுத்தி மோக்ஷத்திலேயே கொண்டு சேர்த்துவிடும்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்

ஒரு ஓலைப் பெட்டியில் எடுத்து வைத்துக்கொண்டு, எந்த நிமிஷமும் கிளம்புவதற்கு அவர்கள் சித்தமாக இருந்தார்கள். எனவே, உடனே மூவரும் கிளம்பி அரண்மனைத் தோட்டத்திலிருந்த மண்டபத்துக்குள் சென்றார்கள். மண்டபத்தின் மத்தியில் இருந்த சிவலிங்கத்தைக் கமலி லாகவமாக அப்புறம் நகர்த்தினாள். லிங்கம் இருந்த இடத்தில் சுரங்க வழியின் படிக்கட்டுக் காணப்பட்டது.

கமலி ஆயத்தமாக வைத்திருந்த தீபத்தை எடுத்து ஆயனரிடம் கொடுத்து, "சித்தப்பா, சீக்கிரம்!" என்றாள். ஆயனர் தீபத்தை வாங்கிக்கொண்டு சுரங்க வழியின் படிக்கட்டில் இறங்கினார்.

சிவகாமி கமலியை ஆர்வத்துடன் கட்டிக்கொண்டாள். இருவருடைய கண்களிலும் கண்ணீர் ததும்பிற்று.

"அக்கா! போய்வருகிறேன்!" என்று தழுதழுத்த குரலில் கூறினாள் சிவகாமி.

"தங்கச்சி! போய்வா! மறுபடி காஞ்சிக்குத் திரும்பி வரும்போது பல்லவ குமாரரின் பட்ட மகிஷியாகத் திரும்பி வர வேண்டும்!" என்று கமலி ஆசி கூறினாள்.

"அக்கா! நான் திரும்பி வரும்வரை எனக்காகச் சின்னக் கண்ணனுக்குத் தினமும் ஆயிரம் முத்தம் கொடு!" என்றாள் சிவகாமி.

கமலி சிரித்துக்கொண்டே, "அவன் மூச்சு முட்டிச் சாக வேண்டியதுதான்!" என்றாள்.

சிவகாமி சுரங்கப் படியில் இறங்கிய போது அவளுடைய உள்ளம் பதை பதைத்தது. மார்பு படபட என்று அடித்துக்கொண்டது. ஒளி நிறைந்த குதூகலமான உலகத்திலிருந்து இருளும் ஐயமும் பயங்கரமும் நிறைந்த ஏதோ பாதாள உலகத்துக்குப் போவது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது.

அந்த உணர்ச்சியை மனோதிடத்தினால் போக்கிக்கொண்டு ஆயனரின் பின்னால் நடந்தாள்.

இருளடர்ந்த சுரங்கப் பாதையில் ஆயனரும் சிவகாமியும் ஏறக்குறைய ஒரு முகூர்த்த நேரம் நடந்தார்கள். இவ்வளவு நேரமும் அவர்களுக்குள் அதிகமான பேச்சு ஒன்றும் நடைபெறவில்லை.

அடிக்கடி ஆயனர் நின்று சிவகாமி

யின் கையைப் பிடித்து "இனி அதிக தூரம் இராது. அம்மா! சீக்கிரம் வழி முடிந்து விடும்!" என்று தைரியப்படுத்திக் கொண்டு போனார்.

ஒரு முகூர்த்த நேரத்துக்குப் பிறகு, திடீரென்று வெப்பம் மாறி ஜில்லிப்பு உணர்ச்சி ஏற்பட்டது.

"அம்மா, சிவகாமி! கோட்டைக்கு வெளியே வந்து விட்டோம். அகழியைக் கடக்கிறோம்!" என்றார். ஒருகணம் அங்கே நின்று, "குழந்தாய்! இங்கேதான் நான் வேலை செய்ததாக ஞாபகம் இருக்கிறது. அகழித் தண்ணீர் உள்ளே வராமல் வெகு சாதுரியமாக இங்கே வேலை செய்ய வேண்டியிருந்தது. அதோடு இல்லை. ஏதாவது ஆபத்துக் காலங்களில் இந்தச் சுரங்க வழியை மூடிவிடவும் இங்கேதான் உபாயம் இருக்கிறது. அதோ, பார்த்தாயா? அந்த அடையாளமிட்ட இடத்தில் ஒரு கல்லை இலேசாகப் பெயர்த்தால், அகழி ஜலம் கடகடவென்று உள்ளே புகுந்து விடும். அப்புறம் வெளியிலிருந்தும் உள்ளே போக முடியாது. உள்ளேயிருந்தும் வெளியே போக முடியாது!" என்றார்.

"நல்லவேளை! அப்படி ஏதாவது ஏற்படுவதற்கு முன்னால் நாம் வெளியே போய்விடுவோமல்லவா?" என்றாள் சிவகாமி.

அதற்குப் பிறகு இன்னும் ஒரு முகூர்த்த நேரம் வழி நடந்த பிறகு, மேலேயிருந்து வெளிச்சம் வருவதைக் கண்டார்கள்.

"ஆ! சுரங்க வழி முடிந்துவிட்டது" என்றார் ஆயனர்.

இருவரும் படிகள் வழியாக மேலே ஒளிவந்த இடத்தை நோக்கி ஏறிச் சென்றார்கள்.

அவர்கள் ஏறி வந்து நின்ற இடம் ஒரு சின்ன மலைப்பாறையில் குடைந்து அமைக்கப்பட்ட சமணர்களின் குகைக்கோயில், ஜைன தீர்த்தங்கரர்களின் பெரிய பிரதிமைகள் மூன்று அங்கே காணப்பட்டன. ஆனால் என்ன பயங்கரம்? காபாலிகர்கள் அந்தச் சமணக் குகையை ஆக்கிரமித்து விட்டதாகத் தோன்றியது. எங்கே பார்த்தாலும் மண்டை ஓடுகள் சிதறிக் கிடந்தன.

போதாததற்கு, மூன்று தீர்த்தங்கரர்களின் சிலைகளுக்கு அப்பால் நாலாவது சிலையாகக் கண்ணை மூடிக்கொண்டு ஒரு காபாலிகன் உட்கார்ந்திருந்தான். உடம்பெல்லாம் சாம்பலைப் பூசிக்கொண்டு மண்டை ஓட்டு மாலை அணிந்திருந்த அவனுடைய தோற்றம் பார்ப்பதற்கு மிகக் கோரமாயிருந்தது.

ஆனால், நல்ல வேளையாக அவன் கண்களை இறுக மூடிக் கொண்டு யோக நிஷ்டையில் உட்கார்ந்திருந்தான்.

ஆயனரும், சிவகாமியும் இரண்டாவது தடவை அவனைப் பார்க்காமல் பாறையின் படிகள் வழியாக இறங்கி விரைந்து சென்றார்கள்.

கொஞ்ச தூரம் சென்ற பிறகு, "அப்பா! இதென்ன? சமணர் குகைக் கோவிலில் காபாலிகன் வந்து உட்கார்ந்திருக்கிறானே?" என்று சிவகாமி கேட்டாள்.

"அம்மா! இந்தப் பாறை ஒரு காலத்தில் சமணப் பள்ளியாக இருந்தது. மகேந்திர பல்லவரிடம் கோபித்துக் கொண்டு சமணர்கள் - இந்த நாட்டை விட்டுப் போய் விட்டார்களல்லவா? கோட்டை முற்றுகைக்கு முன்னால் காஞ்சி நகரிலுள்ள காபாலிகர்களையெல்லாம் வெளியில் துரத்தியபோது இந்தக் குகையை அவர்கள் பிடித்துக் கொண்டார்கள் போலிருக்கிறது! அவர்களுக்கு யுத்தம் என்றால் கொண்டாட்டந்தானே! கபாலங்கள் ஏராளமாய்க் கிடைக்குமல்லவா?"

இப்படிப் பேசிக் கொண்டு ஆயனரும், சிவகாமியும் காட்டுப் பிரதேசத்தின் வழியே நடந்து போனார்கள். கொஞ்ச தூரம் போவதற்குள்ளே, அவர்களுக்கு எதிர்ப்புறத்திலிருந்து பலர் கும்பலாக வரும் பெரு முழக்கம் கேட்டது. சில நிமிஷத்துக்கெல்லாம், ஒரு பெருங் கும்பல் அவர்கள் கண் முன்னால் எதிர்ப்பட்டது. அப்படி வந்தவர்கள் வாதாபிப் படையைச் சேர்ந்த வீரர்கள்தான்! அவர்களுக்கு மத்தியில் தூக்கிப் பிடிக்கப்பட்டிருந்த வராகக் கொடியிலிருந்து இது தெளிவாகத் தெரிந்தது.

(தொடரும்)

புன்னகை பூமி 3

பத்துக் கை சிவனும் புராதன நடனமும்!

இந்திய புத்த பிட்சுக்களும், பிராமணர்களும் இந்து சமயத்தைப் பரப்பியதற்கும், இந்திய மன்னர்கள் ஆண்டதற்கும், நான்கு வகையான ஆதாரங்கள் இருக்கின்றன. முதலாவதாக நூல் குறிப்புகள். இரண்டாவது தர்க்க ரீதியாய்ச் சில அனுமானங்கள். மூன்றாவது தொல் பொருள் ஆராய்ச்சியில் கிடைத்த ஆதாரங்கள். நான்காவது முக்கிய ஆதாரம், இந்த இருபத்து



இரண்டாவது நூற்றாண்டிலும் தாய்லாந்தில் இருக்கும் இந்தியத் தாக்கம்.

இந்த இருட்டுச் சரித்திரத்துக்கு நூல் குறிப்புகள் மூலம் ஜன்னலைத் திறந்து காண்பித்தது சீனர்கள்தான். அவர்கள் எழுதிய நூல் குறிப்புகளில் இந்த சரித்திரத்திற்கு ஏராளமான ஆதாரம் இருக்கிறது. ஆனால் ஒரே ஒரு சங்கடம். கட்டபொம்மனிடம் செந்தமிழ் பேசும் வெள்ளையர்கள் மாதிரி, சீனர்கள் தங்கள் 'நூடுல்ஸ்' வாயால் உச்சரித்து எழுதிய 'கெஷ்கே பிஷ்கே' பெயர்களிலிருந்து ரொம்ப மெனக்கெட்டு, தர்க்க ரீதியாக, ஆராய்ச்சியாளர்கள் தெற்கு ஆசியச் சரித்திரத்தோடு இணைத்திருக்கிறார்கள். மஹாவம்சம் என்னும் இலங்கையின் சரித்திரக் குறிப்புகளில் சோனா, உத்தரா எனும் இரு புத்த பிட்சுக்கள் வந்ததன் குறிப்பு இருக்கிறது. பனாரசிலிருந்தும், காஞ்சிபுரத்திலிருந்தும், வணிகர்கள் கடல் கடந்து வந்து தாய்லாந்தில் வணிகம் செய்ததன் தகவல்கள் அடங்கிய ஆவணங்கள், பனாரஸ் சமஸ்கிருதப் பல்கலைக் கழக நூலகத்தில் இருப்பதாயும், அவை இன்னும் ஆராயப்படாமல் இருக்கின்றன என்றும் தாய்லாந்தின் முன்னாள் இந்தியத் தூதுவரான ரொமேஷ் பண்டாரி ஒரு கட்டுரையில் தெரிவித்திருக்கிறார். ஸ்ரீசக்கரா என்னும் தாய்லாந்து ஆய்வாளர்,

* பத்துக் கை சிவன்



தாய்லாந்தில் உள்ள காஞ்சநாக புரியில் இந்தியர்கள் வந்து தங்கிய தன் அத்தாட்சிகள் இருப்பதாக எழுதியுள்ளார்.

இரண்டாவது, தர்க்க ரீதியான ஊகங்கள். தெற்கு ஆசிய நாடுகளில் உள்ள இடங்களின் பெயர்கள் இந்தியாவில் உள்ள சில இடங்களோடு ஒத்துப் போகின்றன. மலேயர்கள் இந்தியர்களை குறிப்பிட்ட

* கருடர் மேல் மகாவிஷ்ணு



சொல்லான 'க்ளிங்' என்பது இந்தியாவின் 'கலிங்கா' என்றும், பர்மாவில் இந்தியர்களைக் குறிப்பிட உபயோகப்படுத்தப்பட்ட 'தாலைங்' என்பது 'தெலுங்கானா' மக்கள் என்று சொல்கிறார்கள் ஜார்ஜ், கோடிஸ் என்னும் பிரான்சு நாட்டு ஆய்வாளர்கள். மஜூப் என்னும் இந்திய ஆய்வாளர், மிகப் பழை யான சமஸ்கிருத எழுத்து வடிவத்தோடு, தெற்கு ஆசியாவின் எழுத்து வடிவம் ஒத்துப் போவதை நிரூபித்திருக்கிறார். இதை நீலகண்ட சாஸ்திரி மறுத்து பல்லவர்களின் 'கிரந்த' எழுத்து வடிவத்தோடு இருக்கும் ஒற்றுமையைக் காட்டுகிறார். கெமர் கோயில்களின் வடிவமைப்பில் பல்லவர்களின் மாமல்லபுரக் கோயில்களின் வடிவமைப்பும், இன்னும் சில பகுதிகளில் குப்தர்களின் தாக்கமும் தெரிகிறது.


மூன்றாவது, புதை பொருள் ஆராய்ச்சியில் கிடைத்த ஆதாரங்கள். இதுவரை இருநூறுக்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. தாய்லாந்தில் நகோன் பதும் என்கிற இடத்தில் கண்டெடுக்கப்பட்ட புதை பொருட்களில் புத்தர் உருவம் இல்லாத புத்தமத முத்திரைகள் கண்டெடுக்கப்பட்டன. இவை புத்தரின் உருவ அமைப்பு நிர்ணயிக்கப்படாத கி.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்தவை. ஆகையால் இரண்டாம் நூற்றாண்டில் இந்தியத் தொடர்பு ஏற்பட்டது ஊர்ஜிதமாகிறது. இதுபோன்ற ஆதாரங்கள் தாய்லாந்திலும், தெற்கு ஆசியாவின் மற்ற நாடுகளிலும் இறைந்து கிடக்கின்றன. அவற்றைப் பட்டியலிட்டு போரடித்தால் அடுத்த வாரத்திலிருந்து இந்தப் பக்கம் எட்டிப் பார்க்க மாட்டீர்கள் என்பதால் ஒன்றிரண்டு மட்டும்...

* ஸ்ரீதெப்பில் ஒரு வைணவக் கோயிலில், பத்துக் கைகள் கொண்ட சிவ பெருமான்

ஆனந்த் ராகவ்



• இந்திரன்



• சிவ-பார்வதி

நடனம் ஆடும் காட்சி, கிழக்குப் புற மண்டபத்தில் இருக்கிறது. சிவனின் தலை அலங்காரமும், சிவனின் பின் செதுக்கப்பட்டுள்ள வளைவு அலங்காரங்களும், நிச்சயமாகத் தமிழ்நாட்டு சிற்பக்கலையைச் சார்ந்து உள்ளதாக ஆராயச்சிக் குறிப்புகள் சொல்கின்றன.

• இடிபாடுகளில் மகா விஷ்ணுவின் அனந்தசயனம் இருக்கிறது. இந்த அனந்த சயனம் தாய்லாந்தில் மிகப் பிரபலம். இந்த சிற்ப வடிவம் கோயிலின் முகப்பில் கற்களோடு ஒன்றாய் நிராகரிக்கப்பட்டு கிடந்ததாம். யாரோ இதைத் திருடி, அமெரிக்காவில் சிக்காகோ கலைக் கூடத்திற்கு விற்று விட்டார்களாம். போராடிக் கொணர்ந்து கோயிலில் மறுபடி பொருத்தியிருக்கிறார்கள்.

• கோயிலின் தெற்குப் பகுதி மண்டபத்தில் சிவனும், பார்வதியும் நந்தி மேல் அமர்ந்திருக்கும் சிலை வடிவம் இருக்கிறது.

• கோயில் மண்டபத்தின் தெற்குப் பகுதியில் ராமனும் இலக்குவனும் விராடனுடன் போரிடும் காட்சி வடிக்கப்பட்டிருக்கிறது.

• கோயில் மண்டபத்தில் ராமனும் இலக்குவனும் இந்திரஜித்தின் நாகாஸ்திரத்தால் கட்டுண்டு கிடக்கும் ராமாயணக் காட்சி ஒன்று சிலை வடிவில் இருக்கிறது. சீதா ராமரின் தலையை மடியில் கிடத்திக் கொண்டு கிடக்க, வானரப் படை இடது ஓரத்தில் மேகங்களின் உள்ளே ஒளிந்திருக்கும் இந்தரஜித்தைச் சுட்டிக் காட்டுகின்றன.

• ப்ரசாட் நாராய் ஜியங் வங்க் என்னும் பதினோராம் நூற்றாண்டுக் கோயில் முவங் மாவட்டத்தில் இருக்கிறது. நாராய் ஜியங் வங்க் என்ற சொல்லுக்கு 'நீண்ட கால்களை உடைய நாராயணன்' என்ற பொருள். கோயிலுக்கு இந்தப் பெயர் வரக் காரணமாயிருப்பது கோயிலில் உள்ள விஷ்ணுவின் அனந்தசயன சிற்பம். நாராயணன் பெயரில் கோயில் இருந்தாலும், கோயிலின் உள்ளே பன்னிரண்டு கைகள் கொண்ட சிவன் உருவம் இருக்கிறது.

• சூரின் மாவட்டத்தின் 'ப்ரசாட் பான் பலுவங்' என்னும் பதினொன்றாம் நூற்றாண்டுக் கோயில் பாதி கட்டப்பட்டு கைவிடப்பட்டிருக்கிறது. இந்தக் கோயிலில் கிருஷ்ண பகவான் கோவர்த்தன மலையைக் கையால் தூக்கும் காட்சி வடிக்கப்பட்டிருக்கிறது. மூன்று தலை கொண்ட யானை மீது அமர்ந்திருக்கும் இந்திரனின் சிலை இருக்கிறது.

• சிவனும் உமையும் நந்தி மேல் அமர்ந்திருக்கும் காட்சியும், விஷ்ணுவின் அனந்த சயனமும் உள்ளன.

• ப்ரஹா விஹார் கோயிலின் இடிபாடுகளில், பாற்கடலில் மந்தர மலையை நட்டு, வாசுகியால் கடையும் காட்சி அற்புதமாகச் செதுக்கப்பட்டுள்ளது.

இது போன்ற கோயில் இடிபாடுகளில் இருக்கும் இந்துக் கடவுள்களின் சிலைகள் இங்கே ஓர் இந்தியாவே இருந்ததற்கு அத்தாட்சி அளிக்கின்றன. சிவன், விஷ்ணு, பிரம்மா வழிபாடு வெறும் கோயில் இடிபாடுகளின் இடையே இடுங்கி விடவில்லை. இந்த இருபத்து இரண்டாம் நூற்றாண்டிலும் தாய்லாந்தில் தொடர்கிறது.



• பாற்கடலைக் கடைந்து...

வட்டமேஜை



டிப்ஸ் டிப்ஸ்ஸோ!

✉ சில ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவுக்கு வருகை தந்த போப் ஜான்பால் (II) பேசியது நினைவிருக்கும். முதலாவது ஆயிரம் ஆண்டுகளில் ஐரோப்பாவைக் கிறிஸ்துவமாக்கினோம். இரண்டாவது ஆயிரம் ஆண்டுகளில் ஆப்பிரிக்காவை மாற்றினோம். இந்த மூன்றாம் ஆயிரத்தில் ஆசியாவை கிறிஸ்துவ மயமாக்குவது நமது கொள்கையாக இருக்க வேண்டும் என்றார். எனது பள்ளி நண்பன் கிறிஸ்துவனாக மாறியதும் சொன்னது (துரைராஜன் டு தாமஸ் துரை) இன்னொரு பொன்மொழி: பாதிரியார் என் வீட்டின் உள்ளே வந்தபோது அவர் கைகளில் பைபிள் இருந்தது. அவர் வெளியே போனபோது என் கையில் பைபிள் இருந்தது. அதேசமயம் என்னை விட்டு ஏதோ மறைந்ததை உணர்ந்தேன் என்றான். கடும் உண்மை! இவர்கள் சமூக சேவையோடு நின்றால் பரவாயில்லை.

சென்னை - 92, கிருஷ்ண ராஜ்கோபால்.

✉ தலையங்கம் மிகத் தெளிவாக எழுதப்பட்டிருந்தது. மக்களின் அடிப்படை பிரச்னைகளைத் தீர்க்காத ஓர் அரசு, அவர்கள் போராட முனையும்போது சட்டம் போட்டு அவர்களைத் தனிமைப்படுத்துவது ஒரு தற்காலிக அரசியல் கணக்காக இருக்கலாம். ஆனால் அரசின் இந்த சர்வாதிகாரப் போக்கினால் வரும் காலங்களில் எதிர் விளைவுகளே ஏற்படும்!

திருவாரூர், ஆர். ராமசுப்ரமணி.

✉ ஆப்பிரிக்கத் தலைவர்களில் புகழ் பெற்ற ஜொமோ கென்யாட்டா சொன்னதை நினைவு கூருங்கள். "ஐரோப்பியர் ஆப்பிரிக்காவுக்கு வந்தபோது எங்கள் கையில் நாடும், அவர்கள் கையில் பைபிளும் இருந்தன. அவர்கள் எங்களுக்குப் பிரார்த்தனை செய்யக் கற்றுக் கொடுத்தனர். நாங்கள் தியானம் முடிந்து, கண்களைத் திறந்து பார்த்த போது, எங்கள் கையில் பைபிளும், அவர்களிடம் நாடும் இருந்தது!" - இதுதான் மதமாற்றுச் சரித்திரம் உலகமெங்கும் செயல்பட்ட விதம். இதன் பயனாக உள்நாட்டுக் கலக சூழ்நிலை உருவாகும். முன்னேற்றம் தடைப்படக் கூடும். மதச் சார்பின்மையைக் கடைபிடிக்கும் போலித்தனம் வெகு நாட்களுக்குச் செல்லு படியாகாது என்று தான் தோன்றுகிறது.

சென்னை - 87 எம்.ஏ. ராஜேந்திரன்.

✉ மேரி ராஜேந்திரனின் 'மானம் காக்கும்' மனிதாபிமான சேவை பாராட்டுக்குரியது.

சென்னை - 73, கே.வி. ராமன்.

✉ ஆடை டிப்ஸ் தந்த சிங்காரி சிநேகா அட்டைப்படத்தில் முகத்தை மட்டும் காட்டுகிறாரே, ஏன்? அவருக்கு யார் டிப்ஸ் தருவது?

சென்னை - 14,

கவிஞர் அய்யாறு வாசுதேவன்.

✉ மெஹுராணி செல்லம் வழங்கிய '4 நிமிட சுவை' பயனுள்ள இணைப்பு.

குருந்தம்பட்டு, அ. மாணிக்கவாசகம்.

✉ திருக்கோயில்கள், திருத்தேர்கள், அலங்கார ஆடை பற்றிய அரிய தகவல்கள், ஆடைச் சிறப்பிதழுக்கு அம்சமாகப் பொருந்தியது.

திருவண்ணாமலை, ஆர்.ஆர். ராமசாமி.

✉ 'பாச நெருப்பூ' - வைட்டமின் சிறுகதையில் நெல்லை மாவட்ட மண் வாசனை நெகிழ வைத்தது.

நெய்வேலி, க. சுந்தர்.

• ஸ்ருதிகா

என்னவோ தனக்கு அதில் சுவையில்லாத மாதிரியும், நேயர்களுக்காகவே இசைப்பது போலவும் சன் டீ.வியில் ஆக்டிங் கொடுத்தார் குன்னக்குடி வைத்தியநாதன். சிறுவர்கள் "படையப்பா பாட்டு பாடுங்க" என்பதுபோல் கேட்கக் கேட்க இவர் சரியென்று வாசிக்கிறாராம். ஒரு ஷாட்டில் கூட, சிறுவர்களும் இவரும் சேர்ந்து வராததும், பாட்டுக்குப் பாட்டு குன்னக்குடியின் உடை மாறியதும் எல்லாமே செட்டப் என்பதை ரொம்பவும் வெளிச்சம் போட்டுக் காண்பித்தன. மற்றபடி தான் 'வில்வித்தை'யில் சூரர் என்பதை மீண்டும் நிரூபித்தார். முக்கியமாக 'உன்னை நான் சந்தித்தேன்'. ஆஹா!




நல்ல நாள் என்றால் நல்ல சேதிகள் மட்டும்தான் தர வேண்டும் என்றால் எப்படி? சன் நியூஸில் தீபாவளியன்று காலையில் புதை மணல் விபரீதம், பூகம்ப அபாயம் என்று பல செய்திகளை சாங்கோபாங்கமாகக் காட்டினார்கள் ஜெயா டீ.வி. தன் பங்குக்கு தான் விரைவில் கட்டணச் சானலாக ஆகப் போகும் செய்தியை அறிவித்தது!

"பஞ்ச பூதங்களில் நீரும் பூமியும் கீழ்நோக்கிச் செல்பவை. ஆகாயமும் காற்றும் மேல் நோக்கிச் செல்பவை. நெருப்பு மட்டும்தான் இரண்டையும் இணைப்பது. கீழே வைத்தாலும் ஜோதி மேல் நோக்கி எரியும். எண்ணெய் விளக்கு போலவே நம் எண்ண விளக்கும் கீழான எண்ணங்களிலிருந்து மேல் நோக்கிச் செல்ல வேண்டும்" என்றார் சுகி சிவம், தீபாவளிக்குப் பொருத்தமாக. இறைவன் உண்மையின் (சத்யபாமா) துணையுடன் தீமையை (நரகன்) வென்ற நாளே தீபாவளி என்றார்.

தனக்கு ஒரு முறை கோபம் வந்தபோது கையில் கிடைத்த பொருளை தூக்கிப் போட்டதாக ரம்பா சொன்னாலும் சொன்னார். ஸ்டார் விஜய்யில் அதை வைத்துக் கொண்டே முதல் வணக்கத்தில் கலாய்த்து

"துறு துறு கண்கள், அழகான மீசை..."

விட்டார்கள். ரம்பா சொந்தக் குரலில் சினிமாவில் பேசாததற்குக் காரணம் அவரது குறைவான தமிழ்வளம் (இந்தக் குறை பேட்டியில் நன்றாகவே வெளிப்பட்டது) என்று நாம் நினைத்திருக்க, அவரோ வேறொரு வித்தியாசமான காரணத்தைச் சொன்னார். "அதுக்கு வேற மூன்று நாள் செலவழிக்கணும். தவிர டப்பிங்குக்கு பேமன்ட் அப்புறம் தரேன்னு சொல்லி இழுத்தடிப்பாங்க" என்றார்.



• விஜய் ஆதிராஜ்

கே.டி.வி.யில் சின்னத்திரை நட்சத்திரங்கள் பங்கேற்ற ஒரு நிகழ்ச்சிக்கு கங்கை அமரன் தலைமை தாங்க, அதே நேரத்தில் ஸ்டார் விஜய்யில் அவர் மகன் பிரபுவும், ஜேசுதாஸ் மற்றும் எஸ்.பி.பி.யின் வாரிசுகளும் பங்கேற்ற ஒரு லைவ்லியான நிகழ்ச்சி! (சன், கே, ஸ்டார் விஜய் என்று எல்லா சானல்களின் தீபாவளி நிகழ்ச்சிகளிலும் சரண் பங்குபெற்றார். குரலில் அப்பாவின் சாயல் சரணுக்கு கிட்டத்தட்ட அப்படியே வந்துவிட்டது. சாரீரத்தோடு ஒற்றுமை நிற்கட்டும்.)



• சரண்

கர்நாடக இசைக் கலைஞர்களைப் பற்றி பலரைப் போலவே விஜய் ஆதிராஜுக்கும் ஓர் எண்ணம் இருந்திருக்க வேண்டும். அதனால்தான் சுதா ரகுநாதன் "உங்களுக்குன்னு துறுதுறு கண்கள், அழகான மீசைன்னு இருக்கில்லையா, அந்த மாதிரி ஒவ்வொரு ராகத்துக்கும் ஒரு தனித் தன்மை உண்டு" என்று கூறியதும் சற்றே அதிர்ச்சியடைந்து, பின் வெட்கமாய்ச் சிரித்தார். அதுவும் ஓர் அழகான ராகமே!

'துறுதுறு ஜோதிகாவின் இடத்தைப் பிடிப்பது யார்?' என்ற உலக மகா கேள்விக்கு, இந்தத் தீபாவளியன்று பதில் கிடைத்தேவிட்டது. 'தேங்காய் சீனிவாசன் பேத்தி ஸ்ருதிகாதான்' அந்த 'துறுதுறுதுறு' என்று நிரூபிக்கும்படியாக, எந்தச் சானல் மாற்றினாலும் ஸ்ருதிகாவின் கிள்ளை மொழி பேட்டிதான். 'உங்களுக்குப் பிடித்த நடிகை யார்' என்று (ஜெயா டி.வி. காலை மலர்) கேட்கப்படவே, ஸ்ருதிகா யோசிக்கவேயில்லை. 'ஹேமமாலினி' என்று பழம்பெரும் நடிகையின் பெயரைச் சொல்லி, தப்பித்துவிட்டார். மீன் மாதிரி கண் அல்லவா... கழுவுற மீனில் நழுவுற மீன்!

— ஆதர்ஷ்





• ரம்பா

ரிமோட்



நீந்துங்க சிரிப்பலையில்!





ற்பனை: அனு
டங்கள்: சேகர்







நகராத்

நாள்பட காலம்பட, மனுச மக்களுக்கு மூப்பு வந்துவிடுகிறது. ஆனால் இடங்களுக்கு இளமை வந்துவிடுகிறது.

ரெண்டுமே நல்லதல்ல.

அது சரி, இதெல்லாம் நம்ம கையிலா இருக்கு? அது பாட்டுக்கு உலகம் சுத்திக்கிட்டுதானே இருக்கு. ஊர் சுத்தும் பிள்ளைங்களைப் போல, சொன்னா அது- அதுங்க கேக்கப் போகுதா?

அட, அந்த வயகல நாம அடங்கினமா?

எம் பையன் ப்ளஸ் - டூ. முளைச்சு மூணிலை விடல. அதென்ன மூணிலையோ? தெர்ல. முகத்தில் உதடுக்கு மேல் அவனும் தினசரி தேடித் தேடிப் பார்க்கிறான் மீசையை என்றாலும் ஆம்பளை சிலிர்ப்புகளுக்கு பாவனைகளுக்கு வஞ்சனையே கிடையாது.

கூடப் படிக்கிற பெண் யாரோ ஒருத்தி, பார்த்தேனே, தள்ளியிருந்து அவளை... தமிழ் முகம்தான். ஒட்டடைக்குச்சியா... தலையை இறுக்கமா வாரி, பரபரப்பாய் முகம் வியர்க்க பயத்துடன் தெருவைக் கடந்து குடுகுடுவென்று ஓடியது... இவன் பிளஸ் - டூன்னா, அவள் ஒன்பதாங் கிளாஸ். தொலை தூரத்தில் இருக்கிற உறவுக்கார, சிநேகித மனுசர்களுக்கே லெட்டர் எழுத நேரம் இல்லை நமக்கு. இதோ அருகில் இருக்கிற இவளுக்கு... அவன்.. பாவி லவ் லெட்டர் குடுத்திட்டான்யா!

தமிழில் நாலு வார்த்தை வராதவன். படிப்பதற்குள் அவசரம். பிரின்சி... பல் இல்லாத பிரின்சிபல்லை எப்படிக் கூப்பிடுவது? அவர் கூப்பிட்டு 'என்னை' எச்சரித்தார் ஏதோ நான் லெட்டர் குடுத்தாப் போல.

என் பிள்ளைக்குத் தமிழே

தேரும் நகரத்தானும்

எஸ்.ஷங்கரநாராயணன்

தகராறு. தகராறுக்கு எந்த 'ர' எந்த 'று'ன்னே தெரியாது. லவ் லெட்டர். தமிழில், எனக்கு அதிர்ச்சியைவிட ஆச்சரியம். அதுவும் கவிதைப் பிரவாகம், புதுக்கவிதை.

மும்பை தமிழ்ச் சங்கத்தில் கவிஞனாய் அரங்கேற்றலாமா? - என்று பிரிச்சுப் பார்த்தால்...


ப்ரிய சஹீ...

உன்னைப் பார்த்தாலே எனக்குள் ஹீஹீ..

இதைக் கவிதையென நீ சஹீ. நான் மாட்டேன். இது கவிதை நஹி!

நான் காதலிக்கலியா என்ன? தேன்! காதல் தேன்... அதை அனுபவித்தேன். அந்தக் கதை இப்ப எதுக்கு? அது இருபது இருபத்தியொரு வயசில். இது? பதினாறு வயசில்... ப்ளஸ் டூ-வில். டூ மச்.

மாற்றங்கள், வாழ்க்கை மாற்றங்கள் சூழல் மாற்றங்கள், கிராமத்து ஆசாமி.



வேலை மாட்டியது சென்னையில். அப்புறம் ஊர் ஊராய்க் கூடாரம் போட்டு சர்க்கஸ். தற்போது பம்பாய், ஸாரி, அதன் இப்போதைய பெயர் - மும்பை! இதற்கும் எப்ப குட்-பை சொல்லப் போறேன், தெரியாது.

மதுரைதாண்டி அலுவலக வேலை நிமித்தம் பிரயாணம். ஆகா தமிழ்நாடு. இங்கே வந்தே ஆச்சு, அஞ்சு வருஷம் இருக்கும். சென்னை மண்ணை மிதித்ததுமே ஒரு சிலீர். ஒரு ரத்த குபுக். இந்த சுகம்லாம் என் பிள்ளைங்களுக்குக் கிடையாது என்று தோணுது. நான்சென்ஸ் என்பார்கள். ரயில் திருச்சியில் தடக்கென நின்றதும் எனக்குள்ளும் சிறு பூகம்பம். அட என் ஊர்... இங்கயிருந்து ஒரே மணி நேரம்.

அந்த மண்ணையும் பார்த்தா என்ன? உற்சாக அவசரத்துடன் பெட்டியை பிளாட்பாரத்தில் வீசி விட்டு, ஓடும் வண்டியில் இருந்து பொத்தென என்னையும் வெளியே வீசிக் கொண்டேன். மனம் "பழைய வானம், பழைய பூமி, எங்கும் புழுதி பறக்கிறது" என்று பாட்டெடுத்தது.

செவல்பட்டி. செம்மண், ஹவாய்ச் செருப்பு தாண்டி ஆட்டுப் புழுக்கை போன்ற சிறு சிறு கற்கள் குத்தும், மழை பெஞ்சா சர்ர்னு மண்ணே வழுக்கும்... ஏ.ஆர்.ரஹ்மான் 'தாய் மண்ணே வழுக்கும்'னு பாடலாம். சரளையில் கேட்கவே வேணாம்.

காதலித்து ஓடிப் போன வத்சலா. தினசரி மொட்டை மாடியில் பட்டையுரிக்கிற வெயிலில், அந்த 'வயசுப் பெண்ணை' வெயிலில் வத்தல் வடாம் உலர்த்தச் சொன்னால், காதலிக்காதவன் கூட ஓடிப் போவான். அந்த வயசில் அதை லட்சியக் காதல் எனக் கண்டேன். காதல் என்றால் ஓடிப் போக வேண்டியது கட்டாயம். ஓடிப் போகாத காதலர்கள் லட்சியவாதிகள் அல்லர், சோம்பேறிகள்.

பின்னொரு காலம் கல்லூரிக்கு திருச்சி வந்தபோது, அந்த வத்சலாவைப் பார்த்தேனே... 'எப்படி இருக்கே?' என்று கேட்கத் தேவையே இல்லை. வாடி வதங்கி வத்தலா ஆயிட்டியே வத்சலா.

பஸ் பஸ்ஸாய் ஏறி இறங்கி அப்பளம் விற்றுக் கொண்டிருந்தாள். லட்சிய அப்பளம்.

பஸ் தப்பான ரூட்ல போகுதோ என்றிருந்தது. எட்டிப் பார்த்தால் செவல்பட்டி என்று அம்புக்குறியுடன் தூண். வயல் பிரதேசங்களில் சிறு சிறு கற்கள் வெள்ளையடிக்கப்பட்டு, ஊரே காயடிக்கப்பட்டு விட்டது.

ஐயோ எங்க ஊர் கூட மாறுமா?

அட ஏரி காத்த மாமா. ஸாரி ராமா, இப்ப வயலைக்கூட காக்க வழியில்லாமப் போச்சேய்யா... ஏ... மாற்றங்கள், வறண்ட வயல்கள், வத்சலா போல இவையும் சிக்கிக் கொண்டு விட்டன. தப்பான பிடியில்..

வந்திருக்கப்படாதோ?

ஸ்டாப் என்று வண்டியை நிறுத்திக் குதிச்சிருவமா? வண்டி நிக்காட்டிக்கூட குதிச்சுடலாம். இப்ப தார் ரோடு. அத்தனைக்கும் அடி படாது.

அடி படட்டும். இப்ப நெஞ்சில் அடி விழுதேய்யா! அதைத் தாளவில்லையே.

பஸ் ஸ்டாண்டு போலும். "இறங்குங்க" என்கிறான் கண்டக்டர். என்னத்த இறங்கறது... இதே வண்டில திரும்பப் போயிறலாமா? சிம்பாலிக்காக வண்டி ரிவர்ஸ் எடுக்கிறது.

ஊரே 'வளர்ந்து' அழிகிறது. இது வளர்ச்சி அல்ல, வீக்கம். செயற்கைப் பூச்சு. மின்சார வெளிச்சம். சூர்ய வெளிச்சம் அல்ல.

எத்தனை அமைதியான ஊர். பணி ஓய்வு பெற்றதும் இங்க வந்துறலாம்னு ஒரு நினைப்பு இருந்தது. அந்த நினைப்பில் மண் விழுந்திட்டது. ஸாரி, தார் ரோடு விழுந்திட்டது. அமைதி ஊரைக் காலி பண்ணிப் போயிருந்தது.

பஸ் ஸ்டாண்டில் ஒரே சப்தம். வென்ரீக்கா வென்ரீக்கா... லாட்டரிச் சீட்டுக்கடையில் திண்டுக்கல் லியோனி. ஒண்ணுக்கடிக்க காசு வசூல். பி.சி.ஓ பக்கத்து ஊர்னா இப்பப் பேசலாம். 95 போடு. வேட்டி ஒழுங்காகக் கட்டத் தெரியாமல் திடீர் திடீரென்று அப்படியே நின்று, ஊருக்கே ஒரு செகண்டு கோமணத்தைக்

"டாக்டர்! தினமும் ராத்திரி தூக்கத்திலே வீட்டு வேலைகள், துணி துவைக்கிறது, தண்ணி இறைக்கிறது மாதிரி கனவுகள் வருது!"
"அதனால் என்ன?"
"காலையில் எழுந்திருக்கும்போது வேலை செய்த அசதி உடம்பில் உறுத்துதே!"

- கு. அருணாசலம்

காட்டிவிட்டு மூடிக் கொள்ளும் சனங்கள் இப்ப பேன்ட் என்ன சிகரெட் என்ன? குளிர்பானக் கடை.. காசுக்குத் தண்ணியை பாலிதீன் பாக்கெட்டில் விற்கிறார்கள்!

ஆ, கோமணத்தை எப்பப் பார்க்கப் போகிறேன்?

நான் அதற்காகவே பம்பாயில் இருந்து வந்திருக்கிறேன்.

ஸாரி. பம்பாய் அல்ல.. மும்பை...

மாற்றங்களைப் பார்த்துப் பார்த்துச் சலிச்சிட்டது. அதை விடடா என்றது மனசு ஆத்திரத்துடன். மாறாத ஏதாவது மிச்சம் இருக்கா? அதைத் தேடப்பா. யோசி.

நம்ம ஊர்னு அடையாளத்தைக் கிளறு. அக்கிரகாரம்லாம் போய்ப் பார்க்கவே வேண்டியதில்லை. அது நான் இருக்கும் போதே காணாமல் போச்சு. மரங்களையெல்லாம்... அவை எப்படி ஓடிப் போயின... தெர்ல. காணம். மாடியில் எத்தனை காக்கா வந்து உட்கார்ந்து இம்சைப்படுத்தும். இப்ப திவசப் பிண்டம் போட்டா எடுக்க காகா-ன்னு கத்தினாலும் வர நாதி கிடையாது. காக்கைகள் இறந்தவர்களின் ஆன்ம வடிவங்கள். அது வேற ஒண்ணுமில்லை. சாகிற போது எவனோ அந்தக் காலத்தில் தூய தமிழில் காப்பாத்து காப்பாத்துன்றதை "கா கா"ன்னு கத்தினதுனால வந்த பழக்கமா? இப்ப மனுசா இறந்தா கிராமத்துலேர்ந்து அந்த ஆத்மாகூட ஓடிப் போயிருதா?

ஆ, அந்தத் தேர்...! தேருக்கு என்னாச்சு? சக்கரம் பழுதாகி மராமத்து பண்ணாம அப்டியே நின்னு போச்சு. நான் ஓடிப் போறவரை அது சரி செய்யப்படவில்லை.

தேர் இன்னும் ஓடியிராது என்பதாய் ஒரு நம்பிக்கை.

தேரை, தரிசனம் செய்ய ஆசை வந்தது.



ஊருக்கு நடுவே - எங்க ஊரின் சோம்பேறிகளின் மிகப் பெரும் அடையாளம் அது. அரசியல் தலைவருக்கு சிலை வைக்கலியா, ஊருக்கு மத்தியில்... அதைப்போல.

இருக்கிறது. இருக்கிறது. தகரக் கூரை கறுத்து உம்மென்று இருந்தது. தூரத்தில் இருந்தே தெரிகிறது. அட, என் சோம்பேறி யானையே.. என்று ஆசையாய் அதைப் பார்க்கப் போகிறேன். இந்த மனுச மக்களில் ஆள் அடையாளம் தெரியவில்லை. "சார் யாரு?" என்கிறார்கள். எனக்கு இல்லை சார். என் துணிக்கு மரியாதை. நான் கேட்கிற நபர்களை அவர்களுக்குத் தெரியவில்லை. எல்லாரையும் சுடுகாட்டில் போய் விசாரிக்கச் சொல்கிறார்கள்...

பல மனுசர்கள் உயிரோடு செத்துப் போனார்கள் போலிருக்கிறதே... ஆமாம், நான் உட்பட!

தேரடியில் - ஆச்சரியம்! கண்டேன் சீதையை! அழுக்கு, பதினைந்து வருட அழுக்கு சுமந்த அந்த கடிகாரக்கடை. ராஜாமணியின் கடை. சீதை... அதாவது ஜானகியின் அப்பாவின் கடை. நான் லவ் பண்ணி... சொல்லாமல் விட்ட ஜானகி!

பஸ்ஸில் பக்கத்து சீட்டில் குண்டான ஆள் வந்து உக்காந்தாப் போல ஒரு பி...சி... ஓ.. ஓரமாய் பணிவுடன் எச்சிலைக்குக் காத்திருக்கும் நாய் போல, அந்த கடிகாரங்கள். அந்த ராஜாமணி இருந்தார். வழுக்கை தெரிய - தற்கால நிலையின் சிம்பாலிக் ஷாட் போல வழுக்கை - முன்பக்கம் குனிந்திருக்கிறார். ராஜாமணியா அவர் - பிச்சைக்காரமணி! கால விபத்தில்... கன்னத்தோடு அறை வாங்கி வீங்கிய கண் போல... கடிகாரத்தை உற்றுப் பார்க்கிற லென்ஸ் பொருத்தியிருந்தார். எதைத் தேடுகிறீர் ஐயா உள்ளே? உம் வாழ்க்கையையா? இத்தனை வருஷமாகவா?

பாவம் என நினைத்துக் கொள்கிறேன். ஜானகியின் அப்பாவாச்சே!

அழகி ஜானகி. அவளிடம் காதலைச் சொல்லியிருக்கலாம்.... சிறு மூக்குத்தி. பித்தளைதான். அவள் போட்டிருந்தாள். அதனால் அது அழகு பெற்றது. அவளுக்கு எது போட்டுக் கொண்டாலும் அழகு. என்னை விடு. ஜானகியும்... இந்த வழுக்கை - அப்பாவை நம்பியதற்கு பதில் ஓடிப் போக முயற்சி மேற்கொண்டிருக்கலாம். என் கூட!

செவல்பட்டியே அவள் அசோகவன

மாய் ஆகிவிட்டதா?

- கடிகாரம் என்றால் காலம் காட்ட வேணாமோ? சுத்தியும் மண்டை மண்டையாய் எத்தனை கடிகாரம்யா... ஒண்ணுகூட ஓடவில்லை. யாரோ தேசிய கீதம் பாடினாப்ல... அப்படியே முள்ளுகள் விறைத்து நிற்கின்றன. நிகழ்ச்சி முடியுமுன்னே தேசிய கீதமா?

ராஜாமணி. ஓடாத கடிகார மணி.

"சார் என்னைத் தெரியுதா?"

கடிகாரம் பார்க்கிற பூத லென்ஸ் கண்ணில். தவளைக் கண் போல. நிமிர்ந்து பார்க்கிறார். "தெர்லியே" என்கிறார். விடிஞ்சது போ! இத்தாம் பெரிய லென்ஸ். போட்டுக்கிட்டே என்னைத் தெர்லியே என்கிறார்!

"நான் குமரப்பன்... தாசில்தார் பழனிச்சாமி? அவர் மகன்..."

"அடேடே, தம்பி வாங்க. எத்தனை வருஷமாச்சு, இல்லீங்களா...?" என்று பழைய ஸ்டூலை நகர்த்திப் போடுகிறார். அதைத் தந்துவிட்டு அவர் நிற்கிறார்...

"இருக்கட்டும் ஐயா. எப்படி இருக்கீங்க?"

"ஏதோ ஓடிட்டிருக்கு பொழுது..." என்கிறார். என்னாத்த ஓடுது? குப்புறச்சிக் கெடக்கு தூக்க ஆளில்லாம.

"டீ சாப்பிடறீங்களா?" என்கிறார். அவசரமாய் மறுக்கிறேன். பதினஞ்சி வருஷத்துக்கு முந்திய டீ, சாப்பிட முடியுமா?

"இப்பதான் சாப்ட்டேன். ஊரே உலகமே மாறிட்டது. நீங்க மாறவே இல்லியேய்யா?"

"என்ன பண்றது... அவனவன் எத்தனையோ அக்கிரமம் பண்றான். எப்படி எப்பிடியோ சம்பாதிக்கிறான். நமக்குத் தெரிஞ்ச தொழில் இதுதான்..."

ஆமா, கிழிச்சிரு. மக்கு. இந்தத் தொழில் கூட உமக்குத் தெரிஞ்சிருந்தா இப்படிக் கிழிஞ்ச வேட்டியோட உக்காந்திருப்பீரா?

"நம்ம ஜானகிக்கு இப்ப எத்தனை குழந்தைகள்? அவ அழகுக்கு கொத்திக்கிட்டுப் போயிருப்பானே?"

"ச்" என்கிறார். "அவ கல்யாணமே பண்ணிக்கல தம்பி..."

ஏன்...? என்ற கேள்வி ஆத்திரம் சிலிர்க்க என்னிலிருந்துவெளிப்பாயச் சீறித் தவித்தது. அவளையும் ஓடாத கடிகாரமா ஆக்கிப்பிட்டீரேய்யா பாவி.

கேட்டிருக்கவே கூடாதோ?

வேறெதாவது பேச. சிரிப்புடன் "ஊரை விட்டுக் கிளம்பு முன்னால ஒரு வாச்.. ரிப்பேருக்குத் தந்திருந்தேன்..."

"இருக்கு தம்பி பத்திரமா... நீங்க எப்ப திரும்பிப் போவீங்க?" என்கிறார் புன்னகையுடன்.

"ரிப்பேர் பண்ணியாச்சா?"

"பாத்திறலாம்!" என்கிறார்.

"பாத்து வைங்க. அடுத்த தடவை வரும்போது வாங்கிக்கறேன்."

ஒரு விநாடி என்னையே பார்த்தார்.

சரி என்று தலையாட்டினார்.

ஜானகியைப் பார்ப்பமா என்று சிறு சலனம். அழுது விடுவேனோ...? நான் அழுதால் அதனாலென்ன.. அவள் அழுதுவிட்டால்?

"அடுத்த பஸ் எத்தனை மணிக்கு ஐயா..." என்று கேட்டேன். அவர் கூறிய பதில்தான் அதிர்ச்சியாய் இருந்தது.

"தெர்ல. நான் வெளிய எங்கியும் போற தில்ல" என்றார் ராஜாமணி.

"நீங்க கேட்டமாதிரியே எங்க பொண்ணுக்குக் கல்யாணத்துக்கு ஒட்டியாணம் பண்ணிப் போடறதா தீர்மானிச்சுட்டோம்.."

"ரொம்ப சந்தோஷம். ஒரு நாள், கிழமைன்னா, நானும் எடுத்து மாட்டிக்கிற மாதிரி பண்ணிடுங்க!"

- ஜெ. மாணிக்கவாசகம்



தொலைந்த ராகம்!



• மகளுடன்...



• மனைவியுடன்

தொடர்ச்சியாக மூன்று தெலுங்குப்படமும் ஆடியோவும் சூப்பர் டூப்பர் ஹிட். அதைக் கொண்டாடும் விதமாக, திருப்பதியில் பெரும் விழா ஒன்றுக்கு ஏற்பாடு செய்தார் தயாரிப்பாளர் ராமா நாயுடு. அப்போது எடுக்கப்பட்ட குளோஸ்-அப் படம் ஒன்றை, என்லார்ஜ் செய்து, லேமினேஷன் பண்ணி, இசையமைப்பாளருடைய வீட்டுக்கு அனுப்பி வைத்தார், ராமா நாயுடு.

வீட்டில், அந்தப் படத்தை எங்கே மாட்டலாம்? என்று ஆலோசித்தபோது, இசையமைப்பாளர், "எங்கேயும் இப்போது மாட்ட வேண்டாம். எங்காவது பத்திரமாக உள்ளே வைத்து விடலாம். பின் ஒரு சமயம் பார்த்துக் கொள்ளலாம்" என்று சொல்லிவிட்டார். படம் பரணுக்குப் போய் விட்டது.

இது நடந்து ஏழெட்டு வருடங்களாகிவிட்டது. இப்போது, சென்னை ராயப்பேட்டையில் உள்ள இசையமைப்பாளரின் வீட்டு ஹாலில், அந்தப் படம் வைக்கப்பட்டுள்ளது. பார்க்கிறவர்கள் புன்சிரிப்புடன் கூடிய இசையமைப்பாளர் மகேஷின் முகத்தைப் பார்த்து, கண்ணீர் வடிக்கிறார்கள்.

'நம்மவர்' மகேஷ் ஏற்கெனவே இரண்டு முறை புற்றுநோய்த் தாக்குதலுக்குள்ளாகி மீண்டவர். இந்தத் தடவை, கேன்ஸர் ஜெயித்துவிட்டது. மகேஷின் வயது 47.

மகேஷ் குறித்த நினைவுகளைப் பகிர்ந்து கொள்கிறார் அவரது மனைவியும், பத்திரிகையாளருமான சித்ரா மகேஷ்:

மகேஷ் கலகலப்பான மனிதர். இசை



• மகேஷ்

என்றால் உயிர். விவேகானந்தா கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோது தமது நண்பர்களுடன் சேர்ந்து 'வெர்சடைல்ஸ்' என்ற பெயரில் மேற்கத்திய இசைக் குழு நடத்திக் கொண்டிருந்தார். அனைத்துக் கல்லூரிப் போட்டி என்றால் அங்கே மகேஷின் மியூஸிக் இருக்கும். பரிசும் கிடைக்கும். இத்தனை பிரமாதமாக அவர் கிடார் வாசித்ததற்குக் காரணம், அவர் தமது பதினொரு வயதில் கிடார் கற்றுக் கொள்ள ஆரம்பித்ததுதான். யாரிடம் தெரியுமா? இளையராஜா போன்றவர்களுக்கு இசை கற்றுக் கொடுத்த தன்ராஜ் மாஸ்டரிடம்.

ஆனால், கல்லூரிப் படிப்பை முடித்தவுடன், 'இசை ஒரு பக்கம் இருக்கட்டும்; மேலே படி' என்று பெற்றோர் சொல்லவே, எக்ஸ்.எல்.ஆர்.ஐ.யில் எம்.பி.ஏ. சேர்ந்தார். அதன்பின் மும்பையில் வேலை.

அப்போது, மகேஷின் அப்பா, இறந்துவிட, குடும்பத்தின் மூத்த பிள்ளையான மகேஷ், மும்பை வேலையை ராஜினாமா செய்துவிட்டு, சென்னைக்கு வந்துவிட்டார். இந்தியா பிஸ்டனில் வேலைக்குச் சேர்ந்தார். அப்புறம் எங்கள் கல்யாணம்.

மறுபடி இசை இவர் வாழ்க்கையில் ரீங்காரமிட்டது. ஆம்! ஜெயேந்திரா – பி.சி.ஸ்ரீராம் எடுத்த ஏராளமான விளம்பரங்களுக்கு இசையமைத்தார். அந்த லிஸ்ட்டில் 'சொட்டு நீலம் டோய்'– உட்பட பல சூப்பர் ஹிட்களும் அடக்கம்.

அந்த சோக அத்தியாயம் தொடங்கியபோது, அடிக்கடி இருமல் வரும். மருந்து சாப்பிட்டும், குணமடையாததால், மறுபடி டாக்டரிடம் போனபோது, அவர் பரிசோதித்துவிட்டு, காசநோய் என்று சொல்லி, சிகிச்சையளித்தார். எட்டு மாதம் கழித்து, எதற்கும் இரண்டாவது ஒப்பீனியன் கேட்போம் என்று கேன்ஸர் இன்ஸ்டிடியூட் டாக்டர் சாந்தாவிடம் போனபோது, அவர் கேன்ஸர்தான் என்று உறுதிப்படுத்தி, சிகிச்சை ஆரம்பித்தார்.

பல்வேறு டெஸ்ட்களுக்குமாக உடம்பில் ஊசியால் குத்துகிறபோது, துடிதுடித்துப் போவார். சிறிது நேரமானதும், எங்களுடன் வலியின் சுவடே தெரியாமல் கலகலப்பாக சிரித்துப் பேசுவார். அவருடைய போராட்ட குணமும், ஆண்டவன் அருளும்தான் அவரை புற்றுநோயிலிருந்து மீட்டது. 'முற்றிலும் குணமடைந்துவிட்டதால் இரண்டாவது அட்டாக்குக்கு வாய்ப்பில்லை' என்று நம்பிக்கையூட்டினார்கள் டாக்டர்கள்.

அப்போதுதான், மனதுக்கு நல்லதொரு மாற்றமாக இருக்கும் என்று, 'நம்மவர்' படத்துக்கு இசையமைத்துத் தர வேண்டும் என்ற கமலின் விருப்பத்தை ஏற்றுக் கொண்டார். பகல் முழுவதும் ஆபீசில் பொறுப்பான உத்தியோகம். மாலை தொடங்கி, இரவு வெகுநேரம் வரை இசையமைப்பு வேலை என்று பிசியாக இருந்தார். 'நம்மவர்' இசை அனைவரது கவனத்தையும் கவர்ந்தது. அடுத்தடுத்து தெலுங்கு வாய்ப்புகள். அங்கேயும் சூப்பர் ஹிட். லட்சக்கணக்கில் கேஸட் விற்று, இவருக்கு பிளாட்டினம் டிஸ்க் கொடுத்து கௌரவித்தார்கள்.

முதல் கேன்ஸர் அட்டாக் குணமடைந்து ஏழு வருடங்கள் கழித்து, இரண்டாவது அட்டாக். 'ஐயோ! மறுபடியும் ஊசியால் குத்தி சித்ரவதை நடக்குமே!' என்று வருந்தினார். ஆனால் அதை அனுபவித்துத்தானே ஆக வேண்டும் என்று மனத்தைப் பக்குவப்படுத்திக் கொண்டார். "நான் செய்ய வேண்டியவை இன்னும் நிறைய பாக்கி இருக்கின்றன. நான் சாவதற்கு இப்போது தயாரில்லை!" என்று அடிக்கடி சொல்லுவார்.

ஆண்டவன் அருளால் இரண்டாவது முறையும் கேன்ஸரை ஜெயித்து மீண்டார். பழைய உற்சாகம் பொங்க, இசையமைப்பில் மூழ்கினார். ஏராளமான சூப்பர் ஹிட் இசை வழங்கியிருந்தாலும், வெளிவரவிருக்கும் பி.சி.ஸ்ரீராமின் 'வானம் வசப்படும்', 'குட்டி' எடுத்த ஜானகியின் 'கனவு மெய்ப்பட வேண்டும்' இரண்டு படத்துக்கும் இவர் அமைத்த இசை, என்றைக்கும் இவர் பெயரைச் சொல்லும். அத்தனை அற்புதமான இசை.

சந்திப்பு : **எஸ்.சந்திரமௌலி**


"பதவி வெறி பிடிச்ச அந்த அரசியல்வாதி, அவர் செத்த பிறகு எப்படி போஸ்டர் அடிக்கணும்னு சாகும்போது சொல்லிட்டுட்டுதான் செத்தாராம்."

"எப்படி போஸ்டர் அடிக்கச் சொன்னாராம்?"

"சிவலோக பதவி அடைந்து விட்டார்னு அடிக்கச் சொன்னாராம்."

– மு. பெரியசாமி





திருவருள் பொழியும்

திருவண்ணாமலையில் பௌர்ணமி தினத்தில் அன்னதானம் செய்வோம் வாருங்கள்!

பேரன்புடையீர்! நமஸ்காரம்.

பஞ்சபூதத் தலங்களில், அக்னி தத்துவமாக விளங்கும் திருவண்ணாமலை, நினைக்க முக்தி தரும் புண்ணிய க்ஷேத்திரம். கிரியே சிவமாகவும், சிவமே கிரியாகவும் விளங்குவதால் இங்கு கிரிவலம் வருவது சிவபெருமான் உறையும் கைலாயத்தையே வலம் வருவதற்கு ஒப்பாகும். ஏராளமான சித்தர்கள், ஞானிகள், முனிவர்கள், ரிஷிகள் வாழ்ந்து, தவமியற்றி, வரம் பெற்று, மோட்சம் அடைந்த புனித புண்ணிய க்ஷேத்திரம் திருவண்ணாமலை. இங்கு பௌர்ணமி காலத்தில் கிரிவலம் வரும் பக்தர்களுக்கும், சாதுக்கள், ஊனமுற்றோர், சன்யாசிகள், ஏழை எளிய மக்கள், பக்தர்கள் ஆகியோருக்கு அன்னம் அளிப்பது மகத்தான புண்ணியத்தை நமக்குத் தருகிறது.

தடுத்தாட் கொள்வது, கிரக நிலைகளை மாற்றுவது, ஊழ்வினைகளை நீக்குவது, முக்தி தருவது, ஆயுளை நீடிப்பது, நோய்களைக் குணப்படுத்துவது போன்ற சிவ லீலைகள் நிகழ்ந்த இவ்விடத்தில், அன்னதானத்தின் மூலம் புண்ணியம் பெறுவதும், மோக்ஷம் அடைய முயல்வதும் உயர்ந்த லட்சியமாகும்.

★ மனச்சாந்தி பெற ★ திருமணம் கைகூட ★ நோய்நொடிகள் தீர ★ எண்ணங்கள் வெற்றி பெற ★ சந்தான பாக்யம் பெற ★ பிரச்சனைகள் எளிதில் தீர ★ கணவன் மனைவி ஒற்றுமை ஏற்பட ★ தொழிலில் மேன்மை பெற ★ பிரிந்தவர்கள் ஒன்று சேர ★ கடன் தொல்லைகளிலிருந்து விடுபட ★ நினைத்த காரியம் நிறைவேற ★ உங்களுக்காக நாங்கள் அன்னதானம் செய்து பிரசாதம் அனுப்பி வைக்கிறோம்.

★ அன்னதானம் செய்ய சிறிய தொகையும் ஏற்றுக் கொள்ளப்படும். ★ ரூ.500 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் மாத இதழ் ஒரு ஆண்டுக்கு அனுப்பி வைக்கப்படும். ★ ரூ.1000 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் இதழ் இரண்டு ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும். ★ ரூ.5000 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் இதழ் ஐந்து ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.

ரூ.1000 மற்றும் ரூ. 5,000 அளிக்கும் அன்பர்களுக்கு பகவத்கீதை புத்தகம் அல்லது கந்தபுராணம் புத்தகம் இலவசமாக அனுப்பி வைக்கப்படும். அன்னதானப் பணிக்காக நன்கொடை வழங்கும் அன்பர்கள் நேரில் வந்து கலந்து கொள்ளலாம். கிரிப்பிரதட்சிணம் செய்து கோரிய பலனையும் பெற்றுக் கொள்ளலாம்.

நன்கொடைகளை **SRI ANNALAKSHMI ANNADHANA SEVA TRUST, CHENNAI-41** என்ற பெயரில் **CHEQUE/D.D./M.O.** மூலம் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். என்றென்றும் புனித ஸேவையில் மனப்பூர்வமாக செயலாற்றும் எமது பணிக்கு உங்களது மேலான ஒத்துழைப்பை என்றென்றும் நாடுகிறோம்.

CHEQUE/D.D./M.O. அனுப்ப வேண்டிய முகவரி :

ஸ்ரீ அன்னலக்ஷ்மி அன்னதான ஸேவா டிரஸ்ட்

SRI ANNALAKSHMI ANNADHANA SEVA TRUST

M-11/F-4, TNHB FLATS, I MAIN ROAD, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041. SOUTH INDIA

☎: 4900303, 4900603 Fax: (044)4916316 E-mail: gopuradarisanam@yahoo.com

“அடுத்து நீங்க வந்து உட்காருங்க பெருசு...” கத்தரிக் கோலைச் சீப்பால் தட்டிச் சத்தம் செய்து கொண்டே புன்முறுவல் காட்டி அழைத்த குமாரரை, எரித்து விடு வதைப் போலப் பார்த்தார் சண்முகம்.

‘எத்தனை தடவை சொன்னாலும் இந்தப் பயலுக்குப் புரிய மாட்டேங்குது’ என்ற செய்தி அந்த நெருப்புப் பார்வையில் ஒலிப்பதை அறியாதவனல்ல அவன். சாலையில் விரையும் வாக னங்களை ரசிப்பது போல் பார்வையைத் திருப்பி பலமாகச் சிரித்தான். அதற் கும் அர்த்தம் இல்லாமல் இல்லை.

“தலைமுடி மீசை யெல்லாம் பஞ்சு பஞ்சா ஆயிடுச்சு. இன்னும் நினைப்பைப் பாரு கிழ வனுக்கு.”

இதைப் புரிந்து கொண் டவர் அவனுக்கும் பெஞ் சில் உட்கார்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்த ஏனையோருக்கும் சேர்த்துப் பதில் சொல்லும் விதமாக,

“அப்படியொண்ணும் வயசாகலே தெரிஞ்சுக்கோ. நாற்பத்தஞ்சு வயசு ஒரு வயசாடா...?” என்றார்.

“அத நாங்கல்ல சொல்லணும். சரி, சரி உட்காருங்க.”

சண்முகம் பட்டன் விலக்கி சட்டையைக் கழற்றினார்.

“ஆமா... இப்ப சட்டையை எதுக்குக் கழட்டுறீங்க?”

“ம்... எனக்கு இதான் பழக்கம்.”

ஹேங்கரில் தொங்கிய துண்டை இடம் மாற்றிப் போட்டு, சட்டையை அந்த இடத் தில் தொங்கவிட்டு விட்டு, நாற்காலியில் வந்தமர்ந்தார் சண்முகம்.

‘உடம்பைக் கண்ணாடியில காட்டி அழகு பார்த்துடணும், மீசை நரைச்சாலும் ஆசை நரைக்கலே இவருக்கு’ என்று அவர் பிடிவாதத்தின் பொருளும் இவன் அறிந்ததே.



புதுமணப் பையன் போல் கண் ணாடியை ஒருவித வெட்கத்துடன் ஏறிட் டார் சண்முகம். குழிவிழுந்த கண்களும் கன்னங்களும் பூசினார் போலிருந்தன. பின் கழுத்துத் தசை சற்றே புடைத்து புஜங்களும் திரண்டு அழகாய் கம்பீரம் காட்டின. கையை மடக்கிப் பார்க்க ஆசை உள் ளுக்குள் எட்டிப் பார்த்தது. அப்படி அழகு பார்க்கையில் கைத் தசை திண்ணென்று வீக்கம் காட்டி ‘ஏய்... நீ ரொம்ப அழகா யிருக்கே’ என்றது.

ஸ்வரமஞ்சரி

எல்லாம் ஒரு நிமிஷம்தான். குமார் தயாராக வைத்திருந்த ஒரு வெள்ளைத் துணியை உதறி அவர் மேல் போர்த்தினான். முனைகளைப் பற்றி, கழுத்தைச் சுற்றி

அழகாய்த் தெரியுதா?



இறுக்கி ஒரு முடிச்சுப் போட்டான்.

"டேய், மெதுவாடா. மூச்சு கீச்சு நின்னுடப் போகுது."

"போனாப் போகுது, இப்ப என்ன?" கேலியாகச் சிரித்தான்.

"சரி. இப்ப உங்களுக்கு முடியைக் குறைச்சு வெட்டவா, மீடியமா வெட்டவா?"

"நான் சொல்றபடி வெட்டுவியா நீ.. என்னமோ இருபத்தெட்டு ஸ்டைல்ல வெட்டுகிற மாதிரி போட்டோ பிடிச்சு மாட்டியிருக்கே."

"அதெல்லாம் முடி நிறைய உள்ளவங்களுக்குத்தான். உங்களுக்கு அப்படியெல்லாம் வெட்ட முடியாது."

அவருடைய தலையை பத்து டிகிரி திருப்பி தன் வேலைக்குத் தோதாக வைத்துக் கொண்டான். இனி அவர் விருப்பப்படி தலையை ஆட்டிப் பேச முடியாது. இலேசாக புன்முறுவல் காட்டி அவனோடு இசைந்து போவதைத் தவிர்க்க முடியாது.

கொத்துக் கொத்தாகத் தோளில் விழுந்து மடியில் தவழ்ந்த பஞ்சு முடியைப் பார்க்கையில் அதன் கனம் கூட குறைந்திருப்பது போல் தோன்றியது.

கண்ணாடியில் பிம்பம் பார்த்தார் சண்முகம். இந்த ஹேர் ஸ்டைல் கூட நன்றாகத்தானிருந்தது. பள்ளிப் பருவத்தில் இப்படித்தான் நீண்டு வளர்ந்த தலை முடியை, சைடு உச்சியெடுத்து இடமிருந்து வலமாக வாரி விட்டிருப்பார். நெற்றியைப் பாதி மறைத்துக் கொண்டிருக்கும் அது. நடக்கும்போது கண்ணில் வந்து விழுவதை, இடது கையால் ஒதுக்கிவிடுவது கூட ஒரு ஸ்டைலாக இருக்கும். பழைய நாட்களை நினைவு கூறும் இந்த நிகழ்வுகள் கூட சுகமாகத்தானிருக்கின்றன.

டேய் குமாரு, இந்தக் கண்ணாடி மாத்தி எவ்வளவு நாளிருக்கும்?

"அது ஆயிடுச்சு ரெண்டு மூணு வருசம். இந்தக் கடை புதுசா கட்டி ஆரம்பிக்கும் போது வாங்குனதுதான்... என்ன தெரியாதது மாதிரி கேட்கிறீங்க?"

"தெரியும். தெரியாம என்ன."

இந்தக் கண்ணாடியில் பார்க்கத் தொடங்கிய பிறகுதான், தன் உருவம் கொஞ்சம் அழகு அதிகப்பட்டிருப்பதாகத் தோன்றுகிறது என்ற உண்மையை அவனிடம் ஏன் கூற வேண்டும்.

ஒரு டீ வரவழைத்துக் குடித்தான் குமார்.

சில கண்ணாடிகளின் குழி, குவி அமைப்புகள், பிம்பங்களை அகலமாகவும்

ஒடுக்கமாகவும் காட்டுகின்றன என்ற உண்மையை அறியாதவரல்ல அவர். தன் வீட்டுக் கண்ணாடியில் பார்க்கும் போது, முகம் ஒடுங்கி கண்கள் கூட குழி விழுந்தது போல் தோன்றும். அடிக்கடி கம்பெனியில் இரவு வேலை பார்ப்பதால்தான் அப்படி, என்று சமாதானம் சொல்லிக் கொள்வார். ஆனால் குமாரின் சலூன் கண்ணாடியில், தான் கொஞ்சம் அகலமாகவும், அழகாகவும் இருப்பதாகத் தெரிகிறது. எந்தக் கண்ணாடி பிழையென்று தெரியவில்லை. எது எப்படியிருந்தாலும் இந்த மிகையான அழகு, புத்துணர்ச்சி கொள்ளச் செய்வதாகவும், அது தனக்குத் தேவையாக இருப்பதாகவும் உற்சாகம் கொள்வார்.

தலைக்கு மேல் சுழலும் ஃபேன் காற்றுக்கும், குமாரின் கையில் ஒரே தாளகதியில் இயங்கிக் கொண்டிருக்கும் கத்தரிக்கோலின் க்ரீச்...க்ரீச் ஒலிக்கும், கண்கள் செருகிக் கொண்டு போயின.

"இன்னிக்கு லீவு நாள்னு கூடுதலா ஒரு ஆள் வேலைக்குப் போட்டிருக்கே போலிருக்கு..." தூக்கத்தைக் கலைக்க ஏதோ ஒரு கேள்வி கேட்டார்.

"இல்லேண்ணாச்சி. இவர் என் மச்சினன்."

"மச்சினனா?"

"ஆமா. என் தங்கச்சி வீட்டுக்காரரு."

"அப்படியா?"


"சும்மா வந்திருந்தாரு. வீட்டுல நேரம் போக மாட்டேங்குதுன்னு இங்க வந்துட்டாரு..."

"உங்க புத்தகத்துக்கு 'ஊழலின் ஊற்றுக்கண்'ணுன்னு தலைப்பு வைச்சிருக்கக் கூடாது தலைவரே.."

"அதுக்கென்ன?"

"புத்தகம் தலைவரோட 'சுயசரிதையா?'ன்னு எல்லாரும் கேக்குறாங்க."

- நெ. இராமன்



"என்னய்யா இது, குடும்பப் படம்னு விளம்பரம் பண்ணியும் பொம்பளை கும்பலே வரக்காணோம்?"

"டீ.வி. சேனல் விமர்சனங்களிலே 'சில காட்சிகள் ரொம்ப நீளமா இருக்கு'ன்னு சொல்ல வந்ததை 'ரொம்ப நீலமா இருக்கு'ன்னு சொல்லிட்டாங்க ஸார்!"

- எம்.ஆர்.மூர்த்தி

தலையைக் கவிழ்த்தி பின்பக்கம் வெட்டிக் கொண்டிருந்தான் குமார். தலையை விருப்பமான கோணத்தில் திருப்ப இயலவில்லை. பக்கத்து நாற்காலியில் வேலை பார்த்துக் கொண்டிருந்தவனை, கண்ணாடியினூடாகத்தான் பார்க்க முடிந்தது. அவனும் இவருடைய பிம்பத்தைப் பார்த்து புன்முறுவல் செய்தான்.

"ம்... நல்ல பையனாத்தானிருக்கான்."

"ஷேவிங் பண்ணணுமா?"

"பின்னே, அதுக்கு வேற சலூனுக்குப் போகட்டுமா?"

குமார் முடிவெட்டி முடித்திருந்தான். போர்த்தியிருந்த வெள்ளைத் துணியை மெதுவாக அகற்றி, இலேசாக உதறி மடித்து, அப்பால் வைத்தான்.

ஒரு சின்ன துண்டை அவர் கழுத்தைச் சுற்றி போட்டான்.

குமாரின் மச்சினன், அவன் நாற்காலியிலிருந்தவருடன் அரசியல் பேசிக் கொண்டிருந்தான்.


"மாப்ளே அதெல்லாம் நமக்கெதுக்கு?" மெலிதாக எச்சரித்துக் கொண்டே டியூபிலுள்ள ஷேவிங் க்ரீமைப் பிதுக்கி இவர் முகத்தில் புள்ளி வைத்தான் குமார்.

சிரித்துச் சமாளித்தபடியே பேச்சை சினிமாவுக்குத் திருப்பினான் அவன்.

எதிரில் கண்ணாடியில் முடி திருத்தப்பட்ட தலையில் இளைஞன் போன்ற தோற்றமும் அதனுள் பின் பக்கக் கண்ணாடியில் பதிவான இலேசான சொட்டை விழுந்த பின்னந்தலையும், அதற்கும் பின்னால் இவர் முன்பக்கம் பின்பக்கம் என்று பிம்பங்கள் விரிந்தபடி சென்றன.

"பரவாயில்லே. உன் மச்சினன் ஒரு வார்த்தையிலே புரிஞ்சுக்கிறான்."

"அதெல்லாம் நல்ல குணம் தான். நம்மள மாதிரின்னு தான் வைச்சுக்குங்க. அவருக்



குத்தான் டவுனுக்குள்ள ஒரு இடம் பார்த்திருக்கு. இன்னும் பத்து நாள்ல தனியா கடை வைச்சுக் குடுத்திடலாம்னு இருக்கோம்."

சவரம் செய்து கொண்ட முகம் கன்னத்து மேட்டில் பளபளப்பு காட்டியது. இப்போது கண்ணாடி காட்டிய பிம்பம் பரம திருப்தியாக இருந்தது. பத்து வயசு குறைந்து மனத்திற்குள் புத்துணர்வு பொங்கிற்று. வீட்டுக் கண்ணாடி இப்படி வசீகர மாய்க் காட்டுமா என்பது சந்தேகம்தான். அரை மனதாய்ச் சட்டையணிந்து, பணம் கொடுத்துவிட்டுப் புறப்பட்டார்.

"வர்ரேம்பா."

"சரி வாங்கண்ணாச்சி."

குமாரின் மச்சினனும் புன்னகைத்த மாதிரியிருந்தது.

அடுத்த சில வாரங்கள் கழித்து ஒரு செவ்வாய்க் கிழமை சண்முகம் குமாரின் சலூன் பக்கம் செல்லும்போது, அவன் கடையில் பெயிண்டிங் வேலை நடந்து கொண்டிருந்தது.

"வாங்க அண்ணாச்சி" என்றான் குமார்.

"என்ன, கடை சாமான்களெல்லாம் பிரிச்சுப் போட்டுக் கிடக்கு..."

"ஆமா அண்ணாச்சி. ஆயுத பூஜை வருதுல்ல... அதும் போக, நம்ம கடையை இன்னும் கொஞ்சம் டெகரேசன் பண்ண வேண்டியிருக்கு."

சண்முகம் ஆவலாகத் தேடிய இடத்தில் கண்ணாடி இல்லாமல் வெற்றுச் சுவர் தெரிந்தது.

'கண்ணாடியெல்லாம் பழசாயிடுச்சு. இன்னும் கொஞ்சம் பெரிய சைஸ்ல வைச்சா நல்லாயிருக்கும்னு தோணுது."

"அப்போ பழைய கண்ணாடி?"

"நம்ம மச்சினன் கடைக்கு அளவு கரெக்டாயிருந்துச்சு, அங்க மாட்டிவிட்டாச்சு. ஆமா, என்ன இந்தப் பக்கம்?..."

"சும்மா, பலசரக்கு வாங்கலாம்னு வந்தேன்."

குமார் இவர் தலையை நோட்டமிட்டான். "என்ன அண்ணாச்சி, அதுக்குள்ள முடி காடு மாதிரி வளர்ந்துடுச்சு?"

"அப்படியா?"

"என்ன அப்படியா, கண்ணாடி பார்க்கிறதில்லையா... அடுத்த வாரம் ஒரு நா வாங்க..."

"உன் மச்சினனுக்கு எங்க கடை போட்டுக்குடுத்திருக்கே?"

"டவுனுக்குள்ளதான். சுப்பிரமணியர் கோவில் பக்கத்துல..."

"நல்ல இடம்தான். வரட்டுமா!"

தலையைத் தடவிப் பார்த்தார். அவன் சொன்ன பிறகு அதே நினைவாகவே இருந்தது. தலை கசகசவென்று மிகையாய் அரிப்பதாகத் தோன்றியது.

அடுத்து வந்த சனிக்கிழமை முடி வெட்டிக் கொள்ளப் புறப்பட்டார்.

கால்கள் இயல்பாக அவரை குமாரின் சலூனுக்கு அழைத்துப் போக, மனம் ஏனோ முகத்தை அழகாகக் காட்டும் கண்ணாடியை நாடியது.

கவனிக்காத மாதிரி குமாரின் சலூனைக் கடந்து மச்சினன் கடை நோக்கிப் போனார். அவன் கடையில் கூட்டமில்லை. குமார் புதிய சுவர்க் கண்ணாடியினூடாய் அவரைப் பார்ப்பது போல் இருந்தது. ●

"ஒரு வாரமாக சரியா தூங்கலை டாக்டர்!"

"கவலைப்படாதீங்க. ஸ்டிரைக் வாபஸாயிருச்சே, ஆபீஸுக்குப் போனால் சரியாகிவிடும்!"

- நெ. இராமன்



உசிலம்பட்டியில் சிசுக் கொலையா? ஊட்டியில் குளுகுளு சீசனா? மதுரையில் மஞ்சுவிரட்டா? மானாமதுரையில் கோஷ்டி மோதலா? எல்லாவற்றையும் சூடு பறக்கச் சொல்லிவிடும் துடிப்போடு, தினமும் சன் நியூஸ் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகிக் கொண்டிருக்கிறது மண்டலச் செய்திகள்.

எளிமையாக, ஆனால் வலிமையாக ஊடுருவிக் கொண்டிருக்கும் மண்டலச் செய்திகளின் மூன்று வாசிப்பாளர்களுக்கும் கிராமங்கள் என்றால் உயிராம். பட்டி தொட்டிக் கிராமங்களில் பிரபலமாகிக் கொண்டிருக்கும் மண்டலவாசிகளைச் சந்தித்தோம்.



• அய்யப்பன்

"வெட்கமா இருக்கு!"

"**மே** எட்டாம் தேதி வரை சன் டிவி செய்திகளோட நிருபரா, செய்தி தயாரிப்பாளர்களில் ஒருத்தரா, டப்பிங் பேசியபடியே ஓடிக் கொண்டிருந்த நான் மண்டலச் செய்திகளால் முதல்முறையா செய்தி வாசிப்பாளராக ஆனேன்" என்கிறார் அய்யப்பன்.

முதன்முதலாக, காமிரா முன்னால் உட்கார்ந்த அனுபவம் வாழ்நாளில் மறக்க முடியாதது என்று கூறும் அய்யப்பன், மண்டலச் செய்திகள் சார்ந்த ஊர்களுக்குப் போகிறபோது கிடைக்கிற வரவேற்பும், வித்தியாசமான அனுபவமாக இருக்கிறது என்கிறார்.

"எனக்குள் மறைஞ்சிருந்த திறமைகளை வெளிக்கொண்டு வந்து 'இதுதாண்டா நீ' என்று எனக்கே என்னை அடையாளம் காட்டிய சன் டீவி செய்தி ஆசிரியர் ராஜாவை என்றைக்கும் மறக்க முடியாது" என்று உணர்ச்சி வசப்படும் அய்யப்பனின் இலட்சியம், எட்டு மணி சன் செய்திகளில் வாசிப்பாளராக வருவதுதானாம்.

தற்போது ஸ்டாண்டர்டு சார்டர்டு வங்கியில் பணியாற்றும் இந்த அமுல் பேபியை, வங்கிக்கு வரும் வாடிக்கையாளர்கள் சட்டென்று அடையாளம் கண்டு கொள்வதால் வெட்கமாக இருக்கிறதாம்!

லாலிபாப் கொடுத்துட்டாங்க!



சினிமா, தொலைக்காட்சி, மாடலிங் என்று சின்ன வயதிலிருந்தே ஊடுகட்டி விளையாடி வரும் ப்ரியதர்ஷினிக்கும், மண்டலச் செய்திகள்தான், 'வாசிப்பாளர்' என்ற அந்தஸ்தை அளித்திருக்கிறது.

"முன்பே சன் டீவி செய்தி வாசிப்பாளராக ஆடிஷனுக்கு வந்தப்போ, 'குட்டிப் பொண்ணா இருக்கியேம்மா'னு லாலிபாப் கொடுத்துட்டாங்க" என்று சிரிக்கும் ப்ரியதர்ஷினி, 'அப்ப விட்டதை இப்ப பிடிச்சிட்டேன்" என்கிறார்.

திரைவானம் உள்ளிட்ட பல ப்ரோக்ராம்களை கைவசம் வைத்திருக்கும் ப்ரியதர்ஷினிக்கு, மண்டலச் செய்திகள் படிக்கும் போதெல்லாம் சொந்த கிராமத்தின் ஞாபகம் வருகிறதாம்.

பிறந்த வீடு, புகுந்த வீடு வரிசையில், சன் டீவியும் தனக்கு இன்னொரு வீடுதான் என்பது ப்ரியதர்ஷினியின் ஸ்டேட்மண்ட்.

ஊட்டி வளர்த்த தமிழ்

'**நி**லா', 'ராஜ்' என்று வலம் வந்துவிட்டு, இப்போது 'சன் டீவியே சரணம்' என்று கூறும் மோகன்ராஜூம், மண்டலச் செய்திகளின் இன்னொரு ஹீரோதான்.

விளம்பரப் படங்கள் சிலவற்றில்



* ப்ரியதர்ஷினி

கொடுத்திருக்கு" என்கிறார் மோகன்ராஜ்.

ஒரு விசேஷம். கிராமத்துச் செய்திகளுக்கு ஒரே குரலில் 'ஓஹோ' போடும் இந்த மண்டல வாசிகள் மூவருமே, பிறந்து, வளர்ந்து, விளையாடிப் படித்தது எல்லாமே, தருமமிகு சென்னை மாநகரத்தில்தானாம்!

"எனக்குப் பிடிச்ச கிராமம்"

ப்ரியதர்ஷினி :

பட்டுக்கோட்டை பக்கத்துல இருக்கிற தென்னங்குடி கிராமம்தான் எனக்குப் பிடிச்சது. எப்படா லீவு கிடைக்கும், கிராமத்துக்குப் போவோம்னு காத்திருப்பேன். பசுமையான அந்த கிராமத்து வாசனை எப்பவும் மனசை விட்டுப் போகாது.

அய்யப்பன் :

தாத்தா - பாட்டியோட காரைக்குறிச்சி என்னோட ஃபேவரிட் கிராமம். அங்க எண்ணி நாலு தெரு இருந்தாலே அதிகம். அந்த நாலு தெருவிலேயேயும் விளையாடி, ஊஞ்சலாடி கிராமத்து நண்பர்களோட ஆட்டம் போட்டதெல்லாம் அந்தக் காலம்.

வாசி(ப்பாளர்)கள்!

நடித்து வரும் மோகன்ராஜ், மண்டலச் செய்திகள் வாசிப்பது மனநிறைவைத் தருகிறது என்று கூறுகிறார்.

"கல்வெட்டுக்காரிகையாக பேர் வாங்கின, என்னோட அம்மா சுகுமாரி அருணகிரி தான் என் வளர்ச்சிக்குக் காரணம். சோறோடு அவங்க ஊட்டி வளர்த்த தமிழ்தான் என்னை இந்த அளவுக்கு உயர்த்தியிருக்கு. பல ஆண்டுகளாக மீடியாவிலே இருந்தாலும், மண்டலச் செய்திதான் நல் அடையாளத்தையும், வெளியூர் மக்களிடையே வரவேற்பையும் எனக்குக்

மோகன்ராஜ் :

வேலூர் மாவட்டம் திமிரிதான் என்னோட சாய்ஸ். எளிமையான இயல்பான, அப்படியொரு மனுஷங்களை எந்த நகரத்திலேயும் தேடிக் கண்டுபிடிக்க முடியாது. எதையும் எதிர்பார்க்காம அன்பைத் தருகிற திமிரி கிராம மக்கள், மறக்க முடியாதவங்க.


சந்திப்பு : மேகா



* மோகன்ராஜ்



• வெட்டி காயப்போடுகிறார்



அரசுக்கு அஞ்சு லட்சம் மிச்சம்!

> “காசு பணமா தர முடியாது. அதான் உழைப்பாலே செய்யறேன்.”

முசிறி அருகேயுள்ள அய்யம்பாளையம் கிராமம், காவிரியின் வடகரையில் அமைந்துள்ளது. அதன் நேரெதிரே தென் கரையில் பெட்டவாய்த்தலை இருக்கின்றது. இதன் இரண்டுக்கும் இடைப்பட்ட காவிரியின் அகலமான இரண்டு கிலோ மீட்டர் மணல்வெளி எங்கும் திட்டுத் திட்டாக, காட்டாமணக்குச் செடிகள் பத்தடி உயரம், இருபதடி அகலத்துக்கு நெருக்கமாகப் பரவிக் கிடந்தன.

கோடையில் அக்கரையிலிருந்து இக்கரைக்கு ஆற்றின் உள்ளே இறங்கி நடந்து வரும் கிராமவாசிகளுக்கு, அவை பெரும் இடையூறாக இருந்து வந்தன. தண்ணீர் உறிஞ்சும் தன்மை, நீரோட்ட வேகத் தடை,. பொதுமக்களுக்கும் இடையூறு ஆகியவற்றைக் கண்டு மனம் நொந்து போனார் முதியவர் ஒருவர்.

அய்யம்பாளையம் கிராமத்தில் வசித்து வரும் அந்த முதியவர் வள்ளியப்பனுக்கு வயது அறுபத்தி நான்கு. தனியொரு நபராக, காவிரியின் உள்ளே காட்டாமணக்குச் செடிகளை அழித்தொழிக்கும் பொது சேவையில் ஈடுபட்டார் அவர்.

தினசரி அதிகாலை ஐந்தரை மணிக்கெல்லாம் எழுந்து காவிரிக்குச் சென்று விடுவார். காட்டாமணக்குச் செடி கொடிகளை வெட்டிப் போட்டு வெயிலில் காயவைப்பார். காலை பதினொரு மணிக்கு வீடு திரும்புவார். மதிய உணவு, சிறிது நேர ஓய்வுக்குப் பின், மதியம் மூன்று மணிக்கு மீண்டும் காவிரிக்குச் சென்று செடிகளை வெட்டிப் போட்டு, அதன் ஆணிவேர்களை மண்ணிலிருந்து பிடுங்கியெடுத்துப் போட்டு, இரவு ஏழு மணிக்கு வீடு திரும்புவார். நன்கு காய்ந்த பிறகு தீயிட்டுக் கொளுத்தி விடுவார். காட்டாமணக்குச் செடிகளை அடிவேர்களுடன் பிடுங்கியெடுத்து காய வைத்து எரித்து விடுவதால், அவை மீண்டும் மண்ணில்



• அழிக்கப்பட்ட இடம்

வேரூன்றி வளர்வதற்கு வாய்ப்பில்லை.

இச் செயலைக் கடந்த ஏழு மாதங்களாக ஒருநாள் கூடத் தவறாமல் காவிரிக்குச் சென்று வந்து செய்து முடித்துள்ளார் வள்ளியப்பன்.

"என்ன தம்பி... நம்ப ஊரை, ஆற்றை நல்லபடியா வைச்சுக்க, ஏதோ என்னாலே முடிஞ்ச உதவி... காசு பணமா தர முடியாது. அதான் உழைப்பாலே செய்யறேன்'' என்கிறார் அடக்கத்தோடு.

இந்த வேலையில் ஈடுபட்டபோது, வேடிக்கை பார்த்த கிராம மக்கள், அப்போது அவரைக் கிண்டலும் கேலியும் செய்துள்ளனர். ஆனால் இன்று அந்தக் கிராம மக்களே அவரைப் பாராட்டுகின்றனர். கண்ணுக்கெட்டிய தூரம் வரைக்கும் காவிரியின் உள்ளே காட்டாமணக்குச் செடிப் புதர்களாகக் காட்சியளித்த அதன் உள்பகுதி, இப்போது திறந்தவெளி மணல் பரப்பாகக் காட்சி தருகிறது.

எட்டு கிலோ மீட்டர் பரப்புக்கு, காட்டாமணக்குச் செடிகளை வெட்டிப் போட்டு, வேருடன் பிடுங்கி எறிந்து எரியூட்டி அழித்துள்ளார். அதற்கு ஐந்து லிட்டர் மண்ணெண்ணெயும், இரண்டு லிட்டர் பெட்ரோலும், நூற்றைம்பது தீப் பெட்டிகளும் தேவைப்பட்டிருக்கின்றன. இந்த அளவு பரப்புக்கு காட்டாமணக்குச் செடிகளை அழித்தொழிக்க டெண்டர் விட்டிருந்தால்கூட, அரசுக்குக் குறைந்தது ஐந்து லட்சம் ரூபாய் செலவாகி இருக்குமெனக் கூறுகிறார்கள்.

கட்டுரை, படங்கள் :
ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

அமரர் கல்கி
நினைவுச்
சிறுகதைப்
போட்டியில்
பிரசுரத்துக்குத்
தேர்ந்தெடுக்கப்பட்ட
வைட்டமின் சிறுகதை - 11

நேரம் குறித்தாயிற்று.

வியாழக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு மேல், ராகுகாலம் கழிந்த பிறகு...

செத்துப்போன எங்கள் அம்மாவின் நகைகளைப் பங்கு போடப் போகிற சுப முகூர்த்தம்.

என் பங்குக்கு எவ்வளவு பவுன் நகைகளுடன் வர வேண்டும் என்று ஏற்கெனவே உத்தரவாகியிருந்தது - என் புகுந்த வீட்டில்.

இறப்புகள் இப்போதெல்லாம் கல்யாணம் போலவே நடக்கின்றன.

ஓர் உயிர் போய்விட்டதா... அதுவும் கிழ உயிரா... கவலை விட்டது.

"உன் பிள்ளைக்கு எப்போ கல்யாணம்...?"

"என் பெண்ணுக்கு ஃபாரின்லே வேலை கிடைச்சிருக்கு.."

"புதுசா ஒரு தோடு வாங்கினேன்...!"

"ஹூம்! என் வீட்டுக் கிழம் எப்போது கிளம்புமோ, கடவுளுக்குத்தான் வெளிச்சம்...!"

பிணம் நடுக்கூடத்தில் பிரசன்னமாகியிருக்கும் போதே, எல்லாக் குசல விசாரிப்பும் நடைபெறுகிறது.


என் உடன்பிறப்புக்களும், உறவுகளும் பரஸ்பரம் விசாரித்துக் கொண்டது மட்டுமல்ல, அம்மாவின் நகைகளைப் பற்றியும் விவாதம் எழுந்தாயிற்று -

'அவளை' வைத்துக் கொண்டே.

பற்றிக் கொண்டு வந்தது எனக்கு(ள்).

தகனத்துக்குப் பின் கிளம்பிய என் கணவர் "ஞாபகமிருக்கட்டும்!" என்று சொல்லி விட்டுக் கிளம்பினார்.

அம்மா ஒரு லட்சிய புருஷி. இயல்பிலேயே அப்படி அவள் இல்லை. ஆக்கப்பட்டாள். அப்பாவுக்கு நன்றி.



அப்பா ஒரு மொடாக்குடியர் என்று அம்மா சொல்லியிருக்கிறாள். மொடாக்குடி என்பதற்கு என்னுடைய

சிறுவயதுகளில் அர்த்தம் தெரியாது. எனினும், அப்பாவிடமிருந்து ஒரு வித சகிக்க முடியாத வீச்சமும், நடைத் தள்ளாட்டமும் தெரியவருகிறபோது முகம் சுளித்தேன். அனிச்சையாக.

அப்பாவின் மேல் கால்போட்டுக் கொண்டு ஒய்யாரத் தூக்கம் போட்டுவந்த நான், அந்த வீச்ச நாட்களில் தனியாகப் படுக்கப் பழகினேன்.

"அழ்ப்பா இழ்ட்டே வாழ்டா கழ்" என்று அப்பா உளறும்போது காதைப் பொத்திக் கொள்வேன்.

கம்பெனி ஒன்றில் நல்ல வேலையில் இருந்த அப்பா, குடிக்குமட்டும் செய்தபோது பாதிக்காசாவது வீட்டுக்குக் கிடைத்துவிடும். இரண்டு வேளைச் சாப்பாடு உறுதி. நாளடைவில் சீட்டாட்டத்தில் அப்பா மூழ்கியபோதுதான், குடும்பமும் மூழ்க ஆரம்பித்தது.

நான்கு பெண் குழந்தைகளைப் பெற்ற பிறகு ஒருவன் சாவகாசமாக சீட்டாடக் கற்றுக் கொண்டு, கைக்காசை ஒழிப்பது என்பது எத்தனை மோசமான விஷயம்!

குழந்தைகளின் படிப்பு, கல்யாணம் என்றெல்லாம் கனவுகளில் இருந்த அம்மாவின் மனசு எப்படி நொறுங்கிப் போயிருக்கும்.

ஆபீஸ் பணத்தை வைத்துச் சூதாடியதற்காக

மாங்கல்யதாரணம்



எச்சரிக்கை செய்யப்பட்டு, ஒரு வாரக் கெடுவுகுள் கட்டமுடியாததால் அப்பாவின் வேலை போனது. அதிகச் சலனமின்றி குடும்ப நுகத்தடியைத் தனது தோளுக்கு மாற்றிக் கொண்டாள் அம்மா.

தோள் கொடுக்காதது மட்டுமல்ல, நுகத்தடியின் மேலே ஏறி உட்கார்ந்து அழுத்தவும் ஆரம்பித்தார் அப்பா.

அடகு வைத்துப் பணம் ஈட்டிச் சீட்டாடுவதற்கு வீட்டில் அண்டா குண்டான் ஏதுமில்லா ஒரு திருநாளில், அம்மாவின் தாலியைக் கேட்டார் அப்பா. ஒரே சண்டை.

"போய்யா வெளியிலே!" என்று வெகுண்டெழுந்தாள் அம்மா.

அம்மாவை எரித்துவிட்டு வந்த பிறகு, வீட்டின் அளவை விட, வெற்றிடம் பெரிதாய்த் தெரிந்தது.

எஸ்.ஸ்ரீதுரை

நாங்கள் நான்கு சகோதரிகளும் கல்யாணமாகி அவரவர் புகுந்தவீட்டில் இருக்கிறோம். வசதியான கணவன்மார்கள். என் கணவனுக்குச் சற்று அதிக வசதி.

எங்களில் கடைசியவளுக்கும் கல்யாணம் பண்ணி வைத்த பிறகு, கடந்த ஏழெட்டு வருடமாகத் தனியாகத்தான் இருந்தாள் அம்மா. எனக்குக் கல்யாணமாகி இருபது வருடம்.

இருந்தாலும்கூட, திடீரென்று முளைத்திருக்கும் அம்மா இல்லாத இந்த உலகம் பயமுறுத்தவே செய்கிறது. என் தங்கைகளுக்கு எப்படியோ.

தகனத்துக்குப்பின், பக்கத்து வீட்டிலிருந்து சாப்பாடு வந்தது. குழம்பு பரிமாறும் போது, கடைசித் தங்கையின் கணவர் தொண்டையைக் கனைத்துக் கொண்டு கேட்டார் -

"அம்மாவுடைய பொருள்களை எப்படிப் பங்கு பிரிக்கப் போறீங்க..?"

மார்கழிக் குளிர்காலையில் தண்ணீரோடையில் தவறி விழுந்ததுபோல எலும்புக்குள் ஜில்லீரிட்டது எனக்கு. பாவி. இதய மற்ற பாவி... மாமியார் கிளம்பிய அரை மணியில் சொத்துக் கணக்கா...?

ஹூம்! என் புருஷன் மட்டுமென்ன, பிணம் நகர்ந்த ஜோரிலேயே, "ஞாபகமிருக்கட்டும்!" என்று என்னிடம் சொல்லிவிட்டு, பஸ் பிடிக்கப் போகவில்லையா?

அம்மா நல்ல உழைப்பாளி. முறுக்கு, அதிரசம் மட்டும் போடுவதோடு நின்று விடாமல், சீடை, தட்டை மற்றும் நாலைந்து வகை ஸ்வீட்டுகள் எல்லாம் செய்யக் கற்றுக் கொண்டு, மணக்க மணக்க அவற்றைத் தயார் செய்து அசத்தினாள். பெற்றது நாலும் பெட்டைப் பசங்கள் என்று, பட்சணங்களை எங்களிடம் கொடுத்தனுப்பாமல், தானே நேரடியாகச் சென்று சப்ளை செய்துவிட்டு வருவாள் அம்மா.

அம்மா அத்தனை அழகில்லை. அதில் ஒன்றும் எனக்குக் குறையும் இல்லை. அழகாய் இருந்திருந்தால்தான் இன்னும் கஷ்டப்பட்டிருப்பாள் என்று தோன்றுகிறது.

தனியாக நான்கு பெண்களை வளர்த்த - அதுவும் புருஷனில்லாமல் வளர்த்த அம்மாவுக்கு, அவளது அழகுக் குறைவே ஒரு வித சௌகரியம்தான் என்று தோன்றுகிறது.

இந்த அழகி(!)ற்கே எங்கள் அப்பா (அந்தக் கடைசிச் சண்டைதினத்தில்) அம்மாவிடம் கேட்டார் -

"எனக்குத் தராத தாலியை வேறு எவனுக்கடி தரப் போறே..?"

மறு பேச்சுப் பேசாமல் அப்பாவின் வேஷ்டி இத்தியாதிகள் நிறைந்த டிரங்குப் பெட்டியை வாசலில் எறிந்து-

"போய்யா வெளியிலே...!" என்றாள் அம்மா.

வீடு மொத்தமும் அந்த வியாழக் கிழமைக்காகத் தவம் இருந்தது. அன்று காலையில் கபஸ்வீகரணம்.

எதிலும் எனக்குப் பிடிப்பு இல்லை.

அம்மாவின் நகைகளுக்கான பாத்தியதை எனக்கு இருக்கிறதோ இல்லையோ, அவளது மரணத்துக்காக துக்கப்படும் பாத்தியதை என் ஒருத்திக்கு மட்டுமே இருப்பதாகத் தோன்றுகிறது.

என் வாழ்வும் - ஏறக்குறைய - அம்மாவின் வாழ்வைப் போல அமைந்து விட்டதாலோ என்னவோ...

பணப் பிசாசு கணவன் மட்டுமல்ல குடும்பமே.

அம்மாவின் பட்சண வியாபாரம் சற்றே விருத்தி அடைந்து பஜாரில் சின்னதாய் ஒரு ஸ்வீட் கடை வைக்கிற அளவுக்கு உயர்ந்த

டைம்ஸ் ஆஃப் இந்தியா பத்திரிகைக்கு போன் மூலம் தொடர்பு கொள்பவருக்கு காயத்ரி மந்திரம் காதில் ஒலிக்கும். ஓர் இலாகாவுடன் தொடர்பு கொள்ள எக்ஸ்டென்ஷன் கனெக்ஷன் கொடுக்கப் படும்போது அந்த இடைவெளியில் காயத்ரி மந்திரத்தை ஒலிக்கச் செய்கிறார்கள்.

- காயத்ரி, சென்னை



பிறகு எனது திருமணம் நடந்தது.

ஆரம்பத்தில் என் கணவனுக்குச் சுமாரான வருமானம்தான். (இல்லாவிட்டால் பத்து பவுனுக்குச் சம்மதித்திருக்குமா?)

கல்யாணத்திற்குப் பிறகு, என் புகுந்த வீட்டாரின் பிடுங்கல் ஜாஸ்தியாகிப் போனது. நினைத்தபோது பணம் கேட்டார்கள். தலை தீபாவளிக்கு மைனர் செயின் என்று திடீர் கண்டிஷன் போட்டார்கள்.

எதிர்க்கத் திராணியின்றி அம்மாவிடம் போய் அழுதுகொண்டு நின்றேன் பலதரம். பூர்த்தி பண்ண முடியாத என் புகுந்த வீட்டின் திருப்திக்காக, அம்மா ஓய்வு ஒழிச்சலின்றி உழைக்க ஆரம்பித்தாள். என் தங்கைகளையும் சேர்த்துக்கொண்டு.

சாப்பாட்டைக்கூட அளந்து போட்ட என் புகுந்த வீட்டு ஜென்மங்கள், அம்மாவின் சாவிற்கு நான் கிளம்புவதற்கு முன்னால் அம்மாவின் சொத்துக்களில் என் பங்கு பற்றிப் பேசியதில் எனக்கு அதிர்ச்சி இல்லை. பேசாதிருந்தால்தான் நான் வாய் பிளந்து வியந்திருப்பேன்.



''என்னம்மா இது. பக்கத்துல பூ விற்கிற பொண்ணு முழம் நாலு ரூபான்னு சொல்லுது. நீ அஞ்சு ரூபாய் கேக்கறியே?''

''அவளைவிட எனக்குக் கை நீளம் சார்.''

- சீர்காழி வி.ரேவதி

வாடகை வீடு. காரியம் முடிந்ததும் காலி செய்து விடுவதாய் வீட்டுக்காரரிடம் சொல்லியாகிவிட்டது. என்னதான் பட்சண வியாபாரம் அமோகமாக நடந்தாலும், அம்மாவால் ஒரு வீடு வாங்க முடியவில்லை. நாலு பெண்களைக் கரையேற்றியதற்கு நடுநடுவே ஒரு இருபது முப்பது பவுன் நகைகளைச் செய்து கொண்டாள், ஒவ்வொன்றாக. அதற்கு மேலும்கூட இருக்கலாம்.

"எனக்குப் பிறகு உங்களுக்குத் தாண்டியம்மா!" என்றிருக்கிறாள் அம்மா ஒரு தரம். என் இளவல்களிடத்திலும் சொல்லியிருக்க வேண்டும். புகுந்த வீடுகளுக்குத் தெரிந்து போனது.

என் பங்கு என்று நான் எதை வாங்கிப் போனாலும் என் புகுந்த வீட்டிற்கு அஜீரணம்தான். சொத்துக்குக் குறைவு ஏதும் இல்லை. ஆசைக்கும்தான்.

'உயிரோடு இருக்கும்போதுதான் பிடுங்கியாகிவிட்டது. செத்த பிறகாவது அவளை நிம்மதியாக விடுங்களேன்! என் தங்கைகளுக்கு நம்மை விட வசதி குறைச்சல்தான். அவங்கதான் எடுத்துக்கட்டுமே...! என்று எனக்குத் தோன்றியதைக் கேட்டிருந்தால் என்னைக் கொன்று போட்டிருப்பார்கள். கேட்கவில்லை நான்.

''உன் பங்கு நகையில்லாமல் படி ஏறக்கூடாது!''

கல்யாணமாகி இருபது வருஷம் கழிந்தும், இன்னும் படியேறக் கூடாதுகள்...

'படிச்ச பெண்கள்தான் தைரியசாலிகளாயிருக்கும். புருஷன் தப்புத் தண்டா பண்ணும்போது ஆரம்பத்திலேயே தட்டிக் கேட்கும். என்னை மாதிரி வியாதி முத்தினப்புறம் ஆபரேஷன் பண்ண வேண்டியிருக்காது' என்பாள் அம்மா அடிக்கடி.

படிக்க வைத்தாள். படித்தேன். என் குடும்பத்திலேயே டிகிரி படித்தவள் நான்தான். ஸ்காலர்ஷிப் வாங்கிப் படித்தேன். அம்மாவுக்கு அதிகம் சிரமம் கொடுக்காமலேயே படித்து முடித்தேன்.

படிப்பு வந்தது. தைரியம் வரவில்லை. புகுந்த வீடு பணத்தாசையில் எல்லை மீறும் போதெல்லாம் பணிந்துதான் போயிருக்கிறேன். ஏன் என்று கேட்டதில்லை. இனி அடுத்த எல்லை மீறலுக்காவது எதிர்த்துப் பேசுவேனா? இல்லை, அப்போதும் பணிந்து போகப் போகிறேனா? இனி இவர்கள் கேட்கும் போதெல்லாம் கண்ணைக் கசக்கிக் கறந்து கொண்டு எடுத்துச் செல்ல அம்மாவும் இல்லாத நிலையில், வேறு எந்த உச்ச கட்டத்தில் வெடித்து விடக் காத்திருக்கிறேன், என் அம்மா மாதிரி...?

விடை தெரியாக் கேள்விகள்.

என் தலை தீபாவளிக்கு வந்திருந்த போது, ஒரு தனிச் சந்தர்ப்பத்தில் அம்மா தன் ரவிக்கைக்குள்ளிருந்து எடுத்துப் பெருமையுடன் காட்டினாள் -

"பாருடீ! புதுத் தாலி...!" என்று.

"உங்கப்பா என்னைப் படுத்தின பாட்டிலே, அவர் கட்டிய தாலி மட்டும் எனக்கு எதுக்குன்னு, நானே புதுசா கால் பவுன்லே பண்ணி ஒரு மஞ்சக் கயித்துலே கோத்து அம்பாள் சன்னதியிலே என் கழுத்துலே போட்டுண்டேன். அவர் கட்டினதை அம்பாள் கோயில் உண்டியிலேயே போட்டுட்டேன், இரண்டு வருஷம் முந்தி. என்னமோ உனக்குக் காட்டணும்னு தோணிச்சு, காட்டினேன்..."

அம்மாவின் முகம் தனிப் பிரகாசத்தில் மின்னியது.

ஜெய விஜயீ பவ!

பிற்பாடு என் கடைசித் தங்கையின் கல்யாணத்தை அடுத்து, காசியிலோ, பெங்களூரிலோ ஏதோ ஓர் இடத்தில் எங்கள் அப்பா இறந்ததாகத் தகவல் வந்தது, நானும் தகவல் கேள்விப்பட்டு அம்மாவைப் பார்க்கப் போயிருந்தேன். தாலியைக் கழற்றி டிரங்குப் பெட்டியில் பத்திரப்படுத்தி இருப்பதாகச் சொன்னாள் அம்மா, சலனமில்லாமல்.

அப்பாவுக்காக யாரும் அழவில்லை என்றுதான் ஞாபகம்.

சுபஸ்வீகரணம் சுபமாக முடிந்தது. இதற்கென்று வந்த உறவுகள் கிளம்பிப் போயாயிற்று.

ராகு காலம் டாட்டா சொல்லிப் போனது.

அம்மாவின் டிரங்குப் பெட்டித் திறப்பு விழா, பெருமாள் கோயில் சுப்ரபாத சேவை போல் விமரிசையாக நிகழ்ந்தது. பளபளப்பும் மங்கலுமாய்ப் பத்துப் பன்னிரண்டு நகைகள்.

இரட்டை வடம் சங்கிலி, நெளி மோதிரம், சிவப்புக் கல் நெக்லெஸ், சிவப்புக் கல் தோடு, ஸ்டட் இரண்டு செட், மெல்லிய செயின்கள் நாலு, வளையல்கள் சில...

முப்பது பவுனுக்கும் மேல் இருக்கக் கூடும்.

இன்னும் மிச்சமீதி இருக்குமோ என்று குடைந்ததில் அம்மாவின் மடித்த நூல் புடைவைக்குள் பத்திரமாக வீற்றிருந்தது -

அவளே சம்பாதித்த, அவளது தாலி. அவளது கம்பீரத்தின் அடையாளம். தைரியத்தின் சின்னம்.

"ப்ச, இதுதானா...!" என்று என் உடன் பிறப்புகள் முணுமுணுக்க -

"இது மட்டும் போதும் எனக்கு!" என்றேன்.



வளைக்கிறார் சூர்யா!

நடிப்புச் செம்மல் 'சியான்' விக்ரம் இப்போதெல்லாம் ஆக்ஷன் கதைகளைத்தான் அதிகம் விரும்புகிறாராம். 'சேது' மூலம் மறுவாழ்வு கொடுத்த இயக்குனர் பாலாவின் அடுத்த படமான 'பிதாமகனி'லிருந்து விக்ரம் கழன்று கொண்டு விட்டதும் இந்த வகையில்தான். இப்படி நல்ல கதைகளை, அதாவது நடிப்புக்கு வாய்ப்புள்ள கதைகளை, விக்ரம் வேண்டாம் என்பதால் அந்த வாய்ப்புகளை சூர்யா வளைத்துவிடுகிறார் என்கிறார்கள். இப்போது 'பிதாமகன்' படத்திலும் சூர்யாதான்.

- வாசன்

முருகப்பெருமானின் திருவருளை நாடுவோம்! அவனது திருப்புகழைப் பாடுவோம்!

தெய்வ மனங்கமழும் திருத்தணியில் திருக்கார்த்திகைத் திருநாளன்று அன்னதானத் தொண்டில் ஈடுபட வாய்ப்பு!

பேரன்புடையீர்! வணக்கம். ஸ்ரீ முருகப்பெருமான் தீபாவளித்திருநாளில் தங்களுக்கு அனைத்து நலன்களையும் தந்தருளப் பிரார்த்திக்கிறோம்.

● முருகன், அழகன், கந்தன், கார்த்திகேயன் என்று மனமுருகி அழைப்பவர் முன்னால் ஓடிவந்து நிற்பவன் தமிழ்க்கடவுளாம் முருகப் பெருமான். அத்தகைய ஆறுமுகப்பெருமானின் ஆறுபடை வீடுகளில் ஒன்றான திருவருள் நிறைந்த திருத்தணிகை மலை. ஸ்ரீ வள்ளி தெய்வானை சமேதராய் அமர்ந்து அருளாட்சி பொழியும் திருத்தலத்தில் திருத்தணி மலைமீதில், வரம் வேண்டிவரும் பக்தர்களுக்கு, தெய்வப்பிரசாதமாக அன்னதானம் "ஆன்மீக அன்னதான அறக்கட்டளை" என்ற தனி அமைப்பின் மூலம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அன்னதான அரும்பெரும்பணியில் ஆன்மீக அன்பர்களும், முருகப்பெருமான் பக்தர்களும் பங்கேற்று மாதாமாதம் சிறப்புமிகு அன்னதான திருப்பணி திருத்தணியில் தெய்வீகப்பணியாக தழைத்திட உதவுமாறு அன்புகூர்ந்து வேண்டுகிறோம். சிறப்புமிகு சிங்கார மலை 2000 ஆண்டுகளுக்கு முன்பு நக்கீரர் பாடிய திருமுருகாற்றுப்படை முதல் குமரகுருபரர், கச்சியப்ப முனிவர், கச்சியப்ப சிவாச்சாரியார், அருணகிரிநாதர், வள்ளலார், பாம்பன் சுவாமிகள், ஆகியோர் பாடிய அருட்பாடலின் சிறப்பு பெற்ற மலை திருத்தணிகை மலை. அத்தகைய திருத்தணியில் அன்னதானம் செய்வதன் மூலம் மனை நிறைய செல்வமும், மனம் நிறைய மகிழ்ச்சியும், வேண்டுதல்கள் நிறைவேறி, பிள்ளை வரமும், கல்வியில் உயர்வும் உங்கள் வாழ்வில் என்றும் நிலைத்திட, திருத்தணி முருகப்பெருமானை வேண்டுகிறோம்.

நாங்கள் எதை நினைத்து அன்னதானம் செய்ய விரும்புகிறீர்கள் என்பதை தெரிவித்தால் அதன்படி நாங்கள் கிருத்திகை அன்று உங்களுக்காக பூஜை, அர்ச்சனைகள், அன்னதானம் செய்து பிரசாதத்துடன் திருத்தணி ஸ்ரீ முருகன் படத்தையும் தங்களுக்கு அனுப்பி வைக்கிறோம்.


❖ பிறந்தநாள் ❖ திருமணநாள் ❖ முன்னோர்கள் திதி நாள் ❖ வாழ்க்கையில் உயர்வு ❖ தொழிலில் முன்னேற்றம் பெற ❖ நிரந்தர வேலை பெற ❖ கல்யாண பாக்கியம் பெற, நல்ல வரன் அமைய ❖ புத்திர/பிள்ளை பாக்கியம் பெற ❖ கணவன் - மனைவி இடையே ஒற்றுமை நிலவ ❖ கஷ்டங்களும், கடன்களும் எதிர்ப்பு இடையூறுகளும் நீங்க ❖ புதிய முயற்சிகளில் முன்னேற்றமும் வெற்றியும் உண்டாக ❖ புதிதாக தொழில் தொடங்க ❖ புதிதாக வீடு/ மனை பெற ❖ வாகன யோகம் பெற ❖ நல்ல சிந்தனை பெற ❖ சிந்தனை வளம் பெருக ❖ உடல் ஆரோக்கியம் பெற ❖ நீண்ட ஆயுள் பெற ❖ தெய்வசக்தியுடன் திகழ ❖ குடும்ப ஒற்றுமை பெற ❖ உலக ஒற்றுமை பெற ❖ சமுதாய ஒற்றுமை பெற ❖ தேச ஒற்றுமைபெற ❖ எல்லா உயிர்களும் இன்புற்று வாழவும்.

● தாங்கள் அளிக்கும் நன்கொடை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்ளப்படும்.
● ரூ.500/- அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு, ஆன்மீகம் மாத இதழ் ஒரு ஆண்டிற்கு அனுப்பி வைக்கப்படும்.
● ரூ.1000/- அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு, ஆன்மீகம் மாத இதழ் இரண்டு ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
● ரூ.5000/- அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு, ஆன்மீகம் மாத இதழ் பத்து ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.

அன்னதானத்திற்கு நன்கொடையாக ரூ.500, ரூ.1000, ரூ.5000 அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு பிள்ளையார்பட்டியில் பூஜிக்கப்பட்ட வெள்ளெருக்கு வேர் விநாயகரும், திருத்தணி ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி வண்ணப்படமும், சிறிய அளவில் கந்தர் சஷ்டி கவசம் புத்தகமும் அனுப்பி வைக்கப்படும்.

* ரூ.5000/- அனுப்பும் ஆன்மீக அன்பர்கள் சார்பாக, ஒவ்வொரு மாதமும் கிருத்திகை அன்று திருத்தணியில் அன்னதானம் செய்து தொடர்ந்து பத்து ஆண்டுகளுக்கு பிரசாதமும் **'ஆன்மீகம்'** மாத இதழும் தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். மேலும் தாங்கள் விரும்பும்போது சந்ததியரின் முகவரிக்கும் மாற்றம் செய்து தருகிறோம். ஆன்மீக அன்பர்கள் ஒவ்வொருவரின் பூஜை அறையும் புனிதம் பெறவேண்டும் என்ற இறைசிந்தனையோடு ரூ.5000 செலுத்துபவர்களுக்கு 1024 பக்கங்களுடன் கூடிய பெரிய அளவில் உள்ள **அருணகிரிநாதர் அருளிச்செய்த "திருப்புகழ்"** நூலை அனுப்பி வைக்கிறோம்.

● நன்கொடை அனுப்பும் முருகபக்தர்கள் (Aanmeeka Annadhana Charitable Trust, Chennai - 4) என்ற பெயரில் Cheque /D.D/ M.O. மூலம் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அன்னதான திருப்பணிகளை நலம்தரும் இறைபணி சேவைகளாக 'ஆன்மீக அன்னதான அறக்கட்டளை' ஆற்றிவர தங்களது ஒத்துழைப்பை என்றும் பேரன்புடன் வேண்டுகிறோம்.



நன்கொடைகளுக்கு 80 G பிரிவின்படி வரிவிலக்கு உண்டு.

Cheque / D.D / M.O அனுப்ப வேண்டிய முகவரி :

ஆன்மீக அன்னதான அறக்கட்டளை

AANMEEKA ANNADHANA CHARITABLE TRUST (Regd.)

68, Nadu Street, (Opp. Sri Kapaleeswarar Temple) Mylapore, Chennai - 600 004.

Tel : 4959302 Fax : (044) 7102308 E - Mail: sivasiva@vsnl.net

ஒரு முறை முருகா என அன்பினால் உருகி சொல்லும் இறைநாமம் ஒன்றே போதுமானது!

நடக்குமென்பார்; நடக்கும்!

மேஷம் : இந்த வாரம் எல்லாக் காரியத்திலும் உங்களுக்கு வெற்றிதான் 'வெற்றி மீது வெற்றி வந்து என்னைச் சேரும்'னு சந்தோஷமா பாடலாம். பொருளாதாரப் பிரச்னை இருக்காது. அலுவலகத்தில் சிலருக்குப் பதவி உயர்வு, இடமாற்றம் கிடைக்கலாம். வேலை விஷயமாகச் சிலர் வெளியூர், வெளிநாடு போக வாய்ப்பிருக்கு. இதுவரை வராம இழுத்தடிச்சிட்டிருந்த பணம் இப்போ வந்து சேரும். குடும்பத்தில் செலவு எவரெஸ்ட் லெவலுக்கு உயரும். பர்ஸைப் பத்திரப்படுத்துங்கள். சிலருக்கு வீடு கட்ட, வாங்க வாய்ப்பு இருக்கு.

ரிஷபம் : உங்களுக்கு இருந்த தடைகள் இடையூறுகள் இந்த வாரம் விலகும். சரளமான பண வசதி கிடைக்கும். அலுவலகத்தில் இருந்து வந்த 'முறைப்பு'கள் இனி இருக்காது. சிலருக்குப் பொறுப்புகள் கூடும். நேர்மைக்கும், திறமைக்குமான பயன் உண்டாகும். சுயமா தொழில் பண்றவங்களுக்கு லாபம் உண்டு. நண்பர்கள் உறவினர்கள் உதவ முன் வருவாங்க. கடன்கள் குறையும். குடும்பத்துல ஒற்றுமை நிலவும். சுபகாரிய நிகழ்ச்சிகள் நடக்க வாய்ப்பு வரும். எதிர்பார்த்திருந்த நல்ல செய்தி இப்போ வந்து கதவைத் தட்டும். எதிர்பாருங்க.

மிதுனம் : எதிர்ப்புகள் மறைந்து இந்த வாரம் அனுகூலமான திருப்பம் வரும். மனசுல மகிழ்ச்சி பொங்கும். பணம் பல வழிகள்ல இருந்து வரும். அலுவலகத்தில் உற்சாகமான சூழலைக் காணலாம். புதிய முயற்சிகள் வெற்றி தரும். வெளிநாடு செல்ல முயற்சிப்பவர்களுக்கு அதுக்கான வாய்ப்பு வரும். கடன் தொல்லை விலகும். இயந்திரம், கெமிக்கல், தோல் பொருட்கள் தொடர்பா பிஸினஸ் பண்றவங்களுக்கு ஆதாயம் உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். பெண்களுக்கு ஆடை, ஆபரணச் சேர்க்கை நிகழும். சிலர் புதுசா வீடு, மனை வாங்க வாய்ப்பிருக்கு.

கடகம் : வாரப் பின் பகுதியில் புதன், சூரியன் விருச்சிகத்தில் என்பதால், தேவைக்கேற்ற பண வசதி ஏற்படும். மனசுல துணிவு, தன்னம்பிக்கை பிறக்கும். அலுவலகப் பணியாளர்கள் முன்னணிக்கு உயருவாங்க. சிக்கலான வேலையையும் சுலபமா முடிச்சு பாராட்டுப் பெறுவீங்க. கொடுக்கல் வாங்கல் சுமுகமா நடக்கும். குடும்பத்துல ஒற்றுமை, அமைதி நிலவும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்குப் புகழ் பாராட்டு உண்டு. சட்டம், காவல் இராணுவம் ஆகிய துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு முன்னேற்றம் உண்டு. பெண்களுக்கு அதிர்ஷ்டமான வாரம்.

சிம்மம் : இந்த வாரம் உற்சாகமான சூழ்நிலை நிலவும். நண்பர்கள் உறவினர்கள் வருகை, தெய்வீக ஈடுபாடுன்னு கலகலன்னு இருக்கப் போறீங்க. வேலையில் சில பிரச்னைகள், எதிர்பாராத சிக்கல் வரும். இருந்தாலும் பெரிசா கவலைப்படத் தேவையில்லை. போட்டி பொறாமை விலகும். தாமதமடைந்த பதவி உயர்வு இடமாற்றம் சிலருக்கு இப்போ கிடைக்கலாம். கணிதம், எழுத்து, பத்திரிகை, உணவுப் பொருட்கள் ஆகிய இனங்கள் ஆதாயம் தரும். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு முன்னேற்றம் உண்டு. பெயர், புகழ் கூடும். குடும்பத்துல கணவன் மனைவி ஒற்றுமை சீரா இருக்கும். சொத்து விவகாரம் கோர்ட்டு, வழக்குகள்ல வெற்றி உண்டு.

கன்னி : உங்க புத்திசாலித்தனம் வெளிப்படும். தெய்வ பலம் கூடியிருக்கிறதால தடைகள், இடையூறுகள் நீங்கும். மனசுல துணிச்சலும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். எல்லாக் காரியமும் திட்டமிட்டபடி நடக்கும். அலுவலகத்தில் மேலதிகாரிங்க பாராட்டு கிடைக்கும். தொழிலதிபர்கள், வியாபாரிகளுக்குப் பொருளாதார நிலையில் மேன்மையுண்டு. பண நடமாட்டம் தாராளமா இருக்கும். கொடுக்கல் வாங்கல் கைகொடுக்கும். குடும்பத்துல மகிழ்ச்சி ததும்பும். திருமணம் போன்ற சுபகாரிய முயற்சிகள் நடக்க வாய்ப்பிருக்கு. வழக்கு விவகாரங்கள்ல உங்களுக்குச் சாதகமான நிலை ஏற்படும்.

துலாம் : உங்களோட பேச்சாற்றல், வெளிப்படும். முகத்துல வசீகரம் ஏற்படும். புதியவர்கள் அறிமுகம் கிடைக்கும். இதன்



படம் : ஸ்ரீஹரி

கிருஷ்ணகுமாரி குமரிஅனந்தனுக்கு (மீனம்) மனசுல தெளிவும் தன்னம்பிக்கையும் பிறக்குமாம்.

மூலமா உங்களுக்குச் சில நன்மைகள் நடக்கலாம். தேவைக்கேற்ற பணவசதி கிடைக்கும். அலுவலகத்தில் சுமுகமான நிலை ஏற்படும். பாராட்டு, புகழ் உண்டு. கொடுக்கல் வாங்கல் வகையில் முன்னேற்றம் உண்டு. கடன் தொல்லைகள் நீங்கும். குடும்பத்தில் சில பிரச்னைகள் வந்து விலகும். பேச்சில் இனிமை அவசியம். வீடு, சொத்து வகைகளில் எச்சரிக்கையா இருங்க. புதிய பிரச்னைகள் வரலாம்.

விருச்சிகம் : இந்த வாரம் எடுத்த காரியத்தில் வெற்றி உண்டு. எதிர்ப்புகள் மறையும். பயணங்களில் அனுகூலம் உண்டு. அலுவலகத்தில் மகிழ்ச்சி நிலவும். சிலருக்குப் புதிய உத்தியோக முயற்சிகள் கைகூடலாம். சட்டம், காவல், ராணுவம் ஆகிய துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு முன்னேற்றம் உண்டு. சிலர் சாதனை படைப்பாங்க. இதனால் புகழ், பாராட்டு உண்டு. சொத்து விவகாரங்கள்ல உங்களுக்குச் சாதகமான திருப்பம் ஏற்படலாம். குடும்பத்தில் புதிய பொருள் சேர்க்கை நிகழும். திருமணம் ஆகாதவங்களுக்கு அதுக்கான வாய்ப்பு வரும். நண்பர்கள் உறவினர்கள் உதவ வருவாங்க.

தனுசு : இந்த வாரம் பணவசதிக்குப் பஞ்சமில்லை. பல வழிகளில் இருந்து வரும். எதிர்ப்புகள் இருக்காது. தடைகள், குறுக்கீடுகள் விலகும். மனசுல தன்னம்பிக்கை பிறக்கும். உயரதிகாரிகள் பாராட்டைப் பெறுவீங்க. வேலை சம்பந்தமாக வெளிநாடு, வெளியூர் போக வாய்ப்பிருக்கு. வியாபாரிகள் புதிய தொழிலில் ஈடுபட வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் குதூகலம் நிறைந்திருக்கும். சிலர் வீடு வாங்க, கட்ட வாய்ப்பிருக்கு. அரசியல்வாதிகளுக்கு முன்னேற்றம் உண்டு. பெண்களுக்கு ஆரோக்கியமான வாரம். பொன், பொருள், ஆடை அணிகலன்கள் வாங்க வாய்ப்பிருக்கு.

மகரம் : இந்த வாரம் பயணத்தால் அனுகூலம் உண்டு. புதியவர்கள் அறிமுகமாவாங்க. அவங்களால நன்மையுண்டு. வேலை விஷயத்தில் நல்ல திருப்பம் உண்டு. கடினமான வேலைகளையும் சிறப்பாச் செய்து முடிப்பீங்க. சிலருக்கு இடமாற்றம், ஊதிய உயர்வு கிடைக்கும். புதிய முயற்சிகள் கைகூடும். தனியார் நிறுவனத்தில் வேலை பார்ப்பவர்களுக்கு முன்னேற்றம் உண்டு. கணிதம், எழுத்து, பத்திரிகை, கெமிக்கல்ஸ், விஞ்ஞானம் ஆகியவை ஆதாயம் கொண்டு வரும். குடும்பத்துல சுபகாரிய நிகழ்ச்சிகள் நடக்க வாய்ப்பிருக்கு. பெண்கள் உற்சாகமான மனநிலையில் இருப்பாங்க.

கும்பம் : இந்த வாரம் தெய்வ பலம் கூடும். எடுத்த காரியத்தைத் தலைகீழா நின்னாவது முடிச்சிடுவீங்க. புனித காரியங்களில் ஈடுபாடு அதிகரிக்கும். எதிர்ப்புகள் விலகி அமைதி நிலவும். உத்தியோகத்தில் பிரச்னைகள் ஏற்பட்டு விலகும். அலுவலகத்தில் ஆரோக்கியமான சூழ்நிலை ஏற்படும். சுயமா தொழில் பண்றவங்களுக்கு அனுகூலம் உண்டு. குடும்பத்தில் இதுவரை இருந்து வந்த விரோதப் போக்கு மறையும். பர்னிச்சர், அழகுசாதனப் பொருட்கள், வாகனம், கெமிக்கல்ஸ் ஆகிய இனங்கள் லாபம் தரும். பெண்களுக்கு உற்சாகமான வாரம்.

மீனம் : மனசுல தெளிவும் தன்னம்பிக்கையும் பிறக்கும். இதனால உற்சாகம் கரைபுரளும். மத்தவங்க பாராட்டும்படி ஏதாவது நல்ல காரியம் பண்ணப் போறீங்க. அலுவலகத்தில் மேலதிகாரிகள் பாராட்டு கிடைக்கும். சினிமா, சங்கீதம் போன்ற கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு முன்னேற்றம் உண்டு. எலக்ட்ரானிக்ஸ், கம்ப்யூட்டர் இனங்கள் ஆதாயம் தரும். குடும்பத்தில் ஒற்றுமை உண்டு. உறவினர்கள், நண்பர்கள் வருகை என்று ஜாலியா இருப்பீங்க.

அக்னி சர்மா பக்கம் நவம்பர் 13 முதல் 19 வரை

பா.ராகவன் மினி தொடர் 3

ஹாய்!

அரக்குக் கலர் மடிசாரும், ஆண்டாள் கொண்டையுமாக, மைதிலி முற்றிலும் மாறுபட்ட வேறொரு தோற்றத்துக்கு மாறியிருந்தாள். முகூர்த்த நேரம். முன்னதாக் மேடைக்கு எடுத்து வரப்பட்ட நாற்காலியில் நரசிம்மன் அமர்ந்திருந்தார். அந்தக் கணத்துக்குக் காத்திருந்த நெருங்கிய உறவு வட்டம் மேடையில் ஏறி, சக்கர வியூகமாகச் சுற்றி வளைத்துக்கொண்டது.

மந்திரங்களால் மேடை நிறைந்திருந்தது. நாகஸ்வர ஒலியில் மண்டபம் சப்த ரூபம் அடைந்தது. சுமார் பதினைந்து வருட இடைவெளிக்குப் பிறகு மைதிலி மீண்டும் சிறுமி



ஆனாள். நாற்காலியில் அமர்ந்திருந்த அப்பாவின் மடி மீது ஏறி உட்கார்ந்தாள். கன்னிகா தானம்.

ஏ கம்பீர புருஷனே, கட்டுமான வித்தகனே. கல்யாணத்துக்குத் தயாராகிவிட்டாலும் இந்த க்ஷணம் வரை இவள் என் குழந்தை. உலகம் தெரியாத இந்தக் குழந்தையை இதோ இனி உன் பொறுப்பில் விடுகிறேன். இவள் வயிறு வாடாமலும், மனம் குலையாமலும், கண்கள் நனையாமலும் பார்த்துக் கொள்ள இனி நீயாச்சு. இனி உன் சகல சுக துக்கங்களிலும் இவளும், இவள் மூலம் நீ பெறப் போகும் வாரிசுகளும் உடன் இருப்பார்கள்.


மஞ்சள் தேங்காயின் மீது மாங்கல்யம் இருந்தது. மாப்பிள்ளையின் கரங்கள் அதனைத் தொட்டுக்கொண்டிருந்தன. ஒரு மாறுதலுக்குச் சற்றுநேரம் வாத்தியார் கதாநாயகனாகி உத்தரவுகள் பிறப்பித்துக் கொண்

டிருந்தார். அவரது ஆள்காட்டி விரல் மேலே உயர்ந்தபோது கெட்டி மேளம் முழங்கத் தொடங்கியது. பறந்து வந்த அட்சதைகளுக்கு அம்மா கண்மூடி நீர் சொரிந்தாள்.

"மைதிலி, நிமிர்ந்து மாப்பிள்ளை முகத்தைப் பார்த்துண்டிருக்கணும். தலையைக் குனிஞ்சுக்காதே!"

திறப்புவிழா அமைச்சருக்கு அழகுப் பெண்கள் உதவுவது போல மாப்பிள்ளை ஏந்தி அளித்த மாங்கல்யத்தை வாங்கி முடிய, பின்னால் அவரது ஒன்று, இரண்டுவிட்ட சகோதரிகள் கூட்டம் தயாராயிருந்தது.

அனு, தன் அப்பாவின் முகத்தை மட்டுமே அப்போது பார்த்துக் கொண்டிருந்தாள். பாவங்களற்ற அவரது



பார்வை, மாப்பிள்ளையின் கரங்கள் மீது இருந்தது. அவரது காசில் வாங்கிய மோதிரம். அவரது காசில் வாங்கிய வாட்ச். அவரது கண்டுபிடிப்பான மைதிலிதான் கைத்தலம் பற்றிக் கொண்டிருந்தாள்.

ஆன மட்டும் உச்சஸ்தாயியில் வாசித்துக் களைத்த நாகஸ்வர வித்வான் சமநிலைக்கு வந்ததும் ஒரு வாய் நீர் அருந்தி, தொடர்ந்தார். அம்மாவுக்கு ஆனந்தம் தாங்கவில்லை. அவள் கண்கள் இன்னும் ஈரமாகவே இருந்தன. ஆளாளுக்குக் கை கொடுத்தார்கள். ஐஸ் போட்ட எலுமிச்சை ஜூஸ் குடித்தார்கள்.

வாத்யார் அரிசிப் பொரி எங்கே என்று கேட்டார். அனு உக்கிராண அறைக்கு ஓடினாள்.

சாக்கு மூட்டைகளாலும் விரத பட்சணங்களாலும் நூறு ஈக்களாலும் நிறைந்த உக்கிராண அறைக்குப் போட்டிருந்த காவல் தெய்வம் எங்கே?

மாயவரத்துக் கமலாப் பாட்டி ஒரு ஓரத்தில் பொட்டலமாகக் கசங்கிப்படுத்து உறங்கிக்

கொண்டிருந்தாள். விரத பட்சணங்கள் என்ன, இனி அவனையே உருட்டி எடுத்து ஒரு ஜோல்னாப் பையில் கொண்டு போனாலும் தெரியாது.

சிரித்துக்கொண்டே அவள் நெல் பொரி தேடினாள்.

"ஒரு பச்சைக் கலர் பிளாஸ்டிக் பையிலே முடிஞ்சு வைச்சிருக்கும்."

அம்மாவின் குரல் ஏழு கடல் தாண்டிக் கேட்டது.

அவள் பச்சைக் கலர் பிளாஸ்டிக் பையைத் தேடிக்கொண்டிருந்தபோது அவன் வந்தான்.

"ஹாய்!"

"ஹாய்."

"இங்க என்ன பண்ணிட்டிருக்கிங்க?"

"வாத்தியாருக்கு அரிசிப் பொரி வேணு மாம்."

"அது வாத்தியாருக்கில்லை. ஹோமத் துக்கு. ஷல் ஐ ஹெல்ப் யூ?"

"தேங்க்ஸ். எங்கியானா பச்சைக்கலர் பிளாஸ்டிக் பை தட்டுப்படறதா பாருங் களேன். பை தவே, மாப்பிள்ளை ஆத்து மனுஷாளை வேலை வாங்கற முதல் மனுஷி ஆகியிருக்கேன். ஸாரி."

"அது பரவாயில்லை."

"ஆச்சர்யமா இருக்கு. நீங்க தனியா வந் திருக்கிங்க. எங்க உங்க தம்பி?"

"ஹால்லதான் இருக்கான்."

"எப்படி விட்டுட்டு வந்தீங்க?"

"கிண்டல் பண்றீங்களே?"

அந்த அரிசிப் பொரிப் பை அவளுக்கு ஆட்டம் காட்டிக்கொண்டிருந்தது. பல மூட்டைகள், பல கூடைகள், துணிப் பைகள், தகரப் பெட்டிகள், பாத்திர அடுக்குகள் என மாறி மாறித் தேடியும் அகப்படுவேனா என்றது.

"இந்த ரூமுக்கு ஒரு ஃபேன் போட மாட் டானோ? உங்களுக்கு எப்படி வேர்த்திருக்கு" என்றான் அவன்.

அவள் ஒரு விநாடி அவனைத் திரும்பிப் பார்த்தாள். இடுப்பில் செருகியிருந்த கர்ச் சீப்பை எடுத்து நெற்றியில் ஒத்திக் கொண்டாள்.

"நல்லா பசிக்கிறது. சாப்ட்டுட்டு படுத்துத் தூங்கணும்."

தனக்கும் அவனுக்குமாக அவள் சொல் லிக் கொண்டாள்.

"எர்லி மார்னிங் முகூர்த்தம்னா அது ஒரு சௌகர்யம். டிபன் போட்டு போரடிக்காம நேரா எட்டரைக்கெல்லாம் சாதம் போட்டுடு வான்" என்றான் அவன்.

"வாஸ்தவம். ஆனா நான் ராத்திரி சாப் பிடவே இல்லை. அதான் கொலைப்பசி. எங்க போய்த் தொலைஞ்சுது அந்த அரிசிப் பொரி?" அவள் விறுவிறுவென வெளியே போனாள்.

"அசடே! அங்கே ஒரு பீரோ இருக்கே. அதைத் திறந்து பார்த்தியோ?" என்றார் அப்பா.

அனு மீண்டும் உக்கிராண அறைக்கு வந்தபோதும் அவன் அங்கேயே நின்றிருந் தான். ஆனால் அதற்குள் ஒரு நடை டைனிங் பகுதிக்குப் போய் வந்திருக்க வேண்டும். அவன் கையில் இரண்டு வடைகள் இருந் தன.

"தயிர்ல போடறதுக்கு இருந்தா. இரண்டு எடுத்துண்டு வந்துட்டேன்" என்று அவளிடம் நீட்டினான்.

"தேங்க் யூ..." என்று வியந்தவள், ஒரு நிமிஷம் என்று பீரோவிலிருந்த பச்சை பிளாஸ்டிக் கவரை அள்ளிக் கொண்டு ஓடி, கொடுத்த வேகத்தில் மீண்டும் அங்கே வந்தாள்.

"தேங்க்ஸ் ஃபர் தி வடைஸ். நிஜமாவே செமை பசி. போய் எடுத்துச் சாப்பிடலாம்னு தோணலை பார்த்தீங்களா?"

அவன், அவளையே பார்த்துக் கொண் டிருந்தான். அவள் கண்களை. அவள் மூக்கை. அவள் உதடுகளை. அவள் கால் களை. விரல்களை.

"ம்?" என்றாள் அனு.

"நத்திங். நீங்க எந்த காலேஜ்?"

"ம்ஹூம். கரெஸ்பாண்டன்ஸ்ல எம்.ஏ. பப்ளிக் அட்மினிஸ்ட்ரேஷன் பண்றேன்."

"எதுக்கு?"

"எதுக்குன்னா... கம்மா இருக்க முடியாது இல்லியா? எங்கப்பா, வேலைக்கெல்லாம் அனுப்பற உத்தேசத்துல இல்லை."


"பின்னே?"

"வேறென்ன? அதான்!" என்று

"நஷ்டமானதால பணத்தத் திருப் பிக் கொடுனு புரொடியூசரை மிரட்டு றாரே... யார் அவர்? விநியோகஸ் தரா?"

"ம்ஹூம்... திருட்டு விசிடி வெளி யிட்டவர்!"

- அம்பை தேவா



அங்கிருந்து தூரத்தில் தெரிந்த கும்பலான மணமேடையைச் சுட்டிக்காட்டினாள்.

நண்பர்களும் உறவினர்களும் பரிசுப் பொட்டலங்களுடன் வரிசையாக மேடைக்கு வந்துகொண்டிருந்தார்கள். ஏகப்பட்ட மாலைகளால் கசங்கிய கூறைப் புடைவையும், ஹோமப் புகையில் கலங்கிய விழிகளும், திருஷ்டி மை உருகிய கன்னமுமாக ஒரு விநாடி மைதிலி தென்பட்டாள்.

“அம்மா தேடுவா. அப்புறம் பார்த்துக்கலாம்!” என்று அவள் அவசரமாக ஓடினாள்.

கூட்டத்தில் அந்த இரண்டு நிமிட ஜூனியர் தென்படுகிறானா என்று பார்த்தாள். ம்ஹூம். அண்ணனைத் தேடிக் கொண்டு எங்காவது அலைந்து கொண்டிருப்பான் என்று நினைத்துக் கொண்டாள்.

பந்தி ஆரம்பித்து ஒரு மணி நேரம் கழிந்ததும் மண்டபம் காலியாகத் தொடங்கியது. சாத்துக்குடி பழக் கவர்களும் தேங்காய் - வெற்றிலை பாக்குக் கவர்களும், எவர்சில்வர் தட்டு சேர்த்த தேங்காய் கவர்களும், தனித்தனியாக வைக்கப்பட்டிருந்தன. உறவின் நெருக்கத்தை நாலணா கவர் சொல்லும்.

சிவந்த வாய்களுடன் ஆண்கள் ஸ்கூட்டர் உதைத்து ஆபீஸ் போனார்கள். ரிஸப்ஷனுக்கு வந்து விடுவதாகச் சொல்லி, பெண்களும் காணாமல் போனார்கள்.

அலுப்பில் களைத்து விழுந்த மிச்சமிருந்த மனிதர்களை, காப்பி வாளியுடன் ராமாஞ்சு பிற்பகல் எழுப்பினார். நலங்குக்கு நாழியாச்சே?

புதிய, எளிய சைனா சில்க்கில் மைதிலி விளையாடலுக்குத் தயாரானாள். கழுத்தில் துலங்கிய மஞ்சள் சரட்டில், காலையே அவள் மாமி ஆகியிருந்தாள். திருமணம் ஆனதும் பெண்களுக்குக் கூடுதலாக ஏதோ ஒன்று சேர்ந்துவிடுகிறது. பார்வையில், புன்னகையில், குரலில், தொனியில், நடப்பதில், திரும்புவதில் - எல்லாவற்றிலும் ஏதோ ஒன்று. நடவடிக்கைகளில் இயல்பாக மிளிரும் லலிதம் - ஆ, எத்தனை கோடி மாற்றம் வைத்தாய் இறைவா!

மேடையில் பட்டுப் பாய் விரித்து மைதிலியும் மாப்பிள்ளையும் எதிரெதிரே அமர்ந்து கொண்டார்கள். மஞ்சள் தடவிய தேங்காய்கள் உருளத் தயாராயிருந்தன. தூக்கம் கலைந்த உறவுக்காரப் பெண்கள் சூழ்ந்து நின்றதும் வாத்தியார் கோஷ்டி ராகத்துடன் பாடத் தொடங்கியது. வாரணம் - ஆயிரம்- சூழவ - லஞ்செய்து.

இருவர் உருட்டிய தேங்காய்களும் இடையில் முட்டிக் கொண்டதற்கெல்லாம் சிரித்தார்கள். அவரவர் தலையில் சுட்ட அப்பளம் உடைத்தார்கள். சந்தனம் பூசி, கண்ணாடியைத் திருப்பிக் காட்டி விளையாடினார்கள். இருபத்தைந்து வயதுக்கு இதெல்லாம் தேவைதான். கட்டுமான இஞ்சினியர் மாறாத புன்னகையில் புத்தர் போல் இருந்தார். சொன்னதற்கெல்லாம் உடன்பட்டார். தன்பிரத்தியேகக் கோபங்களையெல்லாம் பத்தாயிரம் பேர் பணியாற்றும் சைட்டில் வைத்துக் கொள்வார் போலிருக்கிறது.

“மைதிலி, ஒரு பாட்டுப் பாடுடி.”

திருப்பத்தூர் அத்தை எடுத்துக் கொடுத்தாள். மிரண்டு போன மைதிலியை கமலாப் பாட்டி சமாதானப்படுத்தி, “ஏன், இன்னிக்கு ஒரு நாள் மாப்பிள்ளை பாடலாமே?” என்றதும் ஏழெட்டு விடலைகள் கோரஸாகக் கைதட்டி ஆரவாரம் செய்தார்கள்.

அஞ்சா நெஞ்சன் மாப்பிள்ளை, ‘உன் சமையல் அறையில் நான் உப்பா? சர்க்கரையா?’ என்று எடுத்ததும் உற்சாகம் கூரையைத் தொட்டது.

“குடுத்து வெச்சவடி மைதிலி. என்னமா பாடறார் மாப்பிள்ளை? கத்துக்கோ, அவர் கிட்டயாவது. ஷங்கர் மகாதேவனாட்டம் குரல்!”

புகழ்ச்சியில் வஞ்சனை காட்டாத மாயவரத்துப் பாட்டியை மாப்பிள்ளைக்குப் பிடித்துப் போனது.

“அனு பாடுவளே. எங்க அவ? பாடுடி.” என்று கட்டளை இட்டாள் பாட்டி.

சட்டென்று எழுந்த அமைதியில் அவள் தன் பார்வையைச் சுழற்றி மீட்டாள். அவன் இருக்கிறான். முடியாது என்று சொல்லிவிடலாமா என்று யோசிப்பதற்குள் முதல் வரி குதித்துவிட்டது. கற்பூரம் நாறுமோ, கமலப்பூ நாறுமோ, திருப்பவளச் செவ்வாய்தான்

நித்தித்திருக்குமோ!

"க்ரேட்!" என்றார் மாப்பிள்ளை. அத்தைகள் இழுத்து முத்தம் கொடுத்தார்கள். சம வயதுப் பெண்கள் கை குலுக்கினார்கள். மாயவரத்துப் பாட்டி, எங்கண்ணு என்று கன்னத்தைத் தேய்த்து திருஷ்டி கழித்தாள். பின் வரிசையில் பலர் இன்னும் கைதட்டிக் கொண்டிருந்தார்கள்.

ரிஸெப்ஷன் மேக் அப்புக்கு மைதிலியை ப்யூட்டி பார்லருக்கு அழைத்துச் செல்வதாயிருந்தது. நாலு மணிக்குக் கார் வந்துவிடும் என்று சீக்கிரமே விளையாடல்களை முடித்துக் கொண்டார்கள்.

அனு, இன்னொரு காப்பிக்காக டைனிங்ஹாலுக்குப் போனபோது சட்டென்று அவன் எதிர்ப்பட்டான். இரண்டு நிமிட ஜூனியர்.

முகத்தில் உதித்து மறைந்த மத்தாப்பில், அவள் மேலும் ஒளிர்ந்து மீண்டாள். இப்படியொரு தருணம் இன்றைக்கே நேரும் என அவள் மனத்துக்குள் ஒரு குருவி சொல்லிக் கொண்டிருந்தது. காலை இவனது அண்ணன் தனியாகச் சந்தித்து ஆப்புத்திரன் கை அமுதசுரபியென உளுந்து வடை அளித்துப் பசிப்பிணி நீக்கினானே, அப்போதிலிருந்தே.

பேச்சு ஒரு சாக்கு. சிறு உதவிகள் இன்னொரு சாக்கு. விசாரிப்புகள் முதல் படி. அக்கறை அடுத்தபடி. ஆ, எனக்கா தெரியாது? என்று அவள் மனக்குரங்கு குதித்துக் கைகொட்டிச் சிரித்தது.

அதற்குத்தானே இதெல்லாமும் வேண்டியிருக்கிறது?

"ஹாய்..."

"ம்?" என்றாள் அவள். கொப்பளித்த சிரிப்பிலும் அதுதான் தலை நீட்டிக் கொண்டிருந்தது. மனசு.

"நான் ஒண்ணு சொல்லவா? இவ்ளோ நல்லா பாடறீங்க... சுதா மாதிரி, ஜெயஸ்ரீ மாதிரி வர சான்ஸ் இருக்கு - ட்ரை பண்ணா. நீங்க என்னடான்னா, கல்யாணம் பண்ணிண்டு செட்டில் ஆகப் போறதா என் அண்ணாகிட்ட சொன்னீங்களாம்?"

"என் விருப்பம்னா சொன்னேன்? எங்கப்பா அதைத்தான் பண்ணி வெப்பார்னு சொன்னேன்..."

"ரொம்ப நல்லா பாடினீங்க" என்று மீண்டும் அவன் சொன்னான்.

ஆனால், அவன் சொல்ல விரும்புவதெல்லாம் அதுதானா, அது மட்டும்தானா என்று அவள் கேட்க விரும்பினாள்.

மாறாக ஒரு புன்னகையையும் நன்றியையும் மட்டும் அளித்துவிட்டு ஓடிப் போனாள்.

(தொடரும்)

சஸ்பென்ஸ் சிவம்



மும்முனைக் காதல் எல்லாம் அவுட் ஆஃப் ஃபேஷனாகிவிட, 'அன்பே சிவம்' படத்தில் நான்கு முனை லவ்ஸ்!

கமலஹாசன், கிரணைக் காதலிக்க, கிரணோ, மாதவனைக் காதலிக்கிறார் - மாதவன் கிரணைக் காதலிக்க.. கமலஹாசனைக் காதலிப்பவர் யார் தெரியுமா? உமா ரியாஸ்கான்! சில, பல காரணங்களால் உமா ரியாஸ்கான் நடிக்கும் விஷயமே, படு சஸ்பென்ஸாக வைக்கப்படுகிறது!

தெருக்கூத்துக் கலைஞராக நடிக்கும் கமல், ஒரு சில காட்சிகளில் ஆஸிட்பட்ட முகம் போன்ற தோற்றத்தோடு நடிக்கிறாராம். அதற்காக தினமும் மூன்று மணி நேரம் 'ஸ்பெஷல் மேக்கப்' போடப்படுகிறது. இந்த விஷயத்தையும் கமுக்கமாக வைத்திருக்கிறார்கள்.

- டாலி


பலே பாக்கியம்!



''எங்க போகப் போற பாக்கியம், பட்டுப் புடைவையும் நகையுமா இருக்கே...?''

''பெப்சி உங்கள் சாய்ஸ்க்கு போன் பண்ணி உமாகிட்டே பேசப் போறேன்.''

- சக்தி சுரேஷ்




''பொண்ணு வீட்டுக்காரங்க முன் ஜாக்கிரதை பேர்வழிகள்தான்!''

''அப்படியா?''

''கல்யாணப் பத்திரிகைல 'செருப்பு திருடர்கள் ஜாக்கிரதை'ன்னு அடிச்சுருக்காங்களே!''

- அம்பை தேவா



''நான் லட்சம் ரூபாய் லஞ்சமா வாங்கினேன்? இல்லவே இல்லை... வெள்ள நிவாரண நிதிக்கு நன்கொடைதான் பெற்றேன்...''

''இப்ப ஏதுய்யா வெள்ளம்?''

''வெள்ளம் ஒரு நாள் வராமலா போகும். அப்ப விநியோகிச்சுடுவேன்!''

- எம்.ஆர். மூர்த்தி

''நான் அஜீத் ஃபேன்ப்பா, நீ...?''

''நான் மாதவன் ஏ.ஸி.ப்பா!''

- சக்தி சுரேஷ்





''கவிதைப் போட்டிக்கு நம்ம தலைவர் நடுவரா இருந்து எப்படி பாரபட்சமில்லாம நடந்துக்கிட்டிருக்கிறார் பார்த்தீங்களா?''

''அதுக்காக மைக் டெஸ்ட்டிங் செய்தவருக்கு முதல் பரிசு கொடுக்கணுமா, என்ன!''

- நாமக்கல் பாலு

சொல்ல மறந்த கதை

மக்கள் வாழ்க்கையைச் சொல்லும் சினிமா இல்லையென வருந்துகிறவர்களே! எல்லோரும் என்னிடம் வாருங்கள்'' என்று மீண்டும் அழைத்திருக்கிறார் தங்கர்பச்சான்.

ஓடும் ரயிலின் கூரையில் நின்றபடி, பத்து குண்டர்களைத் தனி ஆளாகத் தாக்கும் கதாநாயகன் இல்லை. காட்சிக்கொரு கலர்ஃபுல் ஆடையும், ஷாட்டுக்கொரு உதட்டுச் சாயமுமாய் உலாவரும் கதாநாயகி இல்லை. விரட்டி விரட்டி வேட்டையாடும் ஃபார்முலா வில்லன் இல்லை.

ஆனால் – நம் அருகாமையில், பார்த்த, பார்த்துக் கொண்டிருக்கும் கீழ்த்தட்டு நடுத்தரக் குடும்பத்தில் மூத்த பிள்ளையாகப் பிறந்து, வறுமையிலும் பட்டம் படித்து, வேலைக்காகக் காத்திருக்கும் ஒரு சராசரி இளைஞன் தான் நாயகன். பெற்றோரின் வரட்டு கௌரவம், கணவனின் தன்மானம் இரண்டுக்குமிடையில் தனது உணர்ச்சிகளைப் புதைத்துக் கொண்டு குமுறும் நடுத்தரக் குடும்பத்து பெண்தான் நாயகி.

திருமணத்திற்குப் பிறகான புதிய உறவுகளால் உருவாகும் புதிய சிக்கல்களும், விரிசல்களும்தான் வில்லன்.

வறுத்தெடுக்கும் ஏழ்மையை வெல்ல விவசாயக் கூலியாக மாறும் கதையின் நாயகன் சிவதாணுவை, தலையில் கரும்புக் கட்டுக்களோடு இயல்பாய் அறிமுகப்படுத்துகிறார் இயக்குனர். தேங்காய் துருவிக் கொண்டிருக்கிற நாயகியை நமக்கு அறிமுகப்படுத்துவதிலும் கூட இயல்பு.

மூத்தமகன் மூலம் குடும்பத்திற்கே வழி பிறக்கும் என்று பெற்றோர்கள் நம்பிக் கொண்டிருக்கும் போது, மணமாகி வீட்டோடு மாப்பிள்ளையாகும் சிவதாணுவின் உலகம், வேறு விதமாய் மாறிப் போவதாக நகரும் திரைக்கதையின் போக்கு, நடுத்தரக் குடும்பத்து வாழ்க்கையோடு பொருத்திப்பார்த்துக் கொள்ளும் நிஜத்தன்மையோடும், நாஞ்சில் நாடனின் மூலக்கதைக்குப் பெருமை சேர்க்கும் விதமாகவும் இருக்கிறது.

நாம் மரியாதை தர நினைக்கும் தமிழ் மரபுகளை உள்ளடக்கியும், பாத்திரங்களின் மனநிலையை ஒட்டியும், போலி பிம்பங்களற்று காட்சிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

சிவதாணுவை அவனது மாமனார் அடித்து வெளியேற்றும் காட்சி, படத்தின் இதயமாய் இருந்து ரசிகர்கள் இதயத்தையும் கனமாக்கி விடுகிறது. தன்னைத் தேடி வரும் தம்பியிடம்



தனது புதிய காலணிகளை ரகசியமாய் விட்டு விட்டு, அவனது தேய்ந்த ரப்பர் காலணிகளை சிவதாணு அணிந்து கொள்கிறபோது, படம் பார்க்கிற நமது பாதங்கள் பட்டென்று சிலிர்த்து விடுகின்றன.

இன்றைய சூழ்நிலையில் திருமணமாகிற ஒவ்வொரு இளைஞனுக்கும் தேவைப்படும் மன வலிமை, பொருளாதாரப் பிரச்னைகள், கணவன், மனைவி உறவை உயிர்ப்போடு வைத் திருத்தல் என்று எத்தனை சவால்கள்?!... இந்த சவாலான பயணத்தில் சிவதாணுவாகத் தோன்றி அந்தப் பாத்திரத்திற்கு உயிர் கொடுத் திருக்கிறார் சேரன். இயக்கு னருக்குரிய மேதாவித் தனங்களை மூட்டை கட்டி வைத்து விட்டு தேர்ந்த மிகையில் லாத நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார்.



சிவதாணுவின் மாமனாராகத் தோன்றும் பிரமிட் நடராஜன் மீது வெறுப்பும், கோபமும் பீறிட்டு வருவது, அந்த பாத்திரப் படைப்புக்குக் கிடைத்த வெற்றி.

பார்வதி பாத்திரத்தில் இதயத்தைப் பிழி யும் ரதிக்கு முதல் முறையாக நடிக்க நல்ல வாய்ப்பு.

படத்தில் பாடல்கள் எதுவும் பாடாமல் சிவதாணுவின் நண்பராகத் தோன்றி கதையை யொட்டியே கலகலப்பூட்டும் புஷ்பவனம் குப்பு சாமிக்கு முதல் படம் மாதிரியே தெரிய வில்லை.

பல காட்சிகளை மௌனம் கொண்டே நிரப்பியிருக்கும் இசைஞானி, மீண்டும் பின் னணி இசையில் தாமொரு பேரரசு என நிரூபித்திருக்கிறார்.


இயல்பான ஒளி அளவுகளைத் தேக்கி, உயிர்ப்போடும், துடிப்போடும் இறுதி வரை பயணிக்கிறது தங்கர்பச்சானின் கேமரா.

அழகியில் சண்முகமும், தனலெட்சுமி யும் நெருங்கி வந்ததைப் போலவே, இப்போது சிவதாணுவும், பார்வதியும் நமக்கிடையே வாழும் மனிதர்களாக நெருங்கி வருகிறார்கள்.

சமகால வாழ்க்கையைப் பிரதி பலிக்கும் இலக்கியம், திரை வடிவம் பெறும்போது இது சாத்தியம் என்று நிரூபித்திருக்கிறார் இயக்குனர்.

— விஷ்வல்தாசன்

- ○ ஃபெயில்
- ○ ஜஸ்ட் பாஸ்
- ○ ஆவரெஜ்
- ○ அபவ் ஆவரெஜ்
- ● டிஸ்டிங்ஷன்



ஒன்றும் பண்ணவில்லை

நிலை தந்த தாரகனான பரமாத்மாதான் நியமிக்கும் இறைவனாகவும் இருக்கிறான். இதுதான் அவனுடைய சர்வேச்வரத்வம்.

இதைப் பண்ணு, பண்ணாதே என்று நம்மை நியமிப்பவன் அவன்தான்.

ஸ்ரீரங்கத்திலே எம்பார் காலக்ஷேப கோஷ்டி என்பது பிரசித்தம்.

எம்பார் என்கிற ஆசார்யர், வேதாந்த விஷயங்களைக் காலக்ஷேபம் செய்வார். பல மகான்கள் அவரிடத்திலே உட்கார்ந்து காலக்ஷேபம் கேட்பார்கள். ஸ்ரீரங்கத்திலே வீதியிலேயே உபன்யாஸம் நடக்கும். நாலு பக்கம் – நாலா வீதியிலும் நடக்கும்.

அந்த ஊரிலே ஒருத்தர், காலக்ஷேபத்துக்கே வரமாட்டார். வீட்டு வாசல் திண்ணையிலேயே உட்கார்ந்திருப்பார்.

காலக்ஷேபம் கேட்க வருகிறவர்கள் எல்லோரும், "இப்படி வீணாக உட்கார்ந்து 'காலக்ஷேபம்' பண்ணிக் கொண்டிருக்கிறீரே?" என்று கேட்பார்கள்!

அங்கே பார்த்தால் சத் விஷயங்கள் காலக்ஷேபம். இங்கே இப்படி காலக்ஷேபம்!

காலக்ஷேபம் என்றால் காலத்தைக் கழித்தல் என்று அர்த்தம். நல்ல விஷயத்திலே காலத்தைக் கழிக்கலாமே, வெறுமே உட்கார்ந்து வீணாகக் காலத்தைக் கழிக்கிறானே, என்று அர்த்தம் அவர்கள் கேட்ட கேள்விக்கு.

வருகிறவர்களெல்லாம் நித்யம் இந்தக் கேள்வியைக் கேட்பார்கள். அவரானால் அப்படியே உட்கார்ந்திருப்பார்; நகரவே மாட்டார்.

இப்படியே ஒரு வருட காலம் ஆகிவிட்டது. ஒரு வருட காலம் வராமலே இருந்தவர், திடீரென்று ஒரு நாள் கிளம்பி காலக்ஷேபம் கேட்க வந்துவிட்டார். வந்து உட்கார்ந்து கொண்டு அன்றைய தினம் விஷயத்தைக் கேட்டார். கேட்டால், அவருக்குக் கண்ணிலேயிருந்து தாரை தாரையாக ஜலம் வருகிறது.

மறுநாள் என்ன ஆயிற்று...? அவர்களெல்லாம் வருவதற்கு முன்பாகவே இவர் வந்து உட்கார்ந்து விட்டார்.

இப்படியே மூன்று மாதம் வந்து காலக்ஷேபம் கேட்டார் அவர். பரம ஞானியாகவும் ஆகிவிட்டார்.

ஒரு நாள் எம்பார் எல்லோரையும் பார்த்து ஒரு கேள்வி கேட்டார்:

"இவர் இப்படி வந்து காலக்ஷேபத்திலே ஈடுபட்டுக் கேட்கிறார் என்றால் இதற்கு ஆசார்யனான நான் காரணம் என்று நினைப்பவர்களெல்லாம் கை தூக்குங்களேன்..." என்றார்.

பல பேர் உடனே கை தூக்கினார்கள்.

"நான் காரணமில்லை; வந்திருக்கும் இவரேதான் காரணம் என்று நினைப்பவரெல்லாம் கை தூக்குங்கள்..." என்றார்.

இன்னும் பல பேர் கை தூக்கிவிட்டார்கள்.


"அழைத்தவர்களான நீங்கள் காரணம் என்று நினைப்பவர்களெல்லாம் கை தூக்குங்கள்..." என்றார். கை தூக்காமல் மீதி இருந்த எல்லோருமே இப்போது தூக்கிவிட்டார்கள்.

இனிமேல் எதிரில் கைதூக்க ஒருத்தர்கூட பாக்கி இல்லை.

அப்போது எம்பார் தாம் கை தூக்கிவிட்டுச் சொன்னார்: "நீங்கள் சொன்னது எதுவுமே காரணம் இல்லை..."

"பின்னே யார் காரணம்?"

"இத்தனை நாளாக நீங்கள் கூப்பிட்டீர்கள், அவர் வரவில்லை. அன்றைய தினம் முதன்முதலாக வந்தாரே, அந்த புத்தியை





அபூர்வ 287!

கேரள மாநிலம் பரப்பனங்காடியை சேர்ந்த வயலின் வித்வான் பத்மநாபன், தினமும் சாதகம் செய்யும் வயலினை ஏலம் போட்டால் இன்று பல கோடி ரூபாய் கிடைக்கும். 1726ம் ஆண்டின் மிகவும் அபூர்வ

யார் கொடுத்தது...? அந்த பரமாத்மாதான் கொடுத்தான். இவர் இப்படி மாறுவதற்குக் காரணம் நீங்களோ, நானோ, அவரோ இல்லை... பரமாத்மா தான் காரணம்" என்றார்.

பகவானால்தான் எல்லாமே நடக்கிறது. அவன்தான் நமது செயலுக்கான புத்தியைக் கொடுக்கிறான். அவனே நம் புத்திக்குள் பிரவேசித்து, நம்மை அவனிடத்திலே ஈடுபடச் செய்கிறான்.

எம்பாரிடம் காலக்ஷேபம் கேட்கப்போன ஒருத்தருக்கு மட்டும்தானா பண்ணினான் பகவான்...! அத்தனை பேருக்கும் அல்லவா சமானமாகப் பண்ணுகிறான் அவன். அவரவர் புண்ய_பாபத்துக்கு ஏற்ப, அந்தந்த காலத்திலே, பரமாத்மா பலனைக் கொடுக்கிறான்.

ஒருத்தர் நல்லதையே பண்ணிக் கொண்டிருக்கிறார் என்றால் அவரிடத்திலே பகவத் அனுக்கிரஹம் பரிபூரணமாய் இருக்கிறது என்று அர்த்தம். ஒருத்தர் ஏகமாகக் கெடுதல் பண்ணுகிறார் என்றால், அங்கே பகவத் அனுக்கிரஹம் ஏற்படவில்லை என்று நாம் பிரத்யக்ஷமாகத் தெரிந்து கொள்ளலாம்.

ஆகையினாலே, எம்பெருமானுடைய கடாக்ஷமான சர்வேச்வரத்வம் என்பது எல்லோரையும் கட்டளையிடுதல் என்கிற குணம்.

மற்றுமொரு குணம் எது என்றால்; வியாபகதேத்வ சேதனத்வம்.

எங்கும் பரவியிருப்பதனாலேயும், உயர்ந்த அறிவையுடையவனாய் அவன் இருப்பதனாலேயும், அவன் பரமாத்மா ஆகிறான்.

இரண்டு நலன்களையும் சேர்த்துச் சொல்லுகிறார் இங்கே. உபநிஷத் வாக்யமே இப்படித்தான் சொல்லுகிறது. இந்த இரண்டையும் சேர்த்துச் சொல்லுவதிலேயுள்ள தாத்பர்யத்தை நாம் உணரவேண்டும்.

சேதனத்வம் என்று எடுத்துக் கொண்டால், நாம் எல்லோருமே சேதனர்கள். நமக்கும் அறிவு இருக்கிறது. சேதனத்வம் பகவானுக்கு லட்சணம் என்று சொன்னால், ஜீவாத்மாக்களும் சேதனர்கள் ஆனதனாலே பகவானுக்கும் ஜீவாத்மாவுக்கும் வித்யாசம் இல்லாமல் போய்விடுமா...?

வித்யாசம் இல்லை என்று சொன்னால் அவ்யாப்தி என்கிற தோஷம் உண்டாகிவிடும்.

ஒரு லட்சணம் சொன்னால் அதிலே மூன்று தோஷங்கள் இல்லாமல் சொல்ல வேண்டும். தூஷணத்ரயம் என்று சொல்வதுண்டு இந்த மூன்று தோஷங்களை.

மூன்று தோஷங்கள் என்னென்ன...?

அவ்யாப்தி என்று ஒரு தோஷம்
அதிவ்யாப்தி என்று ஒரு தோஷம்
அஸம்பவம் என்று ஒரு தோஷம்.

– இந்த மூன்று தோஷங்களும் இல்லாது லட்சணம் சொல்ல வேண்டும்.

'பசுக்களெல்லாம் வெண்மையாயிருக்கும்' என்று அடியேன் சொல்கிறேன்... எல்லோர் மனத்திலேயும் இந்த விஷயம் பட்டுப் போய் விடுகிறது. தீர்மானம் பண்ணிக் கொண்டு வெளியே போகிறார்கள். போனால், வீதியைத் தாண்டுவதற்குள் கறுப்பாக ஒரு பசு வருகிறது! இன்னும் கொஞ்சம் தூரம் போனால் சிவப்பாக ஒரு பசு! அப்புறம் கறுப்பும் – வெளுப்பும் கலந்து ஒன்று... நானா வர்ணத்திலும் பசுக்கள் வருகின்றன!

பசுக்களெல்லாம் வெண்மையாயிருக்கும் என்று சொன்னாரே! விதவிதமாய்ப் பசுக்கள் வருகிறதே? என்று கேள்வி. வெண்மை நிறமானது, பசு ஜாதியிலே பூரணமாய்ப் பரவியிருக்கவில்லை – இது அவ்யாப்தி என்கிற தோஷத்துடன் கூடிய லட்சணம்.

"பசுவுக்குக் கொம்புடைமை லட்சணம்" என்று அடியேன் சொன்னால், பசுக்களுக்கு மட்டுமா இருக்கிறது கொம்பு? வெளியிலே போனால், பசுக்களைக் காட்டிலும் வேறான எருமைகளுக்கும் கொம்பு இருப்பதைப் பார்க்கிறோம். இவ்வாறு வேறு இனத்துக்கும் உடைய லட்சணத்தைச் சொல்லும்போது அதிவ்யாப்தி என்கிற தோஷம் ஏற்பட்டுப் போகிறது.

பசுவுக்கு ஒரு குளம்புதான் உண்டு என்று லட்சணம் சொன்னால், ஒரு குளம்பு உடைய பசுவை எங்கேயிருந்து கொண்டு வருவது! – இதனால், இப்படிச் சொல்வதால் அசம்பவம் என்ற தோஷம் ஏற்படுகிறது.

மானதும் பழைமையானதுமான ஒரு வயலினை லண்டனில் ஏலம் போடப் போவதாகவும் அதன் மதிப்பு பல கோடி ரூபாய் என்றும் ஒரு மலையாள பத்திரிகையில் செய்தி வெளிவந்தது. அப்போதுதான் எவ்வளவு விலை மதிப்புள்ள வயலின் தம் கைவசம் உள்ளது என்பது பத்மனாபனுக்கே தெரிய வந்தது. காரணம் இந்த வயலின் உருவாக்கப்பட்ட ஆண்டு 1715.

அதில் "MADE IN GERMANY 1715" என்று பொறிக் கப்பட்டுள்ளது.

— திருவனந்தபுரம் எஸ்.எஸ். மணி

ஆகவே, பகவானின் குணம் சேதனத்வம் என்று வெறுமே சொல்லிவிட்டால், அது ஜீவன்களிடத்திலேயும் ஜீவாத்மாக்களிடத்தி லேயும் இருப்பதனாலே, அதிலே தோஷம் சம்பவிக்கும். அதனால்தான் அவனை நாம் புரிந்து கொள்வதற்காக வியாபகதேத்வதி சேதனத்வம் என்று லட்சணம் சொல்லப் பட்டிருக்கிறது.

வியாபகதேத்வதி என்றால் எங்கும் பரவி யிருத்தல். எங்கும் பரவியிருக்கும் குண மானது சேதனர்களுக்கு – ஜீவாத்மாவுக்குக் கிடையாது. **அவன்** ஒருவனிடத்திலேதான் அது உண்டு.

சர்வ வியாபியான அவன் சாதாரண பிரக்ருதி என்று எடுத்துக் கொள்ள முடி யுமா...?

பிரக்ருதி என்பது எங்கும் வியாபித் திருக்கிறது. ஆனால் ப்ரக்ருதியே சேதனத்வம் ஆகிவிடாது; அதற்கு அறிவு கிடையாது.

அதனால் பரமாத்மா பிரக்ருதியும் ஆக மாட்டான்.

அப்படியானால் பரமாத்மா, பிரக்ருதி யைக் காட்டிலும் வேறானவன்; ஜீவாத் மாவைக் காட்டிலும் வேறானவன்.

இதனால்தான் அவனுடைய வியாபகத் தன்மையோடு அவனுடைய சேதனத்துவத் தையும் சேர்த்துச் சொல்லியிருக்கிறது. ஜீவாத்மா, அசேதனமான பிரக்ருதி ஆகிய அனைத்தையும் தனக்குச் சரீரமாகக் கொண்டு, அதற்கு அந்தராத்மாவாக பகவான் இருக்கிறான்.

அதனால்தான் ராமாயணத்திலே அத் தனை தேவதைகளும் ஸ்ரீ ராமனைப் பார்த்து 'ஜகத்சர்வம் சரீரந்தே' என்றனர்.

புருஷன் ஜகத் என்கிறது வேதம்.

அப்படிப்பட்ட ஏற்றமுடைய புருஷன் அவன்; ஜகத் அவன்; ஜகத் அந்தர்யாமி அவன்.

இதற்கும் மேலே 'ஸர்வ பலப்ரதத்வம்' என்கிற குணம் விசேஷமாகச் சொல்லப் படுகிறது.

விசேஷமான பலன்களை நமக்குக் கொடுக்கிறான்.

என்னென்ன கேட்கிறோமோ அவனை, அனைத்தையும் கொடுக்கிறான் பரமாத்மா.

'குழந்தை இல்லை; குழந்தை வேண்டும்' என்று கேட்பவருக்குக் குழந்தையைக் கொடுக்கிறான்.

ஐச்வர்யம் வேண்டும் என்று கேட்டால், அதைக் கொடுக்கிறான்.

பெரிய அரசாளும் தன்மை – 'ராஷ்ட்ர காமாய' என்று உலகத்தையே பரிபாலனம் பண்ண வேண்டும் என்ற ஆசையினாலே கேட்டால் அதையும் கொடுக்கிறான்.

இப்படி காம்யேஷ்டிகள் எத்தனையோ!

நாம் என்ன கோர வேண்டும் என்பதை சமகம் என்கிற வேத பாகம் நமக்குக் காட்டித் தருகிறது. அந்த சமகத்தைப் பார்த்தால்தான் என்னென்ன கேட்கலாம் என்பதே நமக்குத் தெரியவரும். கேட்கிறதுக்குச் சொல்லிக் கொடுக்கிறது அந்த மந்த்ரம்.

நாமாகக் கேட்டால், நமக்கு ஒன்றும் கேட்கத் தெரியாது.

உலகத்துக்குப் பர்வதம் வேண்டும் என்று கேட்கிறது அந்த சமகம்! அப்படியென்றால் என்ன அர்த்தம்..?... பர்வதங்களை அழிக் காதே என்று அர்த்தம்.

பர்வதங்களை அழித்தால் சீதோஷ்ண ஸ்திதி மாறிப்போகும். சகாலத்திலே மழை யெல்லாம் பெய்யாது.

மரங்கள் வேண்டும் என்றும் கேட்கிறது மந்திரம். மரங்களை அழிக்காதே என்று அர்த்தம் என்பது உடனே புரியும்.

இங்கே கேட்கப்படும் வஸ்துக்கள் மூலம் அவையெல்லாம் உலகிலே இருக்க வேண் டும்; அழியக் கூடாது என்பது காட்டித் தரப் படுகிறது. அவை இருந்தால் தான் மனுஷ்ய ஜாதியும் மற்றைய பிராணிகளும் சௌக்ய மாய் இருக்கும்.

இந்த மாதிரி பல கோரிக்கைகள்...

பகவான் என்ன பண்ணுகிறான்? எதைக் கேட்கிறோமோ அதை மட்டும் கொடுக் கிறான்.

அப்படியானால் நாம் என்ன பண்ண வேண்டும்?

அது இது என்று பிரத்யேகமாய்த் தனித் துக் கேட்காமல், 'நீயே வேண்டும்' என்று பகவானிடத்திலே கேட்டுவிட்டால், அவன் தன்னையே நமக்குத் தருகிறான்.

(வளரும்)

அது போதும்!



சத்யானந்தன்

சிக்னலில்
வண்டியைத் துடைத்து
காசு கேள்.

டீ சுமந்து கூலி பெறு
கிளாஸ் உடைந்தால்
சூடு வாங்கு.

இரும்பு பிளாஸ்டிக்
ரப்பர் குப்பைகளை
கோணியில் பொறுக்கு

பட்டாசு தீப்பெட்டி
சுரங்க கட்டட
வேலைகள் செய்.

விலைக்குப் போன
சகோதரியை மறந்து தலைவர்கள்
போஸ்டர்கள் ஒட்டு.

ஓடும் பஸ்ஸில்
உயிரைப் பணயம் வைத்து
சுண்டல் தண்ணீர் பாக்கெட்
விற்றுப் பிழை.

கடையின் காற்றில்லா
மூலையில்
சாலையோரக் குப்பை நடுவில்
சாக்கடைத் தீவுக் குடிசையுள்ளே
ஒடுங்கி உறங்கு.

பசியின் அமில அரிப்பு குதறி
இற்று ஊசலாடும் உன்
சமூக நூலிழை
பேண்.

மீசை முளைத்து
தசை பிடிக்கும்போது
பொறுப்புள்ள
குடிமகனாய் வந்து நில்.
அது போதும்.

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Pvt. Ltd.
Editorial Team : C. Egnath Raj, Anuradha Sekhar, C.Jesudoss. Layouts : S.Stephen, P.R. Rajan.
Editor : Seetha Ravi.
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623;
Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 330/-; Half Yearly Subscription : India : Rs. 165/-
Overseas (Air Mail) Annual : 62 U.S. Dollars, Srilanka Rs.2000/-

வீட்டின் அழகு கதவில் தெரியும் !

Now Flat Buyers insist on

MAYURAM

TIMBER DOORS



because


DOOR
is not a
product of
mere Carpentry.
Kiln Seasoning
and
Pressure
Treatment
of Timber
is a
pre-requisite

Contact:

MAYURAM TIMBER & GENERAL TRADING CORPN.

H.O.: 83, G.S.T.Road, Chennai - 45. ☎:236 8297/238 1281.

Showroom: 13, Rameswaram Road, T.Nagar, Chennai - 600 017. ☎: 434 5207



Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered